OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2-SEP 1913
MADRAS.

# சென்னை வியாபாரி

என்கிற

# தென்னிந்தியா வர்த்தக ஜர்னல்

புஸ்தகம் 1. Vol. 1. | பிரமாதீசஸ்ரு ஆவணிமீ 8உ 1913ஞு ஆகஸ்ட்மீ 23உ | ஸஞ்சிகை 4. No. 4.

## "சென்னை வியாபாரி."

(மாதப் பிரசுரம்.)

"சென்னை வியாபாரிக்கு கடிதம் எழுதுகிறவர்களும் மணிஆர்டர் அனுப்புகிறவர்களும் சென்னபட்டணம் நார்த்பீச் இந்தியன் சேம்பர் பில்டிங்கிலிருக்கும் மானேஜருக்கு எழுதவேண்டும்.

விளம்பரங்கள் பயிரங்கப்படுத்துவதற்காக பிளாக்குகளும் அது சம்பந்தமான கடிதங்களும் மானேஜருக்கே அனுப்பப்படவேண்டும்.

விளம்பரவிகிதம்:—முழுப்பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு ரூ 5; பாதி பக்கத்திற்கு ரூ 3; கால் பக்கத்திற்கு ரூ 2-0-0. ஒப்பந்த விகிதங்களுக்கு பிரத்தியேகமாக எழுதிக் கொள்ளலாம்.

### சென்னை வியாபாரியின் சந்தாவிபரம்.

இந்தியா—சிலோன் பர்மாமுதலிய

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாட்டு தபால்சார்ஜ் உள்பட | ரூ. | 5 | 0 | 0 |
| சிங்கப்பூர் பினங் ,, | ரூ. | 7 | 8 | 0 |
| தனிப்பிரதி 1க்கு ,, | ரூ. | 0 | 6 | 0 |

வியாபார சம்பந்தமாகவும் கைத்தொழில்சம்பந்தமாகவுமுள்ள வியாசங்கள் அங்கீகரிக்கப்பட்டால், வியாசம் எழுதியவர்கள் வெகுமானிக்கப்படுவார்கள்.

## Southern India Chamber of Commerce.

தென்னிந்தியா வர்த்தக ஆலோசனை சபை.

### பிரேஸிடெண்ட்.

ராவ்பகதூர் பி. தியாகராய செட்டி பி. ஏ.

### வைஸ் பிரசிடெண்டுகள்.

1. கான்பகதூர் M. A. கூடேஸ்பாட்சா சாகேப்.
2. திவான்பகதூர் கோவிந்ததாஸ் சதுர்புஜதாஸ்.

### கௌரவ காரியதரிசிகள்.

1. மிஸ்டர் P. N. முத்துசாமி நாயுடு பி. ஏ.
2. மிஸ்டர் மவுலானு அப்துஸ் சுப்ஹான் சாகேப்.

பிரசிடெண்டையும் வைஸ் பிரசிடெண்டுகளையும் தவிர கமிட்டியில் 24 மெம்பர்களிருக்கிறார்கள். இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை மீட்டிங்கு நடத்தப்படுகிறது.

சந்தா.—வருஷத்திற்கு ரூ 24; உள்ளூரில் வசிப்பவர்கள் ½ வருஷத்திற்கு ஒரு வாய்தாவாக முன்பணமாகச் செலுத்தவேண்டும். வெளியூர் மெம்பர்களுக்கு ரூ 10. இருவகையாருக்கும் பிரவேசக்கட்டணம் ரூ 12.

இந்த வர்த்தக ஆலோசனைசபை கம்பெனி ஆக்ட்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

Trade Marks என்கிற வியாபார சாமான் அடையாளம், ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டுமானுல் மெம்பராக இருப்பவர்களுக்கு ரூ. 3ம். மெம்பராயில்லாதவர்களுக்கு ரூ. 8ம் ஏற்பட்டிருக்கிறது. வர்த்தக அடையாளங்கள் அடங்கிய ரிஜிஸ்டரை பார்க்க விரும்புகிறவர்கள் ரூபாய் ஒன்று செலுத்த வேண்டும்.

பார்வையிடுவதும் பஞ்சாயத்தும்:—தகராருக்குட்பட்ட சமான்களைப் பார்வையிட்டு மத்தியஸ்தம் செய்யவும் சேம்பர் உடன்படுகிறது.

ஆபீஸ்:— சென்னை நார்த்பீச் இந்தியன் சேம்பர் பில்டிங்ஸ்.

# State of Trade of the Madras Market.

## சென்னைபட்டணம் மார்க்கட்டின் வியாபார நிலைமை.

கடந்த ஏப்பிரல் மீ முதலாக அன்னிய நாட்டுச் சரக்குகளின் இறக்குமதி கனத்த மும்மரமாய் நடந்து வருகின்றது. சென்ற வருஷத்துடன் சீர்தூக்கிப் பார்த்தால் ஏப்ரல் மாதத்தில் மட்டிலும் 38·76 லக்ஷ ரூபாய் பெறுமானமுள்ளசரக்கு சென்னை ரேவுத்துறையில் அதிகப்படியாக இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றது. மே மாதத்தில் 39·63 லக்ஷம் அதிகப்படி இறக்குமதி. ஜூன் மீ க் கணக்கு இப்போதுதான் பயிரங்கப் படுத்தப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்தாலோ ரூ 23·28 லக்ஷம் மதிப்புள்ள சரக்கு அதிகப்படியாய் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே கடந்த மூன்று மாதங்களுக்குள் முந்திய வருடத்திய அதே மூன்று மாதங்களில் எவ்வளவு இறக்குமதி செய்யப்பட்டனவோ அதைவிட ஒரு கோடி ரூபாய்க்கு மேலான மதிப்புடைய சரக்கு இறக்குமதி செய்யப்பட் டிருக்கிறதென்று அறிகிறோம். இவ்வாறு அதிகப்படியாய் இறக்குமதி செய்யப்பட்டிருக்கும் சரக்குகளுக்குள் பீஸ் கூட்ஸ் என்கிற சீமை ஜவுளி பிரதமமாய் நிற்கின்றது. அதாவது மூன்றில் ஒரு பாகமாயிருக்கின்றது. இதற்கடுத்தபடி (ரெயில்வே சாமான்களைத்தவிர) உலோகங்களும், அதற்கடுத்தபடி நூலும் இறக்குமதியா யிருக்கின்றன.

நிற்க, ஏற்றுமதிக் கணக்கை ஆராய்வோம்.! ஏப்ரல் மாதத்தில் இந்திய தானிய ஏற்றுமதி ரூ 31·63 லக்ஷம் குறைந்து போயிருக்கின்றது. அடுத்த இரண்டு மாதங்களில் ஏற்றுமதி உபாயமாய் அதிகரித்திருந்த போதிலும் மேலே எடுத்து காண்பிக்கப்பட்ட தொகையை ஈடுபடுத்த முடியவில்லை. பஞ்சு ஏற்றுமதியும் ஏப்ரல் மாதத்தில் ரூ 9.62 லக்ஷம் குறைந்து போயிருக்கின்றது. தோலும் ரூ 14·61 லக்ஷம் குறைந்திருக்கின்றது. விதைகள் ஏற்றுமதியும் ரூ. 4·96 லக்ஷம் குறைந்திருக்கின்றது. மே மாதத்தில் பஞ்சு ஏற்றுமதி ரூ.10·73 லக்ஷம்குறைந்து போயிருக்கிறது. ஜூன் மாதத்தில் இன்னொரு 5·76 லக்ஷ ரூபாய் குறைந்து போயிருக்கிறது. இதற்கு காரணம் என்னவென்றால் உள் நாட்டு ஆலைக்காரர்கள் விலை தற்காலம் சரசமாயிருப்பதை முன்னிட்டு பெரும்பாலான பஞ்சை வாங்கிவிட்டார்கள். தோல் ஏற்றுமதி ஏப்பிரலில் குறைந்திருந்த போதிலும் மே, ஜூன் மாதங்களில் உபாயமாய் ஏறியிருக்கின்றது. விதைகள் ஏற்றுமதியும் ஏப்பிரல் மாதத்தில் குறைந்து போன போதிலும் அடுத்த இரண்டு மாதங்களில் பரபர என்று ஏறிவிட்டது. நாம் மேல் எடுத்துக் கூறிய இவ்வளவு கணக்கும் சென்னைபட்டணத்தின் துறைமுகத்தில் செய்யப்பட்ட ஏற்றுமதி இறக்குமதியே யொழிய அவற்றில் இவ்விராஜதானியிலுள்ள மற்ற துறை முகங்களின் கணக்கு சேரவில்லை. சென்னை ராஜதானியிலுள்ள எல்லா துறைமுகங்களின் ஏற்றுமதி இறக்குமதியின் கணக்கைப் பார்க்கின் கடந்த ஏப்பிரல் மே, ஜூன் மாதங்களில் 4·18 கோடி மதிப்புள்ள சரக்குகள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. 1911 -ம் வருஷம் அதே மூன்று மாதங்களில் 2·97 கோடிரூபாய்க்கும் 1912 ல் அதே மூன்றுமாதங்களில் 3·04 கோடி ரூபாய்க்கும் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. ஏற்றுமதி கணக்கு எப்படி இருக்கிறதென்றால் 1911 ல் அதே மூன்று மாதங்களில் 6·67 கோடி ரூபாய்க்கும் 1912 ல் 7·74 கோடி ரூபாய்க்கும் நிகழ் வருஷத்தின் அம்மூன்று மாதங்களில் 6·49 கோடி ரூபாய்க்கும் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. சென்னைபட்டணத்தைத் தவிர மற்ற

துறைமுகங்களில் முந்திய வருஷங்களைவிட கடந்த ஏப்பிரல் மாதத்தில் ஏற்றுமதி 24 லக்ஷத்திற்கும் மே மாதத்தில் 12 லக்ஷத்திற்கும் குறைந்துபோய் விட்டது. சென்ற ஏப்பிரல் மே மாதங்களில் கீழ்ப்பட்ட துறைமுகங்களிலிருந்து 46•77 லக்ஷ ரூபாய் பஞ்சு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறபோது சென்ற வருஷத்திய அதே இரண்டு மாதங்களில் 68 லக்ஷரூபாய்க்கு ஏற்றுமதிசெய்திருக்கிறோம். வெளியூர் துறைமுகங்களில் விதை ஏற்றுமதியும் குறைந்துபோயிருப்பதாயும் ஆனால் பருப்பு முதலிய தானியங்களின் ஏற்றுமதி உபாயமாய் விருத்தி அடைந்திருந்த தென்றும் நாம் அறிகிறோம்.

---

## Condensed Milk.

## டப்பிப் பால்.

:(*):

"கண்டென்ஸ்டு மில்க்" என்று சொல்லப்படும் டப்பிப்பால் இத்தேசத்தில் எவ்வளவு செலவாகிறதென்பதை அறிந்துகொள்ள அநேகர்விரும்பக் கூடுமாகையால் நாம் இவ்விடத்தில் எடுத்தெழுதுவோம். இந்த சரக்குகள் ஏற்றுமதி ஒரு எல்லைக்குள் அடங்காமல் ஏறிக்கொண்டே போகின்றது. 5 வருடங்களுக்கு முந்தி 23 லக்ஷரூபாய் மதிப்புள்ள சரக்கு இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கையில் சென்ற வருடத்தில் 36 லக்ஷத்திற்கு இறக்குமதி செய்யப் பட்டிருக்கிறது. இந்தராஜதானியில் அதே காலத்தில் 100க்கு 50 வீதம் இறக்குமதி அதிகரித்திருக்கிறது. 1904-05ல் நாம் $1\frac{1}{2}$லக்ஷ ரூபாய் பொருமானமுள்ள டப்பிப் பால் இறக்குமதி செய்யப்பட்டிருக்கும்போது 1911-12 ல் ஏறக்குறைய 4 லக்ஷத்திற்கு இறக்குமதி செய்திருக்கிறோம். கொழுப்புடைய ஆகாரங்களின் இறக்குமதி டப்பிப்பாலின் இறக்கு மதியைப் போலவே அதிகரித் திருக்கின்றது. கொழுப்புப் பற்றின ஆகாரசாமான்கள் இத்தேசத்தில் இயற்கைப் பாலுக்குபதிலாக உபயோகப் படுத்தப்பட்டு வருகின்றன வென்பதில் தடையில்லை.

இயற்கைப்பால் தாராளமாய் கிடைக்கக் கூடாமலிருக்கிறபடியாலும் அதற்குத் தகுந்த படி விலையும் ஏறியிருப்பதால் பிரஸ்தாபடப்பிப் பாலின் வியாபாரம் சுபிக்ஷமாயிருக்கிறது. சுயமான இயற்கைப்பால்கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. இந்த கஷ்டம் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டுபோகின்றது. 5 வருடங்களுக்கு முந்தி மூன்று அணாவுக்கு சென்னை பட்டணம் படியால் ஒரு படிப்பால் கிடைத்துக் கொண்டிருந்தது போக, இப்போது ஒரு ரூபாய்க்கு 3 படி அகப்படுவது துர்லபமாயிருக்கிறது. சென்னையில்தான் இப்படியிருக்கிறதென்றாலோ வெளிஜில்லாக்களில் தேவையானபால் கிடைப்பது இதைவிடக் கஷ்டமாயிருக்கிறது. ஆகையால் ஜனங்கள் சுயப்பாலுக்குப் பதிலாக இறக்குமதி செய்யப்பட்ட டப்பிப்பாலை விரும்பிவாங்கி வருகிறார்கள்; சாதாரண டப்பிப் பாலில் மூன்றில் ஒரு பாகம் கரும்புச் சர்க்கரை கலக்கப்பட்டிருக்கிறது. டப்பிப் பாலை தயார் செய்யும் ஆயுத தளவாடங்கள் மிகவும் உயர்ந்த விலையுள்ளனவு மாயிருப்பதுமன்றி சிக்கலுடைய தாகவு மிருக்கின்றன. டப்பிப் பால் இத்தேசத்திலேயே செய்யப்படுகிற யோஜனையே யில்லை. ஏன் என்றால் ஆயுத தளவாடங்கள் விலை உயர்ந்தன வாயிருப்பதுடன் சிக்கலுடையனவாகவு மிருக்கின்றன. மேலும் டப்பிப்பாலைத் தயார் செய்ய ஏதேஷ்டமான மிக்கசுயமான இயற்கைபால் தேவையாயிருக்கிறது.

இப்பேர்ப்பட்ட பால் இவ்விடத்தில் கிடைக்காதபடியால் மற்ற தேசங்களில் தயார் செய்யப்பட்டு இவ்விடத்தில் இறக்குமதி செய்யப்படும் டப்பிப் பாலை வாங்கி உபயோகப் படுத்த கட்டாயப்படுத்தப்பட்டவர்களா யிருக்கிறோம். அமேரிக் காவிலிருக்கும் யுனைட்டெட் ஸ்டேட்சில மட்டிலும் டப்பிப்பால் தயார் செய்யும் 300 யந்திரங்களிருக்கின்றன. ஒவ்வொரு யந்திரமும் பிரதி தினமும் 10 ஆயிரம் பவுண்டு இடையுள்ள பால் தயார் செய்யுமாம். தினம் ஒன்றுக்கு 10 ஆயிரம் பவுண்டு இடையுள்ள பாலை தயார் செய்யக்கூடிய ஒரு சிறிய யந்திரம் தளவாட சமான்கள் உள்பட 7500 டாலருக்கு அகப்படும். நம் ராஜதானியில் இறக்குமதி செய்யப்படும் டப்பிப்பால் எல்லாம் யுனைட்டெட் கிங்கடம் என்று சொல்லப்படும் இங்கிலாண்டு, வேல்ஸ், ஸ்காட்டுலாண்டு தேசங்களில் செய்யப்படுகின்றன.

---

## The P and O Mail Contract.

## பி அண்டு ஒ கம்பெனியாரின் தபால் ஒப்பந்தம்.

பி அண்டு ஒ என்கிற ஸ்டீமர் கம்பெனியார் இந்தியத் தபால்களை ஐரோப்பாவிற்கு கொண்டு போகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இந்த கம்பெனியாரும் மாகனிமைதங்கிய நம் சக்ரவர்த்தியாரின் போஸ்ட்மாஸ்டர் ஜெனரலும் 1908-ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் செய்துகொண்ட ஒப்பந்தம் 1915ம் வருடம் ஜனவரி மாதத்துடன் முடிவடைகிறது. "இருதரத்தார்களில் யாரேனும் ஒப்பந்தத்தைரத்து செய்யவேண்டியதாயிருந்தால் மேலே சொல்லப்பட்ட முடிவு காலத்திற்கு 24 மாதங்களுக்கு முந்தியே நோட்டீஸ் கொடுக்கவேண்டும் இல்லையேல் ஒப்பந்தம் எப்போதும்போல் ஊர்ச்சிதத்தி லிருக்க வேண்டுமென்பது" ஒப்பந்தத்தின் ஷரத்துகளில் ஒன்று. இந்த நிபந்தனையின்படி இப்போது அந்த ஒப்பந்தத்தை ரத்துசெய்ய நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதாக தெரிகிறது. ஏன் என்றால் புதிய ஒப்பந்தத்தில் என்ன என்ன மாறுதல்கள் செய்யப்படலாமென்று அபிப்பிராயம் அறிவிக்கும்படியாக இத்தேச முழுவதிலுமுள்ள வர்த்தகக் கூட்டத்தார்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். கம்பெனியார் அடியிற்கண்ட விடங்களுக்கு தபால் கொண்டுபோகிறார்கள்.

1. பிரின்டிசிக்கும் பம்பாய்க்கும்
2. பிரின்டிசிக்கும் ஷாங்காய்க்கும்
3. பிரின்டிசிக்கும் அடிலேய்டுக்கும்
4. உடன்படிக்கையின்படி எந்த எந்த துறைமுகங்களிலிருந்து ஸ்டீமர் புறப்படுகிறதோ அல்லது பிடிக்கிறதோ அந்தத் துறைமுகங்கள்.

பம்பாய்க்கும் பிரின்டிசிக்கும் சாதாரண காலத்தில் 270 மணிநேர ஓட்டம், மழைகாலத்தில் 306 மணிநேர ஓட்டம். பிரிண்டிசிக்கும் ஷாங்காய்க்கும் 678 மணிநேர ஓட்டம். திரும்பும் பிரயாணம் 694 மணிநேரம். ஆனால் மழைகாலத்தில் 36 முதல் 48 மணிநேரம் வரையில் தாமதிக்கலாம்; பிரிண்டிசிக்கும் அடிலேய்டுக்கும் 638 மணி திரும்பப் பிரயாணம் 650 மணி; ஆனால் மழை காலத்தில் 36 மணிநேரம் தாமதிக்கலாம்.—ஆகிய இந்த ஷரத்துகள் எல்லாம் தற்போது ஊர்ச்சிதத்திலிருக்கும் உடன்படிக்

கையில் காணப்பட்டிருக்கிறது. ஷ உடன் படிக்கையிலுள்ள மற்ற ஷரத்துக்களை எல்லாம் இவ்விடத்தில் எடுத்தெழுதுவது அனுவசியம் என்று எண்ணுகின்றோம். கம்பெனிக்காரர்கள் இவ்வாறு தபால் கொண்டுபோவதற்காக வருஷம் ஒன்றுக்கு கவர்ன்மெண்டாரிட மிருந்து 3,05,000 பவுன் வாங்கிக் கொண்டுவருகிறார்கள். ஒப்பந்தத்தை கம்பெனிக்காரர்கள் மீறி நடக்காமலிருக்கும் பொருட்டும் ஒப்பந்தத்தை நிறைவேற்றாமல் போய்விட்டாலும் பல விதமான அபராத நிபந்தனைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

இத்தேசத்திலுள்ள வர்த்தகக்கூட்டத்தார்கள் இதுவரையில் அனுப்பியிருக்கும் அபிப்பிராயங்களைக்கொண்டு இப்போது வாரம் ஒருமுறை ஐரோப்பாத் தபால் வந்துகொண்டிருப்பதை வாரம் இருமுறையாக வந்து கொண்டிருக்கவேண்டும் என்று அபிப்பிராயப் படுகிறதாய் நாம்அறிகிறோம். இந்த பிரரேபணை அல்லது அபிப்பிராயம் இங்கிலாண்டு முதலிய தேசங்களுக்கும் இந்தியாவிற்கும் போக்குவரவு செய்யப்படும் எண்ணிக்கையற்ற கடிதங்களாலும் போஸ்ட்கார்டுகளாலும் ஆதரிக்கப்படுகிறது: சென்ற 10 வருஷ காலத்திற்குள் கடிதங்கள், 100க்கு 200 ஆகவும் நியூஸ்பேப்பர்களும் புஸ்தகங்களும் 100க்கு 70 ஆகவும், பார்சல்கள் 100க்கு 130 ஆகவும்அதிகரித்திருக்கிறது. இந்தக்கணக்கில் இந்தியாவிற்கும்,ஐரோப்பாவிலுள்ள அனேக தேசங்களுக்கும் போக்குவரத்தாகும் கடிதங்கள் முதலானவை சேர்க்கப்படவில்லை. அவைகளையும் சேர்த்தால் இன்னும் அதிகமாகும். ஆகையால் ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும் தபால் ஸ்டீமர் இரண்டு முறை போக்குவரத்து செய்யப்பட வேண்டுமென்று வர்த்தக கூட்டத்தார்கள் பிரரேபணை செய்திருப்பதில் ஆச்சரியம் யாதொன்றுமில்லை. மேலும் இந்தியாவில் ஐரோப்பிய அவுஸ்களிலும் சரி, இந்திய அவுஸ்களிலும் சரி சீமைத் தபால் தினம் மாளாத வேலையும் உபத்திரவங்களும் உண்டாகின்றன. சீமைத்தபால் வாரத்திற்கு இருமுறை போக்குவரத்து செய்யப்பட்டுவந்தால் இவ்வளவு சங்கட மிருக்க மாட்டாது. கூடியவரையில் சௌகரியமாகவும் சாவகாசமாகவும் செய்யப்படும். இப்படி ஏற்பாடு செய்வதால் இரு தேசத்திற்குமுள்ள வியாபாரம் இன்னும் பலப்பட்டு விருத்தியாகி வரும். கிரேட்பிரிட்டனையும் இங்கிலாண்டையும் ஒன்றுடன் ஒன்று இன்னும் நெருக்கமாக பிணைக்கும்படியான எந்த எத்தனமும் ஆதரிக்கப்படவேண்டும். ஆகையால் இம்மாகாணத்திலுள்ள வர்த்தக ஆலோசனை சபைகளும் மேலே எடுத்துக் கூறப்பட்ட யோஜனையை ஆதரித்து அபிப்பிராயம் எழுதி அனுப்புவார்கள் என்று நம்புகின்றோம்.

---

## Atank Nigrah Pharmacy.
## ஆதங்க நிக்ரக ஔஷத சாலை.

ஆதங்க நிக்ரக ஔஷத சாலைக்குப் பிரதான ஸ்தலம் ஜாம்நகர். சென்னப்பட்டணம் பம்பாய் கல்கத்தா இன்னும் சிலவிடங்களில் கிளைகளிருக்கின்றன. வைத்திய சாஸ்திரி மணிஷங்கர் கோவிந்தஜீ அவர்கள் இந்த ஔஷதசாலைக்குச் சொந்தக்காரர் என்று நாம் எடுத்தெழுத வேண்டிய தனுவசியம். ஏன்எனில் இந்த சிறந்த ஔஷதசாலையையும் அதன் கீர்த்திபெற்று விளங்காநின்ற சொந்தக்காரரையும் தெறியாதவர்கள்மிகச் சிலரே! இந்த ஔஷதசாலையிலிருந்து நம்முடைய பார்வைக்கு சில நேர்த்தியான உருவுப்படங்கள் அடங்கியுள்ள Album என்று சொல்லும்படியான சிறிய புத்தகம் கிடைக்கப் பெற்றனம். அவற்றில் 1. மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தியாரையும் சக்கிரவர்த்தினியாரை

யும் அடக்கிக் கொண்டிருக்கும் ஒரு உருவப் படமும், 2. இந்த ஔஷதசாலைக்கு ஆதிமுதல் போஷகராகவிருந்துவரும் மேன்மையை தங்கிய மகாராஜ ரன்ஜிட்சிங்ஜி அவர்களுடையதும் 3. பிரஸ்தாப ஔஷதசாலையின் சொந்தக்காரருடைய ஆகிய உருவப்படங்கள் அடங்கியிருப்பதுடன் இந்த சிறந்த ஔஷத சாலையின் விபர விர்த்தியாம்சங்கள், உருவப்படங்கள் மூலியமாக காண்பிக்கப்பட்டிருக்கின்றன. படங்கள் மூலியமாக எட்குவாட்டர் ஆபீஸ் சிப்பந்திகளையும், ஜெனரல் மானேஜர் ஆபிசையும், மருந்துகளை பாக்செய்யும் டிபார்ட்மெண்டையும், மருந்துகள் தயார் செய்யப்படுமிடத்தையும், ஆபிஸ் கட்டடம் முதலானவைகளையும் பார்த்தால் அரிய முயற்சி என்று நன்கு விளங்குகின்றது.

———(:*:)———

## Madras Market Reports.

## சென்னபட்டணம் மார்க்கட் ரிப்போர்ட்டுகள்.

### Piecegoods.

### சீமை ஜவுளி.

10–8–1913.

இங்கும் அங்குமாக உபாய வியாபாரம் நடந்து வருகிறது. ரும்ஜான் தேவைக்காக உபாய விசாரணை இப்போதுதான் உற்பத்தியாய்க்கொண்டு வருகின்றது.

### Grey Shirtings.

### கோராகாடா.

நடுத்தர ரகங்களிலும் மட்ட ரகங்களிலும் உபாய பேரம் நடந்து வருகின்றது. உயர்ந்த ரகங்களுக்கு விசாரணை இன்னும் மந்தமாயிருக்கிறது. $16 \times 12$—$40/41 \times 37 \times 37\frac{1}{2}$ கெஜம் ஒரு அணா ஏறியிருக்கிறது.

### Grey Jaconets.

### கோரா ஜாக்நட்.

யாதொரு மாறுதலு மில்லை.

### Grey Mulls.

### கோரா மல்.

உபாயமான ஏறின விலையில் அற்ப விற்பனைகள் நடந்தேறி யிருக்கின்றன; கையிருப்பு கொஞ்சம் குறைந்துபோ யிருக்கிறது. சாக்குகள் எதிர்பார்க்கப் படுகிறது. எல்லா ரகங்களின் விலை அணா இரண்டு ஏறியிருக்கிறது.

### Grey Dhoties.

### கோரா தோவத்திகள்.

மாறுத லில்லை.

### White Mulls.

### சலவை மல்லுகள்.

பெரும்பாலும் ரிப்போர்ட் செய்யும்படியான யாதொரு மாறுதலு மில்லை. 1702—ரூ. 6–14-க்கும், 1703— ரூ. 7–9–0-க்கும் விற்பனையாகி வருகின்றன. இந்த ரகத்தின் கையிருப்பு பெரும்பாலும் கறைந்து போய்விட்டது. உயர்ந்த விலைப்படி சில ஆர்டர்கள் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நடுத்தர நாசுக் ரகங்கள் விலை இறங்கிக்கொண்டு வருகின்றன, விற்பனை உபாயம்.

### Thick Mulls.

### கனத்த மல்கள்.

கனத்த மல்கள், வெள்ளை ஷர்டிங்கள், வெள்ளைக் காம்பிரிக், வெள்ளை நான்சுக்—இவைகளில் யாதொரு மாறுதலு முண்டாக வில்லை.

### Prints.

### சீட்டிகள்.

கையிருப்பு ரொம்ப குறைந்து போய்விட்டது. சாக்கு எதிர்பார்க்கப்படுகிறது.

SEP 1913 MADRAS
162037

## Sarries.
## சேலைகள்.

அதே மந்தமான நிலைமையிலிருக்கிறது.

## Twist and Yarn.
## நூல்.

உள்ளூர் மார்க்கட் இறங்கிக்கொண்டே போகிறது. வியாபாரி ரொம்ப சரக்குகளை சேர்த்து கையிருப்பாக வைத்துக்கொண்டு வருகிறார்கள். இப்படிச் செய்வதின் கருத்து என்னவென்றால் விலை ஏறும் என்பது உத்தேசம். கனத்த சரக்குவந்திருக்கிறது. தினம் தினம் விலை இறங்கிக்கொண்டு வருகிறது. சீமை மார்க்கட் உறுதியா யிருக்கிறது. இவ்விடமிருந்து இண்டன்ட் அனுப்பப்பட வில்லை.

## Hides and Skins.
## தோல்.

15–8–13.

மானு:—சீமையில் இருப்பு அதிகமா யிருப்பதால் ஆங்கு விலை ஏறுவதற்கு யேதுவில்லை. இவ்விடத்தில் உப்பு, வரைமானு விலை யேற்றமா யிருப்பதுடன், பதனிடுவதற்கு உப கருவிகளாகிய பட்டை, கடுக்கா, எண்ணெய் இவைகளின் விலைகள் அதிக யேற்றமா யிருப்பதால் ஷாப்புக்காரர் களுக்கு அதிக நஷ்டம். அதின் நிமித்தம் நனைவு மெதுவு படித்து விட்டார்கள். பெங்களூர் மானுவாத்து மிகவும் கம்மி, ஐதராபாக்கம் வடகரை மானு வழக்கம் போலிருந்தும். ஏறக்குறைய எல்லா ஆபீசுக்காரர்களும் வாங்குவதால், மில் விலைக்கு 1-பை முதல் இரண்டுபை வரைக்கும் யேற்றமாய் விற்பனையாய்க்கொண்டு வருகிறது.

### தற்கால விலை.

| | | ரூ. | அ. | ப. | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஐதராபாக்கம் | ... | 0 | 14 | 7 | to | 0 | 15 | 0 |
| ஒசப்பேட்டை | ... | 0 | 12 | 6 | to | 0 | 13 | 7 |
| A. 1. கோஸ்ட் | ... | 0 | 13 | 8 | to | 0 | 13 | 10 |
| மட்டுவாடா (கொழுப்பு) பூசல் ... | ... | 0 | 13 | 7 | to | 0 | 13 | 8 |
| do சுத்தம் | ... | 0 | [illegible] | [illegible] | to | 0 | 13 | 3 |
| பெங்களூர் (பிரைம்) | ... | 0 | 13 | 4 | to | 0 | 13 | 6 |
| do (ஆர்டினரி) | ... | 0 | 12 | 11 | to | 0 | 13 | 1 |
| do (இமிடேஷன்) | | 0 | 12 | 3 | to | 0 | 12 | 8 |
| இராணிப் பேட்டை | ... | 0 | 13 | 0 | to | 0 | 13 | 1 |
| பெல்காம் ... | ... | 0 | 13 | 8 | to | 0 | 13 | 9 |
| பல்லாவரம் ... | ... | 0 | 11 | 9 | to | 0 | 12 | 0 |
| பல்லாரி ... | ... | 0 | 14 | 11 | | | | |

யேனு:—வாத்து கம்மியானபடியால் முன் விலைக்கு 2-பை யேற்றம்.

| | | ரூ. | அ. | ப. | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|---|
| பெங்களூர் ... | ... | 0 | 9 | 11 | to | 0 | 10 | 0 |
| கோஸ்ட் ... | ... | 0 | 10 | 0 | to | 0 | 10 | 1 |
| ஐதராபாக்கம் | ... | 0 | 9 | 0 | to | 0 | 9 | 3 |
| வெளியூர் ... | ... | 0 | 8 | 9 | to | 0 | 9 | 6 |

வேனு:—வரத்து கம்மி, சீமை எலத்தின் பிறகு விலை அணு 2-யேற்றமா யிருக்கிறது.

| | | ரூ. | அ. | ப. | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|---|
| Fair ஐதராபாக்கம் | ... | 1 | 10 | 6 | to | 1 | 10 | |
| Ordy do ... | ... | 1 | 7 | 9 | to | 1 | 8 | 6 |
| கோஸ்ட் | ... | 1 | 7 | 3 | to | 1 | 7 | 9 |
| Fair உள்ளூர் | ... | | | | | 2 | 2 | 0 |

சேனு:—வருத்து சாதாரணம் ஏறக்குறைய எல்லாரும் வாங்குவதாலும் சீமை எலத்தில் கொஞ்சிற்று யேற்றமாய் விற்ற படியாலும் இங்கு அணு 1-முதல் 2-வரைக்கும் ஏறிவிட்டது.

| | | ரூ. | அ. | ப. | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|---|
| சேலம், மங்கலம், உடுமல் பேட்டை, தாராபுறம் | லேசு— | 2 | 0 | 0 | to | 2 | 2 | 0 |
| சேலம் ... | ... | | | | | 1 | 11 | 6 |
| வெளியூர் Best | ... | 1 | 10 | 6 | to | 1 | 12 | 0 |
| வாணியம்பாடி | ... | | | | | 1 | 15 | 9 |
| கொச்சி | ... | | | | | 1 | 13 | 8 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| குத்திரைச்சூர் | ... | | | | 1 | 7 | 6 |
| பெல்காம் | ... | | | | 1 | 3 | 9 |
| உள்ளூர்—Fair | ... | 1 | 8 | 0 to | 1 | 9 | 0 |
| do—Common | ... | 1 | 6 | 6 to | 1 | 7 | 6 |

**உப்பு வேறு சேறு:**—நடந்தேறின சீமை ஏலத்தில் கிஞ்சித்து சுறுசுறுப்பு காட்டின படியால் இவ்விடத்து ஷாப்புக்காரர்கள் மறு ஏலத்தில் விலை அதிகமாய் ஏறிவிடக்கூடுமென்று விசேஷ "கரீது" செய்கிறபடியால் இவ்விடத்தில் ரூ 10-முதல் ரூ. 15 வரைக்கும் விலை ஏறிவிட்டது.

## Cotton.

### பஞ்சு.

4-8-1913

பஞ்சு மார்க்கட் மந்தமாயிருக்கிறது. உள்ளூர் மில் சுவான்தாரர்களால் உபாய பேரம் நடத்தப்பட்டிருக்கிறது. உள்ளூர் அவுஸ்காரர்கள் ஏற்றுமதி காரியங்களுக்காக வெளியூர்களில் வாங்கிக்கொண்டு வருகிறார்கள். விலைகள் தினம் இறங்கிக்கொண்டிருக்கின்றன; மார்க்கட் மந்தமாயிருப்பதை முன்னிட்டு எல்லாவகை பஞ்சின் விலையிலும் ரூபாய் இரண்டு இறங்கியிருக்கிறது. கையிருப்பு வைத்திருபபுவர்கள் கொள் முதலுக்கு கம்மியாய் விற்பனை செய்து வருகிறார்கள். வாங்குகிறவர்கள் அலக்ஷியமாயிருக்கிறார்கள். திருப்பூருக்கு அருகாமையிலுள்ள ஆலைகள் கிடைக்கக் கூடிய கம்போடியா பஞ்சை வாங்கிவருகின்றபடியால் அவ்விடத்தில் விலை உறுதியா யிருக்கின்றது. பேர்போன சரக்கு இரண்டாவது மாசூல் வந்து கொண்டிருக்கிறது. 165-ரூ. வீதம் வாங்கப்பட்டு வருகின்றது. மார்ச்சு மாதம் வாய்தாவை முன்னிட்டு புரோச் சரக்கின்விலை ரூ. 279-க்கு ஏறியிருக்கிறது. அமெரிக்கா மார்க்கட்டும் இறங்கியிருக்கிறது. கான்டினென்டிலிருந்து கிராக்கி யில்லை. வெஸ்டர்ன் சரக்குக்கு நாளது தேதி விலை ரூ. 156—157, நார்த்தர்ன்ஸ்க்கு ரூ. 155—ரூ. 156; குண்ட்டேர் ரூ. 147, தேவனகிரி ரூ 151—152, புரோச் மார்ச்சு மாதம் வாய்தாவை முன்னிட்டு (782-ராத்தல்) ரூ. 279.

## Money Market.

### சென்னை நாணயக் கடை.

18-8-1913

மதிராஸ் பாங்க் 5-வட்டி 8-7-1913-ல்
பாம்பே பாங்க் 4-வட்டி 8-8-1913-ல்
பெங்கால் பாங்க் 3-வட்டி 4-7-1913-ல்
இங்கிலாண்டு பாங்க் $4\frac{1}{2}$-வட்டி 17-4-1913-ல்.

### சர்க்கார் பத்திரம்.

$3\frac{1}{2}$-வட்டி சர்க்கார் பத்திரம் 4-8-13-ல் ரூ.96-12-0. இருந்தது.

சில மாறுதல் அடைந்து இப்பொழுது ரூ. 96-10-0

### பங்குகள்.

மதிராஸ் பாங்கி பங்கு ஒன்று ரூபா 1440

இந்தியன் பாங்கி பங்கு ஒன்று ரூபா 5254

கர்ணடிக் மில் பங்கு ஒன்று ரூபா 510

## Bullion.

### பொன் கட்டி—வெள்ளிக் கட்டி.

விற்கிற விலை.

தோலா ஒன்றுக்கு.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| தங்கம் இங்கிலீஷ் நாஷணல் பாங்கு 100 மாத்து ... | ... | 24 | 2 | 9 |
| —,,————இதர பாங்க்—,,— | ... | 24 | 2 | 6 |
| கோட்டை சவரன் ஒன்றுக்கு | ... | 15 | 10 | 6 |
| ——,,—அரை—,,——,, | ... | 7 | 11 | 0 |
| கட்டி வெள்ளி—100-தோலாவுக்கு | ... | 80 | 4 | 0 |

———(:o:)———

# TRADE.
# வியாபாரம்.

## Our Imports of Cement.
## சிமிட்டி இறக்குமதி.

சென்னை ராஜதானியில் கடந்த மார்ச்சு மாதத்துடன் முடிவாகும் 12-மாதங்களில் 607,165-அந்தர் சிமிட்டி இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு முந்திய வருடத்தில் 276,782-அந்தர் இறக்குமதி செய்யப்பட்டது. ஆகையால் இறக்குமதி ஆச்சரியப்படும்படியாக அதிகரித்திருக்கிறதென்று நாம் எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. 1910-11-ல் 337,296 அந்தர் இறக்குமதி செய்திருக்கிறோம். அதாவது 1909-10-ல் இறக்குமதி செய்ததை விட 135,000-அந்தர் அதிகமாக இறக்குமதி செய்திருக்கிறோம். 1907-08,1908-09-ஆகிய இந்த வருடங்களில் இறக்குமதியின் கணக்கையும் தெரிந்துகொள்ள சிலர் விரும்பக்கூடும். அவைகள் முறையே 244,153-அந்தர் 284,434 அந்தர்.

இத்தேசத்தில் இறக்குமதி செய்யப்படும் சிமிட்டி பெரும்பாலும் யுனைட்டட் கிங்டம் என்கிற இங்கிலாண்டு, ஸ்காட்லாண்டு, வேல்ஸ் முதலிய தேசங்களிலிருந்து தருவிக்கப்படுகிறது. இத்தேசங்களைத் தவிர சிமிட்டி நமக்குச் சப்ளை செய்யக்கூடிய தேசங்கள் இன்னும் இரண்டே இரண்டு தேசங்கள். அவையாவன:—ஜெர்மனியும்,பெல்ஜியமும்; மேலே எடுத்துக் காண்பிக்கப்பட்ட 'இறக்குமதிக் கணக்கால் இம்மாகாணத்தின் தேவையை அறிந்து கொள்ளாதபடி இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறதென்று நன்றாய் அறிந்து கொள்ளலாம்.

நாம் இதைக் குறித்து விசாரணை செய்த அளவில் 80-ஆயிரம் அந்தர் தற்சமயம் கை



யிருப்பிருப்பதாகத் தெரியவருகிறது. அதே காலத்தில் சிமிட்டி மேலும் மேலும் தேவையாயிருக்கிறதென்றும் தெளிவாய்த் தெரிகிறது. உள்ளூரில், தேவைக்குத் தகுந்தபடி சிமிட்டி ஏதேஷ்டமாய் தயார்செய்யப்படாமல், நாம் இன்னும் விசேஷமாக இறக்குமதிசெய்ய நேரிடும் என்று இவ்விடத்தில் எடுத்தெழுத வேண்டிய தனாவசியம்· சென்னை ராஜதானியில் ஒரே ஒரு சிமிட்டி பட்டரை யிருக்கிறது. சென்னையிலிருப்பதைத் தவிர வேறெவ்விடத்திலுமில்லை. சிமிட்டி கட்டட வேலைகளுக்காக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறபடியாலும் ஜனங்களுக்கு அதின்பேரிலிருக்கும் விருப்பமும் அதிகரித்துக்கொண்டு வருகிறபடியாலும் நம் மாகாணத்தில் இன்னும் சில பட்டரைகள் ஸ்தாபிக்கப்பட்டால் விசேஷ இறக்குமதிக்கு இடம் கொடுக்காமல் தகுந்தபடி வியாபாரம் நடக்குமென்று எண்ணுகின்றோம்.

(:o:)

## Commerce in the World's Progress.
## உலகவிருத்தியில் வியாபாரம்.

தேசங்கள் ஒன்றுக்கொன்று பண்டமாற்றி வியாபாரம் செய்வதைப் போல உலகத்திற்கு நன்மை செய்யக்கூடியது யாதொன்றுமில்லை. இதனால் இருதரப்பாருக்கும் நன்மை விளைகின்றது. ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தாரை நன்றாய் அறிந்து கொள்ளும்படியும் செய்கின்றது. வியாபாரத்தில் ஒரு தேசத்தினர் மற்றொரு தேசத்தினருடன் போட்டி போட்டு நிற்பதால் சண்டை சச்சரவுகள் உண்டாகின்றதென்பதில் சந்தேகமில்லை; வியாபாரத்தால் இருதேசத்தார்களும் அடையக் கூடிய

நன்மையையும் தீமையையும் சீர்தூக்கிப் பார்க்கின் தீமைகள் மிக அற்பம். ஒரு தேசத்தில் ஒரு சரக்கு அகப்படுவதும் மற்றொரு சரக்கு அதே தேசத்தில் அகப்படாமல் வேறொரு தேசத்தில் அகப்படுவதும் இயற்கை அல்லது சுபாவம்; ஆகையால் பண்ட மாற்றிக் கொள்ளல் வேண்டியது அவசியமாக விருக்கிறது. தேசம் ஒன்றுக்கொன்று பண்ட மாற்றிக்கொண்டு வியாபாரம் செய்தலை விருத்தி படுத்தக் கூடாதென்பதாக எவரும் சொல்லார். அப்பேர்ப்பட்ட வியாபாரத்திற்கு எவ்வளவிற்கு எவ்வளவு வசதிகள் கொடுக்கப்பட்டு நடத்தப் படுகின்றனவோ, அவ்வளவிற் கவ்வளவு உலகத்திற்கு அமரிக்கையையும் விருத்தியையும் கொடுக்குமென்று யுனைட்டட் ஸ்டேட்டிவிருக்கும் பிரிடிஷ் தூதராகிய ஆனரபில் ஜேம்ஸ் பிரைஸ் என்பவர் அமெரிக்காவில் நியூயார்க் நகரத்தில் பிரசுரமாகும் ("Export American Industries") "எக்ஸ்போர்ட் அமேரிக்கன் இன்டஸ்டரீஸ்" என்கிற பத்திரிகையின் எடிட்டருக்கு எழுதி யிருக்கின்றனர்.

:‡:

## The Salem-Oolundurpet Railway.
## சேலம் உளுந்தூர் பேட்டை ரெயில்வே.

உத்தேசத்திலிருக்கும் இருப்புப் பாதை மார்க்கங்களை போட்டுமுடிக்க செஸ்வரிவருலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் அவைகளைப் போட்டுமுடிக்க வெகுகால மாகுமென்று கவர்ன்மெண்டார் நினைத்து $4\frac{1}{2}$ வட்டி வீதம் டிபன்சர் கடன் வாங்கி ரெயில்வேக்களைப் போட்டுமுடித்து விடலாமென்றும்செஸ்வருலை வட்டி கொடுப்பதில் பிரயோகப்படுத்தலாமென்று ஜில்லா போர்டாருக்கு யோஜனை சொல்லி ஜில்லா போர்டுகள் அவைகளுடைய 'அபிப்பிராயத்தை அறிவிக்கும்படி சர்க்குலர் அனுப்பினர்கள்.

இதன்பேரில் ஒவ்வொரு ஜில்லா போர்டும் அதனதன் அபிப்பிராயத்தை அறிவித்திருக்கிறது. கவர்ன்மெண்டார் இந்த அபிப்பிராயங்களை எல்லாம் பரிசிலனை செய்து அந்தந்த ஜில்லா போர்டார் அந்தந்த இருப்புப் பாதை மார்க்கம் போடும்போது அதற்குத் தகுந்தபடி யோஜனை செய்யவேண்டு மென்று தீர்மானித்தார்கள்.

சேலம் ஜில்லா போர்டாரும் தென் ஆற்காடு ஜில்லா போர்டாரும் தெரிவித்திருக்கும் அபிப்பிராயங்களை இவ்விடத்தில் எடுத்தெழுதுவது அவசியமாக விருக்கிறது.

சேலம் ஜில்லா போர்டார் சேலத்திலிருந்து சூரமங்கலத்திற்கு ரெயில்போட உத்தேசித்திருப்பதாயும் அதற்கு ஐவேஜி தங்களிடமே யிருப்பதாகவும், இதைப்போட்டு முடித்தவுடன் மற்ற ரயில்வேயைப் போடும்போது ஷை சேலம்-சூரமங்கலம் ரயில்வேயை போட்ட அனுபோகத்தைக் கொண்டு டிபன்சர் கடன் வாங்குவது உசிதமா என்று யோஜனை செய்யத் தயாராயிருப்பதாக எழுதினார்கள்.

தென் ஆற்காடு ஜில்லா போர்டார், ரயில் வேக்களைப் போட்டு முடிப்பதற்காக டிபன்சர் கடனை வாங்கலாமென்று கவர்ன்மெண்டார் சொன்ன யோஜனையை அங்கீகரித்துக் கொண்டார்கள்.

இப்படி யிருக்கையில் சென்னையிலிருக்கும் அவுஸ்காரர்களாகிய மெசர்ஸ் பாரி கம்பெனியார் சேலத்திலிருந்து உளுந்தூர் பேட்டைக்கு ரயில் போடுவதாக யோஜனை செய்து அந்த யோஜனையை ரெயில்வே போர்டிற்கு அனுப்பியிருக்கிறார்கள்.

சென்ற மாதம் "சென்னை வியாபாரியில்" ஷை ரெயில்வேயைப் போட்டுமுடிக்க ஒரு புதிய கம்பெனி ஏற்பாடு செய்வதாக பிரரேபணை செய்திருக்கிறார்கள் என்பதையும்

பங்குகள் ஒன்றுக்கு 100 ரூபாய் விகிதம் 73 ஆயிரம் ரூபாய் பங்குகள் சேர்த்து ஏறக்குறையபாதித் தொகை சேர்ந்தவுடன் வேலை ஆரம்பித்துவிடலா மென்று மெசர்ஸ் பாரி கம்பெனியார் அபிப்பிராயப் படுகிறார்கள் என்பதையும் எடுத்தெழுதியிருந்தோம். இந்த ரயில்பாதை 89 மயில்நீளம் உள்ளது. சேலம் டவுனிலிருந்து புறப்பட்டு ஆத்தூர், சின்னசேலம், கள்ளக்குருச்சிவழியாகச்சென்று உளுந்தூர் பேட்டையில் போய் முடிவடைகின்றது. இந்த மார்க்கம் பெரும்பாலும் சேலம் தென் ஆற்காடு ஜில்லாக்கள் வழியாகப்போகின்றபடியால் இந்த ஜில்லா போர்டார்களும் பங்கு எடுத்துக் கொள்ளலாமென்றும் இவர்களுடைய பிரதிநிதிகளும் பிரஸ்தாப ரெயில்வே போர்ட்டின் டைரக்டர்களாகயிருக்கலா மென்றும் மெசர்ஸ் பாரி கம்பெனியார்கள் சொல்லுகிறார்கள். இந்த இருப்புப்பாதையும் மற்ற ஜில்லா போர்டு இருப்புப்பாதைகள்போலவே தென்இந்தியாரயில்வே கம்பெனியாரால் போட்டு முடிக்கப்பட்டு வேலைசெய்யப்படவேண்டுமென்று தென்னிந்தியா ரயில்வே கம்பெனியாரும் ஜில்லா போர்டாரும் எவ்வித ஒப்பந்தங்கள் செய்துகொண்டிருக்கிறார்களோ அதேமாதிரியான ஒப்பந்தம் தாங்களும் செய்து கொடுக்கக் கூடுமென்று மெசர்ஸ் பாரிகம்பெனியார் தென் இந்தியா ரெயில்வே கம்பெனியின் ஏஜண்டிற்கு எழுதியிருக்கிறார்கள். பிரஸ்தாப இருப்புப்பாதை பெரும்பாலும் தென் ஆற்காடு ஜில்லா போர்டின் வழியாகப் போகின்றது. அந்தஜில்லாபோர்டாரிடம்ரூ.6½ லக்ஷம் சேர்ந்து கையிலிருப்பதுடன் வருஷவாரி செஸ்வரிவசூல் மூலியமாக ரூ. 90 ஆயிரம் வருமானமிருக்கிறது. தேவையான மீதித் தொகைக்கு டிபன்சர் கடன் வாங்கி ரயில்வேயைப் போட்டுமுடிக்கக்கூடும். இவ்விதமானவசதிகள் பொருந்தப்பெற்ற தென் ஆற்காடு ஜில்லாபோர்டார் ஒரு வியாபார கம்பெனிக்கு தங்களுடைய ஜில்லாவில் ரயில்போட விடம் கொடுத்துவிட்டு தாங்கள் ஷை புதிய ரயில் கம்பெனியில் டைரக்ட்டராக விருக்கும் சுதந்தரத்தை மட்டிலும் பெற்றுக்கொள்ள இணங்குவார்களாஎன்பதுசந்தேகமாயிருக்கிறது. தென் ஆற்காடுஜில்லா போர்டார் தென் இந்தியாரெயில்வே போர்டாருடன் ஏதேனும் ஏற்பாடு செய்துகொண்டு சீக்கிரம் வேலை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யாதவரையில் மெசர்ஸ் பாரி கம்பெனியார் அவர்கள் உத்தேசப்படி ஒரு புதிய கம்பெனி ஸ்தாபித்து பங்குகள் சேர்த்து விடுவார்கள் என்றும் எண்ணுகின்றோம். நிற்க, பிரஸ்தாபமார்க்கம் உளுந்தூர் பேட்டையுடன் முடிவடைவதில் என்னபலன்? இந்த ரயில் மார்க்கம் இந்த ஜில்லாவின் மணிலாக் பயிர் செய்யப்படும் கிராமங்களின் வழியாகச் செல்ல வேண்டுமானால் கூடலூர், பரங்கிப் பேட்டை துறைமுகங்கள்வரையில் போடப்பட வேண்டும். மூலதன முடையவர்கள் ஒருவர்த்தக கம்பெனியைவிட கவர்ன்மெண்டு சார்புடைய ஜில்லா போர்ட் டிபன்ச்சரில் போட்டு முடக்க இஷ்ட முடையவர்களாக விருப்பார்கள். ஆகையால் தென் ஆற்காடு ஜில்லா போர்டார் அதி தீவிரத்தில் இது விஷயமாக கவனிப்பார்கள் என்று நம்புகின்றோம்.

## மைசூர் பாங்க்.
## Mysore Bank.

மைசூர் அரசாங்கத்தாருடைய உதவியின் பேரில் ஒரு பாங்கி ஏற்படப்போகிற தென்று "சென்னை வியாபாரியின்" முந்தியசஞ்சிகையில் எழுதியிருந்தோமல்லவா? அது விஷயமாக ரெங்காச்சார்லு ஹாலில் சில தினங்களுக்கு முந்தி ஒரு மீட்டிங் நடந்தேறினது. பாங்கிற்குமுதல் 20 லக்ஷம் ரூபாய் என்றும் பங்கு ஒன்றுக்கு ரூ. 100 வீதம் 20 ஆயிரம் பங்குகளாக

பிரிவினை செய்யப்பட வேண்டும் மென்று தீர்மானம் செய்யப்பட்டது. விளம்பரங்கள் பகிரங்கப்படுத்தி பங்குகள் சேகரிக்கவும் பாங்கியை ஸ்தாபித்து அது வேலை செய்யும் நிலைமைக்குக்கொண்டு வரும்படியாக அடியிற் கண்டவர்கள் டைரக்ட்டர்களாக நியமன மடைந்திருக்கிறார்கள்.:—ராஜசபா பூஷணம் திவான் பகதூர் K. P. பட்டண செட்டி—முதல் கவுன்சிலராகவிருந்தவர்; சேர்மன்; மெசர்ஸ் E. R. சுப்பராயர் கம்ப்டிரோலராயிருந்தவர், M. செங்கய்ய செட்டி, டிப்ட்டி கமிஷனராயிருந்தவர்; மாண்டி ஹாரியாணு, பெங்களூர் வர்த்தகர்; O. சென்னபா சப்பா, தேவன்கர்வர்த்தகர்; அபதல் குதூஸ் சென்னப்பட்டண வர்த்தகர்; சிங்கிரி நஞ்சப்பா டிப்ட்டீர் வர்த்தகர்; ஷாமட்சேட் பெங்களூர் வர்த்தகர்; பானுமய்யா மைசூர் வர்த்தகர்.

## Trade Notes.

### இந்திய இருப்புப்பாதையின் தேவைகள்.

சென்ற ஜூன்மாதத்தில் லண்டன் சேம்பர் ஆப் காமர்சின் கிழக்கு இந்தியாவின் சேர்மன் மிஸ்டர் மாக்லீடும் இன்னும் சில பிரதிநிதிகளுமாகச் சேர்ந்து இந்தியா மந்திரியாரைக் கண்டு பேசினார்கள். வங்காளத்திலிருக்கும் நிலக்கரி சுரங்கங்களுக்கு போக்குவரத்து வசதிகள் விருத்திசெய்யப்படவேண்டுமென்றும் நிலக்கரிச் சுரங்கங்களுக்கு ரயில் கம்பெனியார்கள் சொந்தக் காரர்களாக விருக்கும்படி விடுவது விரும்பப்படக் கூடிய காரியமல்ல வென்றும் பிரஸ்தாப வருட வரவு செலவு திட்டகணக்கில் 12,000,000 பவுன் ரயில்வேக்காக சாங்கிஷன் செய்யப்பட்டிருப்பது தங்களுக்கு சந்தோஷமாயிருந்த போதிலும், ஆனால் தேவைக்கு இது போதுமான தொகையல்ல வென்றும் இன்ன இன்ன விடங்களில் புதிய மார்க்கங்கள் போடப்படும் என்றும் அவைகளுக்கு இன்ன இன்னவைகள் சப்ளை செய்யும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்பதற்கு மூன்று வருடத்திற்கு ஒரு முறை ரிப்போர்ட் பகிரங்கப்படுத்தப் படவேண்டும் என்றும் தெரிவித்துக் கொண்டார்கள். இது விஷயமாக இந்தியா கவர்ன்மெண்டாருடன் ஆலோசனை செய்து பதில் சொல்லுவதாக இந்தியா மந்திரியார் அனுதாபத்துடன் சொன்னார்.

### ரயில்வே கம்பேனி பங்குகள்.

பெங்காள் அண்டு நார்த் வெஸ்ட்டர்ன் ரயில்வேயின் பங்குக்காரர்கள் மீட்டிங்கு ஒன்று சென்ற மேமீ 20உ நடந்தது. கவர்ன்மெண்டார் இந்த இருப்புப்பாதையை 1932ல் வாங்கிப் போடுவதாயிருந்தால் பங்கு ஒன்றுக்கு 100 பவுன் வீதமுள்ள சாமானிய பங்குக்காரர்கள் 180 பவுனுக்கு குறையாமலும் 200 பவுனுக்கு மேற்படாமலும் பெற்றுக்கொள்ளுவார்கள் என்றும் 1982 வரையில் இப்போதிருப்பதுபோல குத்தகைக்கு விட்டிருக்கும்படி கவர்ன்மெண்டார் தீர்மானிப்பார்களே யானால் 160 பவுனுக்கு குறையாமலும் 180 பவுனுக்கு மேற்படாமலும் பெற்றுக் கொள்ளுவார்கள் என்று சேர்மன் சொன்னார்.

### நெருப்புக்குச்சி யந்திரம்.

மரக்கூழிலிருந்து நெருப்புக் குச்சி தயார் செய்யப்படுவதற்காக ஒரு நூதன யந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

### நாணய கமிஷன்.

மதிராஸ் பாங்கியைச் சேர்ந்த மிஸ்டர் W. B. ஹண்டரும், வங்காள பாங்கியைச் சேர்ந்த மிஸ்டர் தன்பாரும் ராயல் கமிஷன் முன்னால் சாக்ஷியம் சொல்ல அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆதலால் அவர்கள் உடனே சீமைக்கு பிரயாணமாவார்கள் என்று தெரியவருகிறது. சர்

சூசன்டேவிட் அழைப்புப் பத்திரத்தை ஒப்புக் கொள்ள முடியவில்லை. நாணய கமிஷன் முன்னில் சாக்ஷியம் சொல்ல அழைக்கப்பட்டிருச்கிறவர்களுக்கு பிரயாணச் செலவும் தினம் ஒன்றக்கு ஒரு கினி வீதம்படிச்செலவும் கட்டிக் கொடுக்கப்படு மென்று அறிகிறோம்.

## பழங்களை நிறைபிரகாரம் பிரிவினை செய்தல்

கனத்தபழம், நடுத்தரப்பழம், இலேசான பழம் ஆகியபலவகைப் பட்ட பழக்குவியலிலிருந்து பழங்களை நிறைப்படி பிரிவினை செய்வதற்காக ஒரு யந்திரம் நூதனமாய்க் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதில் பல நிறையுள்ள திராசுகள்வைக்கப் பட்டிருக்கின்றன. பழங்கள் திராசுகளுக்குப் போகும் படியான உபாயங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. மகா கனத்தபழம் திராசுதட்டிலிருந்து உடனேகிழே விழுந்துவிடுகிறது. அதன்பிறகு அதற்கு அடுத்த நிறையுள்ள பழம் விழுகின்றது. கடைசியாக இலேசான பழம் விழுகின்றது. நம்தேசத்தில் பழத்தை நிறுத் துவிற்பது வழக்கமில்லையாயினும் இங்கிலாந்து, ஐரோப்பா முதலிய தேசங்களில் சிலபழங்களை நிறுத்தே விற்பனை செய்கின்றார்கள். அப்பேர்ப்பட்ட வியாபாரிகளுக்கு இந்த திராசுயந்திரம் மிகவும் உபயோக முள்ளதாயிருக்கு மென்று எண்ணுகின்றோம்.

## அலயன்ஸ் அட்வர்ட்டைசிங் அசோஸியேஷன்.

இப்பெயர் கொண்ட ஒரு சங்கம் 1911 ல் கான்பூரில் ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கு கல்கத்தாவிலும் லண்டனிலும் கிளைசங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இச்சங்கத்தின் கருத்து என்னவென்றால் பத்திரிகைகளில் விளம்பரங்களை விசித்திரமாக பயிரங்கப் படுத்துதல். விளம்பர சம்பந்தமாகச் செய்யப்படவேண்டிய வேலைகள் ஏதேஷ்டமாயிருக்கின்றன. இந்த சங்கத்தின் முயற்சியும் சாமார்த்தியமும் அதின் பற்றுவரவுக் காரர்களுக்கு திருப்தியைக் கொடுத்திருக்கிற தென்று தெரியவருகிறனது.

## பருத்திப்பயிர்.

ஈஜிப்ட் தேசத்தில் பருத்திப்பயிரின் அடுத்தமாசூல் கனத்த விசேஷமாகயிருக்கும் என்று எண்ணப்படுகிறது. இதற்கு முந்தி எந்த கா காலத்திலும் இவ்வளவு மாசூல் எதிர்பார்க்கப்பட்டதில்லையாம். 1912-ஷு விசேஷமானவும் முந்தியவருடங்களைவிட அதிகப்படியானவுமான மாசூல் கிடைத்ததாம். அதாவது 80 லக்ஷம் கான்ட்டர் (ஒரு கான்டருக்கு $99\frac{1}{2}$ ராத்தல்) மாசூல் கிடைத்ததாம். 1913க்கு 10,000,000, கான்டருக்கு குறையாமல் கிடைக்கு மென்று எதிர்பார்க்கப் படுன்றது. இப்போது பஞ்சு விலை உயர்ந்திருந்த போதிலும் ஒருக்கால் இனிவிலை தணிந்தபோதிலும் இவ்வருட மாசூலால், 1912-ல் கிடைத்த 34 லக்ஷம் பவுனைவிட மிகவும் அதிகமாய்க் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. சென்ற வருடம் பருத்தி மாசூலை களத்திலிருந்து கொண்டு போவதற்கு பத்துலக்ஷம் பவுன் பிடித்தது. பிரஸ்தாப வருட மாசூலைக் கொண்டு போவற்கு 12 லக்ஷபவுன் செலவாகு மென்று சொல்லப்படுகிறது; இந்த பஞ்சை லண்டன் வர்த்தகாள் வாங்குவார்களான படியால் இவ்வளவு பெரிய செலவு அவர்களைப் பொறுக்கு மென்று யூகிக்கப்ப படுகின்றது.

## துறைமுகம்.

விசாகபட்டணத்தில் ஒரு துறைமுகம் கட்டப்படுவதற்கு வெகுநாளாய் யோஜனைசெய்யப் பட்டு வருகின்றது. அதில் துறைமுகம் கட்டுவதற்கு அனேக வசதிக ளிருக்கின்றன. மத்திய மாகாணங்களிலும் விசாகபட்டணம் ஜில்லாவிலும் உற்பத்தியாகும் விளை பொருள்கள் வெளியில்போக அதுதான் மார்க்கம். மேன்மை தங்கிய வைசிராய் இப்போது செய்யப்போகிற

சுற்றுப் பிரயாணத்தில் விசாகப்பட்டணம் வந்து கடல் கரையைப் பார்வையிட வேண்டுமென்றும், கவர்ன்மெண்டார் கூடிய சீக்கிரம் துறை முகத்தைக் கட்டி முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், விஜய நகரம் ராயப்பூர் ரெயில் மார்க்கத்தை சீக்கிரம் முடிவு செய்யும்படியாகக் கவர்ன்மெண்டார் சாங்கிஷன் செய்யவேண்டு மென்றும் பிமிலி பட்டணம், மிட்கோல், நரசபட்டணம் ஆகிய இந்த ஊர்களை ஜில்லாவின் இருப்புப்பாதை மார்க்கத்துடன் சேர்க்கும்படி கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், சாலூருக்கும்,—ஜெப்பூருக்கும் பார்வதிப்பூருக்கும்—குன்னுப்பூருக்கும் இருப்புப் பாதைகள் போடும்படி கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்யவேண்டு மென்றும் விசாகப்பட்டணம் கான்பிரன்சில் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

## ஜமேய்க்காவில் தேங்காய்கள்.

ஜமேய்க்காவில் ஏதேஷ்டமாகப் பயிர் செய்யப்படும். "பனனை" என்கிற வாழைப்பழத்தைப் பற்றி முன் நம்முடைய 'சென்னை வியாபாரி' யில் எழுதிருக்கின்றோம். தேங்காய்களுக்கும் இந்த ஊர் பேர் போனதென்று இப்போது நாம் அறிகிறோம். 1912ல் ஜமேய்க்காவில் அடித்த புயலால் தேங்காய் ஏற்றுமதி வருஷம் ஒன்றுக்கு 25 லக்ஷமாக விருந்தது 4 லக்ஷமாக குறைந்துபோனது. 1912மார்ச்சு மாதத்துடன் முடியும் வருடத்தில் 20 லக்ஷம் காய் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறபடியால் மறுபடியும் ஏற்றுமதி முன் நிலைமைக்கு வர எத்தனிக்கின்றது. "தென்னைப் பயிர் நம் தேசத்திற்கு சாவதானமாயும் திருப்தியைக் கொடுக்கும்படியான பயிர் ஆகையால் அதை எங்குபார்த்தாலும் பயிர் செய்து வரவேண்டுமென்று ஜமேய்க்கா விவசாய டைரக்டர் அபிப்பிராயப் படுகின்றார். பனனை வாழைப்பயிர் சாகுபடியால் அனேக தென்னந் தோப்புகள் உற்பத்தியா யிருக்கின்றன. இத்தேசத்து பூசாரத்திற்கு ரப்பர் சாகுபடியும் பொருந்துமாம்.

## நூதன டிராம்வண்டிகள்.

சென்னப்பட்டணத்தில் விடப்படும் டிராம் வண்டிகளுக்கு மின்சாரம் ஊட்டுவதற்காக எழும்பூரில் Power Station என்று சொல்லும்படியான மின்சாரம் உற்பத்தி செய்யும் விடம் ஒன்றிருக்கிறது. மின் சாரம் ஓடுவதற்காக டிராம் பாதைகளில் கம்பங்கள் நடப்பட்டு கம்பிகள் போடப்பட் டிருக்கின்றன. கம்பியையும் டிராம் வண்டியையும் டிராம் வண்டியின்மேல் வைக்கப்பட்டிருக்கும் ஒரு கொம்பு சேர்க்கின்றது. கம்பியிலிருக்கும் மின்சாரம் கொம்பை இழுக்க, கொம்பு வண்டியை இழுக்கிறது. கம்பங்கள், தந்திக்கம்பி, கொம்பு யாதொன்றுமில்லாமல் மின்சார வல்லமையை அடங்கிக் கொண்டிருக்கும் "பாட்டரி" என்கிற யந்திரத்தை பிரயாணிகள் வீற்றிருக்கும் ஆசனங்களின் கீழேவைத்து அமைக்கப்பட்டிருக்கும் வண்டிகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி வண்டிகள் சான்பிரான் சிஸ்கோவிற்கு 30 மயில் தூரத்திலுள்ள ஈஸ்டன் நகரில் ஓடுகின்றன.

## Motor Cars and Motor Cycles.
## மோட்டார் வண்டிகளும் மோட்டார் சைக்கில்களும்.

சென்னையில் ஒருவருடத்தில் மட்டிலும் ரூபா 16,67,058 பெறுமானமுள்ள மோட்டார் வண்டிகளும் மோட்டார் சைக்கில்களும் சென்னை மாகாணத்தில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறதென்றால் இவைகள் ஜனங்களுடைய மனதைக் கவர்ந்திருக்கிற தென்று நாம் சொல்லவும் வேண்டுமோ? அடியிற் கண்ட

மூன்று வருஷக் கணக்கால் இவைகளின் இறக்குமதி வருஷா வருஷம் ஏறிக்கொண்டே போகின்றது,

1910—11 ல் ரூ. 6,24,395

1911—12 ல் ரூ. 10,46,031

1912—13 ல் ரூ. 11,67,058

பெருமான முள்ளவைகள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. 1905-ம் வருடம் முதல் 1910-ம் வருடம் வரையில் வருஷம் ஒன்றுக்குச் சராசரி ரூ. 3,24,181. பெறுமானமுள்ளவைதான் தருவிக்கப்பட்டன. சென்னையிலுள்ள பாரி வர்த்தக கம்பேனிகளுடைய அசிஸ்டண்டுகள் வண்டி குதிரைகளுக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டு மோட்டார் சைக்கிலேயே உபயோகப் படுத்திக்கொண்டு வருகிறார்கள். ஐரோப்பியர்கள் டிராம் வண்டிகளில் ஏறுவது அபூர்வம். மூன்றுச் சக்கர தள்ளு வண்டியும் சாதாரண சைக்கிலும் புறக்கணிக்கப் பட்டுவருகின்றன. ஆகவே தற்காலம் மோட்டார் வண்டிகளும் மோட்டார் சைக்கில்களும் பிரபலமாய் நிற்கின்றன. சென்ற வருடத்தில் மட்டிலும் 304 வண்டிகள் இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றுள் 181 கிரேட் பிரிட்டனிலும் பாக்கி 104 அமேரிக்காவிலும் தயார் செய்யப்பட்டவை; மோட்டார் சைக்கில்கள் 369 சென்றவருடம் இறக்குமதி செய்யப்பட்டதில் 100-க்கு 86 வீதம் கிரேட்பிரிடனில் தயார் செய்யப்பட்டவை. இவ்வளவும் உல்லாசமாக அதாவது ஆபீசுக்குப் போகவும் சாயங்கால வேளைகளில் காற்றுவாங்கப் போவதற்காகவும் தருவிக்கப்பட்ட வண்டிகளே ஒழிய வியாபார சம்பந்தமான காரியங்களுக்காக தருவிக்கப்பட்டவையல்ல; வியாபார சம்பந்தமான காரியங்களுக்காக சென்ற வருடம் ரூ. 37,920 பெருமானமுள்ள வண்டிகள் தான் இறக்குமதி செய்யப்பட் டிருக்கின்றன. நம் மாகாணத்தில் ரயில் மார்க்கங்கள் போடப்படாத அனேக ஊர்களிருக்கின்றன. அந்தப் பிராந்தியங்களில் பாரி மோட்டார் வண்டிகளைப் பிரயோகப்படுத்தி பிரயாணிகளை ஒரு ஊரிலிருந்து வெகு தூரத்திலுள்ள மற்றொரு ஊருக்குக் கொண்டுபோய் விடலாம். ஆதலால் வியாபார சம்பந்தமான வண்டிகளும் ஏதேஷ்டமாக இறக்குமதி செய்யப்படவும் இடமிருக்கிறது.

## The Late Mr. A. R. Chakrapani Chettiar.

## காலஞ்சென்ற மிஸ்டர் அ. ரு. சக்ரபாணி செட்டியார்.

கும்பகோணத்தில் பிரபலமான வியாபாரம் செய்து வந்த மிஸ்டர் அ. ரு. சக்ரபாணி செட்டியார் சென்ற மாதம் காலமாய்விட்டார் என்று கேள்விப்பட்டு விசனமடைகிறோம். இவர்வியாபாரத்தில் மிகப்பிரசித்தி பெற்ற அனுமானூர் ருமலிங்க.செட்டியாரால் ஸ்வீகாரமாக எடுத்துக்கொள்ளப்பட்டவர். ஸ்வீகார பிதாவைப்போலவே ஸ்வீகாரப் புத்திரனும் ராஜதானி முழுவதிலும் பல வர்த்தகங்கள் செய்து கீர்த்தியுடன் வாழ்ந்துவந்தனர். ராஜதானிக்கப்பால் கல்கத்தாவிலும் பம்பாயிலும் கூட இவர் பெரிய வர்த்தகம் செய்துவந்தனர். சிங்கப்பூர், பினுங்கு முதலிய விடங்களுக்கு பல சாக்குகள் ஏற்றியும் அவைகளிலிருந்து பல இறக்குமதிகளும் செய்து வந்தனர். உள்ளூர் அவுஸ் காரர்கள் மூலியமாக லண்டன், ஜெர்மனியிலிருந்து செம்பு பித்தளை மாதம் ஒன்றுக்கு 100-டன்னுக்குக் குறையாமல் இறக்குமதி செய்தனர். ஜப்பான் ஜாவாவிலிருந்து கற்பூரமும், சர்க்கரையும் இறக்குமதி செய்துவந்தார். இவருக்கு கும்பகோணம் பிரதான வியாபார ஸ்தலமாக விருந்தபோதிலும் நாகப்பட்டணத்திலும், சென்னையிலும்—ஆக இரண்டு கிளை மளிகைகளிருக்கின்றன. வியாபாரத்தில் அல்லும் பகலும் கவனத்தைச் செலுத்திவந்த போதிலும் பொது நன்மையை நாடி உழைப்பதையும் மறந்துபோய்விடவில்லை. உள்ளூர் முனிசிபாலிடியிலும், தாலூக்கா போர்டிலும், ஜில்லா போர்டிலும பல தடவை மெம்பராகவு மிருந்தார். சென்ற வருடம்

கும்பகோணத்தில் கூடிய வைசியா கான்பரன்பசின் ரிஸப்ஷன் கமிட்டி சேர்மேனக விருந்து வந்திருந்த பிரதிநிதிகள் எல்லோரும் தத்தம் தேசத்திலும் கிரகத் திலிருப்பதுபோல உணரும்படி செய்தனர். சென்ற மகாமகத்தில் பெரும்பாலும் அவருடைய சொந்தச் செலவிலேயே ஒரு பொருட்காக்ஷி நடத்திவைத்த னர். அவர் தனவந்தரா யிருந்தபோதிலும் அடக்க முடையவர், தெய்வபக்தி யுடையவர், தருமச் சிந்த னையு முடையவர். அவருடைய ஸ்வீகாரப் பிதா ஏற்பாடு செய்த தர்மங்களை நிர்வகித்து வந்ததுமன்றி தம்முடைய காலத்திலும் சில தரும ஏற்பாடுகள் செய்து வைத்தனர். ஸ்ரீசக்ரபாணி தேவஸ்தானத்திற்கு முன் மண்டபங்கட்ட ரூபா 30-ஆயிரம் திட்டம் போட்டு ஆரம்பித்து ரூபா 25-ஆயிரம் ரூபாயுள்ள வேலைகள் முடிந்துபோய் விட்டன. சீக்கிரம் பாக்கி வேலைகளும் முடிவுபெற்று கும்பாபிஷேகம் நடக்கும். இவருக்கு 25-வயதுடைய புத்திரனும் 22-வயதுடைய வாசாம்பாள் என்கிற புத்திரியும் இருக்கிறார்கள். புத்திரனுகிய மிஸ்டர் ராமகிருஷ்ணசெட்டியார். ஏற்கனவே வியாபாரத்தை கவனித்துக்கொண்டு வருகிறபடியால் பிதாவினுடைய மரணத்தால் வியாபாரத்தில் மாறுதல் உண்டாகமாட்டாதென்று எண்ணப்படுகிறது.

---

## The Mysore Economic Conference.

## மைசூர் பொருளாதாரக் கூட்டம்.

மைசூர் பொருளாதாரக் கூட்டம் சென்ற மாதம் 12-ந் தேதி மைசூரிலேயே நடத்தப்பட்டது. பிரஸ்தாபக் கூட்டம் நான்காவது வருடத்தியக் கூட்டம். திவான் மிஸ்டர் விஸ்வேஸ்வரய்யர் சபாநாயகராயிருந்து நடத்தினர். இவ்வருடத்தியக் கூட்டத்தில் முக்கியமான விசேஷம் என்னவென்ருல் கான்பரன்சிற்கு அனேக உத்தியோகஸ்தர்கள் வந்திருந்தார்கள். இந்த கான்பரன்ஸ் மேன்மை தங்கிய சமஸ்தானகவர்ன் மெண்டாரால் ஆதியில் ஏற்படுத்தப்பட்டது. தோன்றிய பின்பு நான்கு வருடகாலத்தில் அது மிகவும் விருத்தி அடைந்து வந்திருக்கிறது. 1912-13ம் வருடத்திற்காக கைத்தொழில் வியாபார இலாக்கா கமிட்டியார் பிரசுரித்திருக்கும் ரிப்போர்ட்டால் ஷை வருஷத்தில் அனேக உபயோகமுள்ள வேலைகள் செய்யப்பட்டுவந்தன வென்றும் இன்னும் வேலைகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன வென்றும் விளங்குகின்றது. கமிட்டியார் இன்னும் அனேகவிஷயங்களில் அவர்களுடைய கவனத்தை அடுத்த வருடத்தில் செலுத்தி அந்த வருடம் முடிவுற்குள்ளவே ஒரு ரிப்போர்ட் பயிரங்கப் படுத்தவேண்டுமென்று அவர்களை வேண்டிக் கொள்ளும்படி இந்த கான்பரன்சில் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. கமிட்டியார் என்ன என்னவிஷயங்களில் கவனத்தைச் செலுத்தி வரவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் கேட்டுக்கொள்ளுகிறதோ அவைகளை எல்லாம் இச்சஞ்சிகையில் மற்ருெரு பக்கத்தில் எடுத்து எழுதி யிருக்கின்ருேம். சமஸ்தானத்தின் கைத்தொழிலையும் வியாபாரத்தையும் விருத்தி செய்ய வேணு மென்கிற நோக்கத்துடன் இக்கான்பரன்ஸ் ஒரு மனதாயிருந்து உழைத்து வருகின்றது. இதனுல் சமஸ்தானத்திற்கு உறுதியான நன்மை உண்டாகு மென்பதிலும் பிரஜைகளுக்கு சுபிக்ஷம் உண்டாகு மென்பதில் சந்தேகமில்லை. இந்த கான்பரன்ஸ் கைத்தொழில், வியாபாரம் ஆகிய இந்த இரண்டு விஷயங்களில் தான் தன்னுடைய புத்தியைச் செலுத்தி வருகிறது என்று சொல்லக்கூடாது. இவைகள் இரண்டும் எப்படி கான்பரன்சின் கவனத்தைப் பற்றி யிருக்கின்றனவோ அதேமாதிரியாக விவசாயமும், கல்வியும் பற்றியிருக்கின்றன. வென்றும் கமிட்டியாருடைய ரிப்போர்ட்டாலும் இக்கரன்பரன்சின் நடவடிக்கையாலும் தெளிவாய்த் தெரிகிறது. திவானுடைய பிரசங்கத்தைக் கேட்டவர்கள் தங்களைமறந்து போகும்படியாகயிருந்தது. சமஸ்தானத்தின் இலாகா ஒவ்வொன்றையும் பற்றிப்பேசி தேசத்தின் பொருளாதாரம் நிலைமையும் ஜனங்களின் சன்மார்க்க ஒழுக்கமும் விருத்தி அடையும் படியான பலயோஜனைகள் சொன்னர். மற்ற தேசங்களுடன் சமஸ்தானத்தை சீர்தூக்கிப் பார்த்து பேசினது பிரசங்கத்தைக் கேட்டவர்கள் ஆலோஜனை செய்யக்கூடியதாகவிருந்ததுமன்றிஇயற்கையில் சுறுசுறுப்பாயில்லாதவன்கூட உற்சாகம் கொண்டு வேலைசெய்ய ஆரம்பிக்கத் தூண்டும்படியன தாகவிருந்தது. சமஸ்தானத்தில் ஒருபாங் ஏற்படுத்தவேண்டும்என்றுதீர்மானிக்கப்பட்டு அதற்கு

உருவு பெற்றுக் கொண்டுவருகின்றது. கைத்தொழில் விஷயமாக அனேக சோதனைகள் செய்யப்பட்டு வருகின்றன. கைத்தொழில், வியாபாரப் படிப்பையும் விருத்தி செய்ய பிரயத்தனம் செய்யப்பட்டு வருகின்றது. எதேஷ்டமானபணம் பிரைமரிபடிப்பிற்காக கொடுக்கப்பட்டிருப்பதுமன்றி கட்டாயப் படிப்பு மசோதா ஆக்ட்டும் சட்டசபையின் ஆலோசனைக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இம்மாதிரி திதான் அவர்கள் பேசிவிட்டு, "உஷ்ணமுள்ள நம்முடைய பூமியில் உழைப்பதற்கு அவ்வளவு வசதியில்லை. மேல்நாட்டார் எவ்வளவு க்ஷேமத்தையும் விருத்தியையும் அடைந்திருக்கிறார்களோ அவ்வளவு அளவு நாம் அடைய நமக்கு ஒருக்காலும் முடியாது. ஆனால் நான் மேலே எடுத்துக் கூறினவழிகளில் நாம் ஒழுங்கான பிரயத்தனங்கள் செய்து வந்தால் அவைகள் பலனைக்கொடுக்காமல் போகமாட்டா. விருத்தி விஷயத்தில் அவர்களுக்கும் நமக்குமுள்ள நீண்ட தூரத்தை குருக்கிப்போடும் என்பதில் தடையில்லை. நம்முடைய ஜனங்களின் புத்தி விருத்திப்படாமல்போய் விட்டாலும் சரி, அவர்களுடைய சாமர்த்தியம் பழக்கப்படுத்தப் படாவிட்டாலும்சரி, அவர்களுடைய சுறுசுறுப்புக்கு உற்சாகம் கொடுக்கப் படாவிட்டாலும் சரி, வசிப்பதற்கும் வேலை செய்வதற்கும் சராசரி விகிதம் மிகவும்கேவலமாயிருக்கும். தேசமுழுவதிலும் அறியாமையும், அசாமர்த்தியமும் சோம்பேறி தன்மையுள்ளவுமான ஜனங்கள் நிரம்பியிருப்பார்கள். பஞ்சகாலத்திலும் சரி அல்லது கஷ்டகாலத்திலும் சரி அவர்கள் தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொண்டு பிழைக்கவகை தெரியாதவர்களாயிருப்பார்கள். ஆகையால் அவர்கள் இந்த அபாயக் குழியில் விழுவதிலிருந்து அவர்களை எப்படி தப்புவிக்கிறதென்றால் அவர்களைப் படிக்க வைக்கவேண்டும். சாமர்த்திய ஞானத்துடன் சாஸ்திர ஞானத்துடனும் அவர்களைத் தயார்படுத்த வேண்டும் அவர்களை சுறுசுறுப்பாக விருக்கும்படி செய்யவேண்டும். இந்த நோக்கத்துடன் தான் மேன்மை தங்கிய சமஸ்தானத்தார் ஜனங்களுடைய பொருளாதார நிலைமை பலப்படும்படியான அனேக ஏற்பாடுகளை ஆரம்பித்துச் செய்து வருகின்றார்கள் என்று சொல்லி முடித்தனர்.

நமக்கு சமீபமாயுள்ள சமஸ்தானத்தில் இப்பேர்பட்ட விருத்திகள் செய்யப்பட்டு வருகையில் நம்முடைய மாகாணத்தில் ஸ்தாபிக்கப்பட்ட கைத்தொழில் இலாக்கா தூங்கிக் கொண்டிருக்கிறது.! அந்த இலாக்காவை வைத்திருக்கிறதா அல்லது எடுத்துப் போடுகிறதா என்று அதிகாரிகள் கடந்த இரண்டுவருஷமாக யோஜனை செய்து கொண்டுவருகிறார்கள்.

—(:-:)—

## Indo-Ceylon Route.

## இந்தியா சிலோன் இருப்புப் பாதை.

———:(*):———

சிலோன் கவர்ன்மெண்டு செக்ரேட்டரி ஆபீசில் விசாரித்ததில் சிலோன் பக்கத்தின் இருப்புப் பாதை எப்போது கவர்ன்மெண்டாரால் திறக்கப்படு மென்று தெரியவில்லை என்றும் ஆனால் மன்னார் இருப்புப்பாதை பிரயாணிகளின் போக்கு வரவிற்கு அடுத்த ஜனவரி மாதம் 12.ந் தேதி திறக்கப்படு மாகையால் சிலோன் பக்கத்து இருப்புப்பாதையும் நிகழ் வருட டிசம்பர்மாதம் இறுதியிலாவது அல்லது அடுத்தவருட ஆரம்பத்திலாவது புதிய கவர்னரால் திறக்கப்படலாமென்றும் சென்ற மாதம் 25ம் தேதி "சிலோன் டைம்ஸ்" என்னும் பத்திரிகை கூறுகின்றது.

### இருப்புப்பாதையின் விபரம்.

சிலோன் பக்கத்துப் பாதையின் வேலை அதிக தீவிரமாக நடந்து வருகின்றது. தலைமன்னார் வரையில் பாலஸ்ட் என்கிற கப்பி வண்டிகளை போக்கு வரத்துசெய்வது சாத்தியமாயிருக்கிறது. தலை மன்னார் என்றும் சொல்லும் படியான சாமான்ய விடம் ஒரு பட்டணமாய் மாறிக்கொண்டுவருகின்றது. இப்போது 20, 30, பங்களாக்கள் கட்டப்பட்டு வருகின்றன. கூலிக்காரர்கள் ஜாகைகளும் இன்ஜின்கள் தங்கியிருக்கும்படியான கொட்டகைகளும் கட்டப்பட்டு வருகின்றன. ஸ்டேஷன் வேலை பெரும்பாலும் முடிந்துபோய் விட்டது. ஒரு ரிபரஷ்மெண்டு ரூமின் (வெள்ளைக்காரர்கள் தீனி சாப்

பிடும் இடத்தின்) கட்டட வேலையும் நடந்து வருகின்றது.

### இரண்டு பிரமாண்டமான வாராவதிகள்.

வடகிழக்கு மழைகாலத்திலும், தென்மேற்கு மழைகாலத்திலும் உபயோகப் படுத்தப் படுவதற்காக இரண்டுபெரிய வாராவதிகள் தலை மன்னாரில் கட்டப்பட்டிருக்கின்றன. தென் வாராவதி ஆயிரம் அடி நீளமும் 40-அடி அகலமுமுள்ளது. ஒவ்வொரு வாராவதியின் ஓரத்திலும் மூன்று இருப்புப்பாதை மார்க்கங்கள் ரயில் போக்குவரத்து செய்வதற்காகப் போடப்பட்டு வருகின்றன. நடுவில் பிரயாணிகள் நடக்கும்படியான விசாலமான விடமும் விடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வாராவதியின் முடிவில் 200-அடி நீளத்தில் ஒரு பண்டக சாலை கட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு இதற்காக இப்போது அஸ்திவாரம் போடப்பட்டு வருகின்றது. வாராவதிகளின் பேரில் தீர்வை ஆபீசுகளும் கட்டப்படும். இந்த இருப்புப் பாதை திறக்கப் படுவதற்கு முந்தி தலைமன்னாரில் மின்சார தீபமும் ஏற்பாடு செய்யப்படும். கவர்ன்மெண்டு எலக்டிரிக் இன்ஜினீராகிய மிஸ்டர் F. B. "ஸைலாண்ட்ஸ்" என்பவர் இது சம்பந்தமாக தலைமன்னாருக்குப் போகப் போகிறதாகவும் நாம் கேள்விப்படுகின்றோம். இந்த வருடம் முடிவுக்குள் எல்லா வேலைகளும் பூராவாய் முடிந்து போகுமென்று எதிர்பார்க்கப் படுகின்றது.

ரயில் மாடவாச்சியிலிருந்து புறப்பட்டு சில மைல் தூரம் வரையில் அடர்ந்த காட்டின் வழியாகச் செல்லுகின்றது. மன்னாரை நோக்கி போகப்போக காட்டு காக்ஷி மாறி நாடு நகரம் வீடு வாசல்கள் கண்ணிற்குப் புலப்படுகின்றன. ராக்ஷசர்கள் தடாக ஓரத்தின் பேரில்தான் ரயில் மார்க்கம் போடப்பட்டிருக்கிறது- பிரயாணிகள் ரயில்வண்டியிலிருந்தபடி முதலைகளைப்பார்க்கக்கூடும். மன்னாரில் கொஞ்சதூரம் வரையில் ரயில் சமுத்திரத்தின்பேரில் போகின்றது. இந்த விபுத்திற்கு இருப்பு வாராவதி போடப்பட்டிருக்கிறது. இந்த வாராவதி மனனாரையும் சிலோனையும் சேர்க்கிறது. மன்னார்த் துறை மணல் அடர்ந்தபூமி. காற்று காலத்தில் பிரஸ்தாப புதிய மார்க்கத்திற்கு கனத்த சேதம் உண்டாயிவருகிறது. இந்த கஷ்டத்தை விலக்குவதற்காக மார்க்கத்தின் இருபுறத்திலும் குத்துச் செடிகள் பயிர் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தியாவிற்கும் சிலோனுக்கும் ஆடம்ஸ் பிரிட்ஜ் என்று சொல்லும்படியான ஆடம்ஸ் அணையின் வழியாக இருப்புப்பாதையும் போடுவதாக ஒரு யோஜனை யிருந்ததே அதென்னாயிற்றென்று சிலோன் டயம்ஸ் நிருபர் தென் இந்தியா ரெயில்வே ஏஜண்டைக்கண்டு கேட்டதற்கு இந்தப்பாதை போட்டே தீரவேண்டுமென்றும் ஆனால் எப்போது போடப்டுமென்பது இப்போது சொல்ல முடியாதென்றும் சமீபமான காலத்தில் போடப்படுவது இப்போது போடப்பட்டிருக்கும் இருப்புப்பாதை மூலியமாக போக்கு வரத்து செய்யப்படும் வியாபாரத்தைப் பொருத்தது என்று பதில் சொன்னார்.

## Chinese Finance.

### சீனு கடன்.

ஜர்மனியில் லாவாதேவி செய்யும் ஒரு பெரிய அவுஸ்காரர்கள் 32 லக்ஷம் பவுன் சீனுவுக்கு கடன் கொடுத்து உதவியிருக்கிறார்கள். இந்தத் தொகையைக் கொண்டு 12 டார்பிடோ போட்டுகள் என்று சொல்லும்படியான சமுத்திரத்தில் முழுகி பிரயாணம் செய்து சத்ருவின் ஸ்டீமர்களை தாக்கும் போட்டுகள் 12-ம் டார்பிடோ போட்டுகளை நாசப்படுத்தும் போ

ட்டுகளில் 6-ம் சீனாவாங்கியிருக்கிறது. போட்டுகளின் கிரயமும், 100-க்கு 8-வீதம் டிஸ்கவுன்டும் கொடுத்துபோக சீனாவுக்குக் கிடைத்த ரொக்கம் எல்லாம் கூடி 1, 413000 பவுன் தான். இந்த கடனுக்காக சீனாவின் நிலவரியை சீனா அடமானம் வைத்திருக்கிறது. 1915 டிசம்பர் மீ 31 உ ல் ஒரு வாயுதாவும், 1916 டிசம்பர் மீ 31 உ இரண்டாவது வாயுதாவும், 1917 டிசம்பர் 31 உ ல் மற்றொரு வாயுதாவும், ஆகமூன்று வாயுதாவில் கடன் தீர்க்கப்படவேண்டுமாம். இந்தக்கடன் ஏற்பட்டால் சீனாவுக்கு லாபமில்லை என்று அது வாங்கியிருக்கும் 18 டார்பிடோ போட்டுகளுக்கு தற்காலம் வேலையில்லை என்றும் போகப்போக அவைகள் பழையனவாய்ப் போய்விடு மென்றும் அரசாங்க சம்பந்தமான ரகசியமான காரியங்களுக்கு பணமுடைப்பட்டு இப்படி சீனா கடன் வாங்கியிருக்கிற தென்று லண்டன் டைம்ஸ் கூறுகின்றது.

———:-:———

## A State Bank.

### ஒரு கவர்ன்மெண்டு பாங்கி.

மதிராஸ் பாங்கி, பம்பாய் பாங்கி, வங்காளா பங்கி—ஆகிய இம்மூன்றையும் ஒன்றாய்ச் சேர்த்து ஒரு கவர்ன்மெண்டு பாங்கியாய்ச் செய்து விட்டால், அந்த ஏற்பாடு இந்தியாவின் வர்த்தகத்திற்கு நன்மையைக் கொடுக்கு மென்று நினைக்க முடியவில்லை. இதனால் அப்பாங்கிகளுக்கிப்போதிருக்கும் கௌரவம் குறைந்து போகு மென்றும் தேவைக்குத்தகுந்த படி பணம்சப்ளை செய்ய ஷை பாங்கிகளில் போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன வென்றும் வியாபாரம் மும்முரமாக நடக்கும் காலத்தில் பணம் கசாலாவா யிருப்பது பாங்கிகளுடைய குற்றமல்ல வென்றும் கவர்ன் மெண்டார் வரி வசூல் மூலியமாக நாட்டிலுள்ள பணத்தை எல்லாம் வசூலித்துகட்டி போட்டு விடுகிறபடியால் பாங்கியில்பணமுடை உண்டாகின்றதென்றும், இந்தியா மந்திரியாருடைய பரிபாலனத்தில் இப்போதிருக்கும் பொன் நாணயத்தையும் கஜானா இருப்புகளையும் கரன்சி நோட்டுகளையும் ஆகிய இவைகள் ஒரு பாங்கியிடம் ஒப்புவிக்கப்பட்டு அப்பேர்ப்பட்ட ஒரு பாங்கி ஏற்பட்டால் இந்தியாவிற்கு நன்மையைக் கொடுக்கு மென்னும் பம்பாய்ச் சேம்பர் அபிப்பிராயப்படுவதாக பம்பாய்ச் சேம்பரின் காரிய நிர்வாகஸ்தர் கராச்சி சேம்பருக்குப் பதில் எழுதியிருக்கிறார்.

———

## Imports of Machinery.

### யந்திரங்களின் இறக்குமதி.

———:(*):———

விளைபொருள்களை விற்பனையாகும் சாமான்களாகத் தயார் செய்வதில் கூடிய வரையில் கைவேலையைச் சுருக்கி அதற்கு பதிலாக யந்திரங்களை உபயோகப்படுத்தும் குணாதிசயம் நம் இந்தியாதேச ஜனங்களிடம் காணத்தலைப்பட்டிருக்கின்றன வென்று அடியிற்கண்ட கணக்கு விபரத்தால் அறிந்து கொள்ளக்கூடும்.

1910—11 ல் 460.61 லக்ஷம்
1911—12 ல் 406·76 „
**1912—13 ல் 483·62** „

ரூபாய் மதிப்புள்ள யந்திரங்கள் சென்னை மாகாணத்தைத் தவிர இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட் டிருக்கின்றன. 1912—13 ல் 1910—11 யைவிட 100-க்கு 5 மடங்கு அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

சென்னை மாகாணத்தில்.

1910—11 ல் 43·26 லக்ஷம்
1911—12 ல் 49·32 ,,
1912—13 ல் 58·06 ,,

லக்ஷம் ரூபாய் பெருமானமுள்ளவை இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. அதாவது 100 க்கு 34 பங்கு அதிகமாய் இறக்குமதியாயிருக்கின்றன. இவ்வளவு அதிகப்படியான விருத்தி இம்மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டொரு பெருத்த வேலைகளை முன்னிட்டு என்று நினைக்கக்கூடும். அப்படி நினைக்கக்கூடாது; கைவேலைக்குப்பதிலாக யந்திரங்களையே உபயோகப்படுத்திவருவதில் ஜனங்களுக்கு உள்ளபடியே விருப்பம் உண்டாயிருக்கிறது. ஏனென்றால் இம்மாகாணத்தில் யந்திரங்கள் வியாபாரம் செய்யும் அனேக இன்ஜினீரிங் அவுஸ்களும் இன்ஜினீரிங் ஏஜன்ஸிகளும் கடந்த 3 வருஷ காலத்திற்குள் உற்பத்தியாயிருக்கின்றன.—இவ்வாறு நம்மாகாணத்தில் கைத்தொழில் இலாகாவிற்கு டைரக்டராக விருந்து இப்போது மைசூர் சமஸ்தானக் கைத்தொழில் இலாக்காவிற்கு டைரக்டராக விருக்கும் மிஸ்டர் A. சாட்டர்ட்டன் மதிராஸ் மெயில் பத்திரிகைக்கு எழுதியிருக்கின்றார்.

---

## Reuter's Telegram Co.
## ராயிட்டர் தந்தி கம்பெனி.

———:(‡):———

ராயிட்டர் கம்பெனியார் என்பவர்கள் பாரிதந்தி கம்பெனிக்காரர்கள். இக்கம்பெனியார் உலகமெங்கும் தந்திக்கம்பெனிகள் போட்டு அந்தந்த முக்கியமான விடங்களில் ஏஜண்டுகளும் சிப்பந்திகளும் வைத்திருக்கிறார்கள். அன்றன்று நடக்கும் விசேஷங்களை அந்த சிப்பந்திகள் அந்தந்த தேசத்திலிருந்து தந்தி மூலியமாக லண்டனிலுள்ள பிரதான ஆபீசுக்கு அனுப்பி விடுகிறார்கள். தலைமை ஆபீசுக்காரர்கள் அந்தத் தந்தியைப் பயிரங்கப்படுத்துகிறார்கள். இங்கிலாண்டு ஐரோப்பா, அமெரிக்கா முதலிய தேசங்களில் நடக்கும் விசேஷங்கள் அந்த நிமிஷமே இந்தியாவிற்குத் தெறிவது இந்த கம்பெனியாரால் தான். சென்ற மேமீ 28உ வருஷாந்திர மீட்டிங்கிற்கு ஆனரபில் மார்க் F. நேப்பியர் சபாநாயகராக யிருந்து பேசினார்.

பால்கன் சண்டையில் யுத்தசமாசாரங்களை வெளியில் எட்டவிடாமல் ராணுவ அதிகாரிகள் ஏற்பாடுகள் செய்துவந்தார்கள் என்றும் இதுவிஷயமாக கண்டிப்பான ஏற்பாடுகள் செய்தவர்கள் பல்கேரியர்கள் என்றும் அப்படியிருந்தும் ராயிட்டர் கம்பெனியார் சமாசாரங்களை அறிந்து பயிரங்கப் படுத்தினார்கள் என்றும் ஆதலால் பலபிரதான நகரங்களிலுள்ள ஏஜெண்டுகளுக்கும் நிருபர்களுக்கும் கம்பெனியார் வந்தனமளிக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள் என்றும் சொன்னார். அனேக சந்தர்ப்பங்களில் சமாசாரங்களை உலகத்திற்கு முதலில் பயிரங்கப் படுத்துகிறவர்கள் தங்களுடைய கம்பெனியாரே என்றும், இந்தியாவின் வைசிராயைக் கொலை செய்ய எத்தனித்ததையும் அவருக்கு நேரிட்டவிபத்து முதலில் இங்கிலாண்டு கவர்ன்மெண்டாருக்கு தம்முடைய கம்பெனி மூலியமாகத் தான் தெரிந்ததென்றும், இந்த கௌரவமும் இம்மாதிரி சமாசாரங்கள் இதற்கு முந்தி முதன்மையாக பயிரங்கப்படுத்தினதில் தங்களுடைய கம்பெனிக்கு உண்டாயிருக்கும் கௌரவமும் இந்தியா கவர்ன்மெண்டாருடனிருக்கும் நிருபர் நேயர் எடுத்துக் கொண்டிருக்கும் சிரமத்தால் உண்டானதென்றும் ஆதலால் தம்முடைய கம்பேனி அவருக்கு வந்தனம் பாராட்டக் கடமைப்பட்டிருப்பதாகவும் சொன்னார்.

நிற்க, இந்த கம்பேனியார் பத்திரிகை சமாசாரங்களையும் தேசவிசேஷ சமாசாரங்களையும் பயிரங்கப் படுத்துவதுமன்றி பத்திரிகை சமாசாரங்களல்லாத மற்ற பிரைவேட் தந்திகளைப் போக்குவரத்து செய்யவும் தந்திமூலியமாக மணி ஆர்டர் அனுப்பவும் வாங்கவும் ஒரு டிபார்ட்மெண்டு ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். விளம்பர இலாக்கா ஒன்றும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மேலே சொல்லப்பட்ட இரண்டு இலாக்காக்களிலும் சென்ற வருஷம் ஒழுங்கான வேலைகள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன வென்றும் விளம்பர இலாக்கா சென்றவருஷம் விருத்தி செய்யப்பட்டதென்றும் சீனதேசக் கம்பேனியின் கவனத்தைப் பற்றியதென்றும் பெக்கின், ஷாங்காயிலிருக்கும்

கம்பெனியின் பிரதிநிதிகள் கம்பெனியின் நன்மையை நாடி வெகுவாய் உழைத்து வந்தார்கள் என்றும் சொன்னார். கம்பெனியின் காரியதரிசி சென்ற வருடம் ஈஜிப்ட்டிற்குப் போயிருந்தார், கெயிரோ அலாக்சாண்டிரியாவிலிருக்கும் பிரதிநிதிகள் கம்பேனியின் நன்மையை நாடி மிகவும் கவனித்து வருகிறார்கள் என்று திருப்தி அடைந்து வந்தார் என்றும் சொன்னார்.

நிற்க அக்கம்பேனியார் பலவிடங்களில் பாங்கித் தொழிலும் நடத்தி வருகிறார்கள். சென்றவருடம் "சிட்னியில்" கிளைபாங்கி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதனால் நல்லபலன் உண்டாகு மென்று எதிர்பார்க்கப் பட்டது. இந்த பாங்கிக்கும் ராயிட்டர் என்று பெயர் கொடுக்கப்பட்டிருந்தபடியால் அதில் பணம் போட்டு பத்துவரவு செய்யக் கூடியவர்கள் பாங்கியின் பெயரைக்கொண்டு தந்திகம்பெனிக்காரர்கள் என்று எண்ணி விடுகிறபடியால் தகுந்த வேலை, சென்றவருடம் நடக்கவில்லை என்று ஷை பாங்கியின் மானேஜர் அறிவிக்க ராயிட்டர் கம்பெனியாரின் அதிகாரத்திற்கும் லாபநஷ்டத்திற்கு உட்பட்டிருக்கும் படியான ஒரு பிரத்தியேகமான பாங்கி ஸ்தாபிக்கப் பட்டிருக்கிற தென்று சொன்னார்.

---

## Commercial Cases in Court.

### வியாபார சம்பந்தமான கேஸ்கள்

### டவுன் போலீஸ் கோர்ட்.

மாஜிஸ்டிரேட் : மிஸ்டர் W. S. மார்ஷல்.

23-6-1913.

மான நஷ்டதாவா.

கோடூர் ஸ்டேஷன் மாஸ்டர்——பிரியாதி.

பத்திரி நாராயண செட்டியும் இன்னு மிருபது பேர்களும் } எதிரிகள்.

கேசின் விபரம் : கோடூர் என்பது கடப்பை ஜில்லாவிலிருக்கிறது. இந்தவூர் ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டராகிய P. வேலாயுத முதலியார் மேலே சொல்லப்பட்ட 20 எதிரிகள் பேரிலும் மான நஷ்டத்திற்காக பிரியாது செய்தார். எதிரிகள் இருபது பேர்களும் வர்த்தகர்கள். சென்னப்பட்டணத்திற்கு ரயில் மூலமாய் சரக்கு அனுப்புகிறவர்கள் : Y. S. வெங்கட சுப்பராய செட்டி என்பவர் ஷை எதிரிகளுடைய சென்னப்பட்டணம் ஏஜண்டு. இந்த ஏஜண்டிற்கும் ஸ்டேஷன் மாஸ்டருக்கும் மனஸ்தாப முண்டு. அதுபோலவே எதிரிகளுக்கும் ஸ்டேஷன் மாஸ்டருக்கும் மனஸ்தாப முண்டு. எதிரிகள் சென்ற டிசம்பர்ம 3உ ஸ்டேஷன் மாஸ்டர் வாகின் வண்டிகள் சப்ளை செய்யாததை முன்னிட்டு சரக்குகள் ஒரு வாரமாக கோடூர் ரயில்வே ஸ்டேஷனில் கிடக்கின்றன வென்று பிரியாதிபேரில் புகார்மனு மதிராஸ் தென் மராட்டா ரயில்வே ஜெனரல் டிராபிக் மானேஜருக்கு அனுப்பினார்கள். எதிரிகளில் இரண்டுபேர்கள் தனியே ஜெனரல் டிராபிக் மானேஜருக்கு ஒரு புகார்மனு அனுப்பினார்கள்.

அந்த மனுவில் ஸ்டேஷன் மாஸ்டர் சென்ற மாதம் 22-ந் தேதி ஒரு வாக்கின் சப்ளை செய்ய ரூ. 2ம் அதில் சாமான்களை ஏற்ற ரூ. 5ம் தங்களிடமிருந்து வாங்கிக்கொண்டதாகவும் சொல்லியிருந்தார்கள். இன்னும் இரண்டு புகார் மனுக்கள் எதிரிகளால் ஜெனரல் டிராபிக்மானேஜருக்கு அனுப்பப்பட்டன. அவைகளிலும் ஸ்டேஷன் மாஸ்டர் லஞ்சம் வாங்கினதாக புகார் செய்திருந்தார்கள். இந்த மனுக்கள் காரணமாக ஜில்லா டிராபிக் சூப்பிரண்டண்டாகிய மிஸ்டர் G. G. ஆர்மஸ்டிராங் என்பவர் ஸ்டேஷன் மாஸ்டரின் நடத்தையைப் பற்றி விசாரணை செய்தார். விசாரணையின் முடிவு என்னவென்றால் பிரஸ்தாப ஸ்டேஷன் மாஸ்டர் முந்தியிருந்த ஸ்டேன் மாஸ்டர்கள் வழக்கப்படியும், மாமூல்படியும் விதிப்படியும் செய்தாரே ஒழிய அவைகளுக்கு எதிரிடையாய் யாதொன்றும் செய்யவில்லை என்றும் அவர் லஞ்சம் வாங்குகிற வழக்கமில்லை என்றும் டிராபிக் சூப்பிரண்டண்டு முடிவுசெய்தார். இந்தத் தீர்மானத்தில் எதிரிகள் திருப்தி அடையாமல் அவர்களில் ஒருவர் முன் மாதிரியாகவே ஜெனரல் டிராபிக் மானேஜருக்கு ஒரு மனு அனுப்பி

யது மன்றி ஸிம்லாவிலிருக்கும் ரயில் இலாகா டைரக்டர் ஜெனரலுக்கும் புகார் மனுவின் நகல் ஒன்றை அனுப்பினார். ஆகவே தன்னை அவமானப் படுத்தவேணு மென்கிற கெட்ட நினவுடன் எதிரிகள் ஆதி முதல் இப்படி செய்து வருகிறார்கள் என்று அவர்களை ஸ்டேஷன் மாஸ்டர் பிராசிகியூட் செய்தார்.

**லாயர்கள்:** ஐக்கோர்ட் வக்கீல் மிஸ்டர் K. U. ஷாமராவ் பிராசிகியூஷன் தரப்பிற்கும் வக்கீல் மிஸ்டர் வேணுகோபால செட்டியுடன் பாரிஸ்டர் மிஸ்டர் J. C. ஆடம் எதிரிகள் தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

**விசாரணை நடவடிக்கை:**—பிராசிக்கியூஷன் தரப்பு வக்கில் மிஸ்டர் G. G. ஆர்ம் ஸ்டிராங் உள்பட பல சாக்ஷிகளை விசாரணை செய்தார். எதிரி தரப்பு லாயர்கள் தங்களுடைய கக்ஷிக்காரர்கள் உண்மையான காரியத்தைத் தெரிவித்தார்கள், என்றும் அவர்கள் செய்தது பிரியாதியின்பேரில் வஞ்சம் கொண்டு செய்ததாகச் சொல்ல முடியாதென்றும் சொன்னார்கள்.

பிரியாதியின் வாக்குமூலம் (மாஜிஸ்டிரேட்டுகளுக்கு) வாகினில் சரக்கு ஏற்றுவதற்கும் அல்லது இறக்குவதற்கும் ரயில் கம்பெனியார் வர்த்தகனிடமிருந்து சார்ஜ் அல்லது கூலிவாங்குவதுண்டு. ரயில் கம்பெனியாரே இந்த வேலைகளைச் செய்யும்போது வர்த்தகர்கள் செலுத்தும் பணத்திற்கு ரசீது கொடுக்கப்படுகிறதுண்டு. ஸ்டேஷன்மாஸ்டர் பிரத்தியேகமாக கூலிகாரர்களை வைத்து சரக்குகளை வாக்கினில் ஏற்றுவது முண்டு. அவைகளிலிருந்து இறக்குவது முண்டு. அப்போது வர்த்தகர்கள் செலுத்தும் பணத்திற்கு ரசீது கொடுக்கப்படுகிற வழக்கமில்லை.

**மாஜிஸ்டிரேட்:**—இது திருப்திகரமான ஏற்பாடாகத் தோற்றவில்லை. நாளையவரையில் கேசின் விசாரணைத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

24—6—1913.

**மாஜிஸ்டிரேட்டின் உத்திரவு;**—பிரதிவாதியும் பிரதிவாதியின் வக்கீலும் ஆக்ஷேபணை சொல்லுவதெல்லாம் கூடி எதிரிகள் அனுப்பிய மனுக்களில் ஸ்டேஷன்மாஸ்டர் "லஞ்சம்" வாங்கியதாகச் சொல்லியிருப்பதைத் தவிர மற்றப்படி வேறில்லை. ஸ்டேஷன் மாஸ்டரும் இன்னும் சில சாக்ஷிகளும் Loading Charges வாக்கினில் சரக்கு ஏற்றுவதற்காக கூலி வாங்கிற துண்டு என்று ஒப்புக் கொள்ளுகிறார்கள். பிரிவாதிக்கும் எதிரிகளுக்கும் உண்டாயிருக்கும் தொந்திரவுகள் எல்லாம் கூடி இந்தக் "கூலி" யைப்பற்றியே ஒழிய மற்றப்படி வேறே யாதொரு தொந்திரவுமில்லை. கோடூர் ஸ்டேஷனுக்கு சரக்கு கொண்டுவரும் வர்த்தகர்கள், அவர்களே இவைகளை வாகினில் ஏற்றுவதும் உண்டு அல்லது ஸ்டேஷன் மாஸ்டர், போர்ட்டர் முதலான ரயில் சிப்பந்திகளும் ஏற்றுவது முண்டு என்றும் அப்படி இவர்கள் ஏற்றினால் இவர்களுக்கு வர்த்தகர்கள் கொடுக்கும் பணத்திற்கு ரசீது கொடுக்கப் படுகிற வழக்கமில்லை என்றும் இம்மாதிரி வழக்கம் பலவருஷமாக கோட்டூர் ஸ்டேஷனில் பழக்கத்திலிருந்து வருகின்றதென்றும் ஸ்டேஷன் மாஸ்ட்டரும் இன்னும் அனேக சாக்ஷிகளும் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள். இந்த பழக்கத்தை ரெயில்வே கம்பெனியார் ஒப்புக் கொண்டிருந்தால் அது மகா கெட்ட வழக்கமென்றே நான் அபிப்பிராயப் படுகின்றேன். இந்த வழக்கமிருக்கிறதென்று சொல்லப் படுவதினாலேயே எதிரிகள் புகார் செய்வதற்குத் தகுந்த காரணமிருக்கு மென்று நான் யூகிக்க வேண்டியதாயிருக்கிறது. ஏன் என்றால் வர்த்தகர்கள் பணம் கொடுத்து சரக்கை ஏற்றியும் இறக்கியும் ஸ்டேஷன் மாஸ்டர் சிப்பந்தியின் இஷ்டப்படி நடந்து கொள்ளாவிட்டால் அவர்கள் சரக்கு ரயில் மூலியமாக அனுப்பப்

படுவதற்கு ஏதுவில்லை. இந்த வழக்கத்தால் வர்த்தகர்களுக்கிருக்கும் இடஞ்சலும் அசௌகரியமும் வெளிப்படையாகத் தெரியக் கூடியதாயிருப்பதால் அதைப்பற்றி நான் விஸ்தாரமாய் இங்கு எழுதவேண்டியதில்லை. பிரியாதியும் எதிரிகளும் இதற்குமுன் சண்டை சச்சரவு போட்டுக் கொண்டதில்லை என்றும் வாகன்கள் எதிரிகளுக்கு சரியான காலத்தில் சப்ளை செய்யப்படாததை முன்னிட்டு அவர்பேரில் அதிகாரிகளுக்கு புகார் செய்திருக்கிறார்கள் என்றும் பிரியாதியே ஒப்புக்கொள்ளுகிறார். இது எதிரிகளின் உண்மையான எண்ணத்தை காண்பிக்கிறதுடன் கூட தகுந்த காரணமில்லாவிட்டால் எதிரிகள் புகார் செய்திருக்கமாட்டார்கள் என்பதையும் காண்பிக்கின்றது. ஆதலால் பிரியாதியின் பேரில் மேல் அதிகாரிகளுக்கு புகார்செய்ய தகுந்த காரணமிருந்ததென்று நான் தீர்மானிக்கிறேன். நல்ல எண்ணத்துடன் புகார் செய்திருக்கிறார்கள் என்றும் தீர்மானிக்கிறேன். ஆகையால் ரயில் மேல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட புகார் மனுவில் அடங்கியிருந்த வாக்கியங்கள் இ. பி. கோ 499 வது பிரிவு 8 வது விலக்கு விதியால் ஆதரிக்கப் படுகின்றன. ஆகவே கி. பு. கோ 25, வது பிரிவின்படி எதிரிகளை விட்டுவிடும்படி உத்திரவு செய்கிறேன் என்று சொன்னார்.

## Industry.
## கைத்தொழில்.

## The Mysore Dasara Exhibition 1913.
## 1913ம் வருடத்திய மைசூர் தசரா கண்காக்ஷி.

மைசூர் சமஸ்தானத்தில் தசராக்காலத்தில் வருஷாவருஷம் நடத்தப்படும் கைத்தொழில் விவசாய காக்ஷி இவ்வருடமும் அக்டோபர்மீ 3உ முதல் 17உ வரையில் காண்பிக்கப் படுமென்று சமஸ்தான கவர்ன்மெண்டார் விளம்பரித் திருக்கிறார்கள். கால்நடை கோழிகாக்ஷியும் நெசவுபோட்டியும் அக்டோபர்மீ 13உ ஆரம்பித்து 15மஉ முடிவடையும். மரச்செதுக்கு வேலைப்பாடு உலோகச் செதுக்கு வேலைப்பாடு ஆகிய இவைகளின் போட்டி அக்டோபர்மீ 13மஉ ஆரம்பமாகி 17உ யுடன் முடிவுபெறும். மண்பாண்ட வேலையிலும் உழுவதிலும் போட்டிகள் முறையே 14, 15உ களில் நடத்தப்படும். சமஸ்தானத்திற்குள்ளிருப்பவர்களும் அப்பாலிருப்பவர்களும் காக்ஷிப் பொருட்கள் அனுப்பிக்கும்படியாக கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்தியாவில் மற்ற எல்லா மாகாணங்களிலும் பர்மாவிலும் சிலோனிலுமிருக்கும்படியான விவசாயிகளும் காக்ஷிப் பொருட்கள் அனுப்பிக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஸ்திரிகளுக்காக பிரத்தியேகமாக ஒரு பிரிவு ஏற்படுத்தப்படுமாம். இந்த வகுப்பின் கருத்தென்னவென்றால் விநோதமான தையல் வேலைப்பாடு சரிகை வேலைப்பாடு, கூடைபின்னுதல் முதலிய அனேக வேலைகளை ஸ்திரிகள் அறிந்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகுப்பில் இந்த ஸ்திரிகள் அவர்களுடைய வேலைப் பாடமைந்த சாமான்களைக் கொண்டு வந்து காண்பிப்பதுடன் காக்ஷிக்கு வரக்கூடிய மற்றஸ்திரிகளுக்கும் அவ்வேலைகளை எப்படிச் செய்கிறதென்று போதிப்பார்களாம். இந்தப் பிரிவுமிகவும் அவசியமான பிரிவு என்பதில் தடையில்லை. என் என்றால் ஸ்திரீ ஜாதியார் செய்யக் கூடிய அனேக வேலைகளிருந்தும் ஆயிரக் கணக்கான ஸ்திரிகளுக்கு அவ்வேலைப்பாடுகள் தங்களுடைய சகோதரிகளுடையவை என்று தெரியமாட்டாது. ஒவ்வொரு தினுசிலும் மகாஉயர்ந்த வேலைப்பாடமைந்த சாமான்தான் காண்பிக்கப்பட்டு அதற்கு பரிசு அளிக்கப்படுமாம்.

## A New Ice Factory in Madras.
## சென்னையில் ஒரு புதிய பனிக்கட்டி சாலை.

கடந்த 25 வருடகாலத்தில் சென்னைபல அம்சத்திலும் விருத்தியாம்சம் அடைந்து வந்திருந்த போதிலும் பனிக்கட்டி (Ice) சப்ளை சம்மந்தப்பட்ட வரையில் 25 வருடத்திற்கு முந்தி எப்படி யிருந்ததோ அப்படியேதானிருக்கிற தென்பதை எவரும் ஒப்புக்

கொள்ளுவார்கள். கோடை காலங்களில் பனிக்கட்டி எதேஷ்டமாக அகப்படாதது உள்ளூராருல் உணரப்படுவது மன்றி சென்னையிலாவது போய்வாங்கிக் கொண்டு வரலாமென்று எண்ணிக் கொண்டுவரும் அயலூர் வர்த்தகர்களும் ஏமார்ந்து போகின்ருர்கள். இந்தக் குறைப்பாடை நீக்கும் பொருட்டு எழும்பூர் வானல்ஸ்ரோட்டில் "சவுத் இந்தியன் ருயல் ஐஸ் பாக்டரி" (The South Indian Royal Ice Factory) என்று பெயர் கொண்ட ஒரு சாலை கட்டப்பட்டு வந்தது. இந்தச் சாலையின் கட்டட வேலைமுடிந்து போய் கிரகப் பிரவேசம் சென்ற மாதம் நடந்தது. கார்பரேஷனுக்குப் பிரசிடெண்டாக விருக்கும் மிஸ்டர் மூர் சாலையை அவருடைய திருக்கரத்தால் முதல் முதலில் திறந்தனர். இங்கிலாண்டு ஐரோப்பா முதலிய தேசங்களிலிருக்கும்படியான மகா உயர்ந்த பனிக்கட்டி சாலைகள் மாதிரியாக பிளான் போடப்பட்டு இந்தசாலை கட்டப்பட்டிருக்கிறது. பனிக்கட்டி செய்வதில் பிரசித்தி பெற்ற யந்திர தளவாடங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. தினம் ஒன்றுக்கு 150 டன் பனிக்கட்டி தயார் செய்யக் கூடியது. இந்தச் சாலையில் இன்னொரு நூதனம் என்ன வென்ருல் காய்ச்சி பரிசுத்தப்படுத்தப்பட்ட (distilled) ஜலத்திலிருந்து பனிக்கட்டி தயார் செய்யப்படுகிறது. இந்தபுதிய சாலைக்காரர்கள் இதற் கென்று தயார் செய்யப்பட்ட பனிக்கட்டியைவைத்து வாடிக்கையாய் வாங்கும் ஜனங்களுக்கு வீட்டில் சப்ளை செய்கிருர்களாம். பனிக்கட்டி காய்ச்சி பரிசுத்தப்பட்ட ஜலத்திலிருந்து தயார் செய்யப்பட்டு வருகிறபடியால் ஜனங்களுடைய சுகாதாரத்தை உத்தேசித்து இந்தச்சாலையை சென்னைவாசிகள் சந்தோஷதுடன் வரவேற்றுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிருர்கள். என்று மிஸ்டர் மூர், சாலையைத் திறக்கும்போது பொருள் படும்படி பேசினுர். பனிக்கட்டியின் விலை இன்னும் சரசமாய் போய்விடும். சாலை மிகவும் உன்னதமாகக் கட்டப்பட்டிருக்கிறது. சொந்தக்காரர்கள் தகுந்த லாபத்தையும் அடைவார்கள் என்று நம்புகின்ருேம்.

---

## South Indian Match Factory Ld.

## தென்னிந்தியா தீக்குச்சி தொழிற்சாலை லிமிடெட்.

சவுத் இந்தியன் மாட்ச் பாக்ட்டரி (South Indian Match Factory) என்று பெயர் கொண்ட ஒரு கம்பெனி திருவாங்கூரில் புதிதாய் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இதன் மூலதனம் ரூபாய் இரண்டு லக்ஷம். பங்கு ஒன்றுக்கு ரூபாய் 25 விகிதம் 8 ஆயிரம் பங்குகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. ஏறக்குறைய பாதிப்பங்குகள் எடுத்துக் கொள்ளப் பட்டு பணமும் செலுத்தப்பட்டுப் போய்விட்டனவாம். அதிசீக்கிரத்தில் வேலையும் ஆரம்பிக்கப் போகிருர்கள். இந்த கம்பெனியின் பெயருக் கேற்றபடி அதில் சேப்டி மாட்ச் (Safety Match) பாக்ட்டரி என்று சொல்லும்படியான நெருப்பு பெட்டிசாலை திருவாங்கூரில் கட்டப்படுமோம். சமஸ்தான அரசர் நெருப்பு பெட்டிக்கு வேண்டிய மரங்களை வெட்டிக் கொள்ளவும், கட்டடத்திற்கு வேண்டிய மரங்களை வெட்டிக் கொள்ளவும், சாலைகட்ட ஸ்தலமும் தீர்வையிலும் ஆகிய இந்த அம்சங்களில் இக்கம்பெனிக்கு கனத்த சுதந்தரங்கள் கொடுத்திருக்கின்ருர்கள். செவ்வையாகவும் செட்டாகவும் இச்சாலை நடத்தப்பட்டும் மானேஜ்மெண்டு செய்யப் பட்டும்வந்தால் தகுந்த பயனைக் கொடுக்குமென்று எண்ணப்படுகிறது. திருவாங்கூர் சமஸ்தான காட்டு இலாக்காவிற்கு இப்போது கான்ஸர் வெட்டராகவிருக்கும் தலைமை அதிகாரியினுடைய பிரயத்தனத்தாலும் பிரயாசையாலும் இக்கம்பெனி உற்பத்தியாயிருக்கிற தென்று சொல்ல வேண்டும். இந்த தலைமை ஆபிசர் நெருப்புப் பெட்டிசாலைகள் ஏற்படுத்துவதற்கு தெனிந்தியா வசதியுடைய தென்று எண்ணங் கொண்டு சமஸ்தானக் காடுகளிலுள்ள மரங்களில் சிலவற்றைத் தெரிந்தெடுத்து அவைகளின் மரம் இருப்புப் பெட்டி செய்வதற்குப் பிரயோஜனப்படுமோ என்று சோதனை செய்யும் படியாக தார்வாரிலுள்ள 'கர்னுடக மாட்ச் பாக்ட்டரி" என்று சொல்லும்படியான நெருப்புப் பெட்டி சாலைக்கும் இன்னும் சில சாலைகளுக்கும் சாம்பில் அனுப்பினுர். அவர்அனுப்பிய 109 தினுசுமரங்களில் 42 மரங்கள் பெட்டிக்கும் குச்சிக்கும் பிரயோஜனப் படுமென்றும், அதிலும் 18 மிகவும் பொருத்தமாயுள்ள

தென்றும், 23 பெட்டிகளுக்கு மட்டிலும், ஒன்று குச்சிக்கு மட்டிலும், பொருந்து மென்றும் தெரியவந்தது. சோதனை செய்யப்பட்ட இந்த மரங்களன்றி, இன்னும் பொருத்தமாயுள்ள அனேக மரங்களுமிருக்கின்றன வென்று திருவாங்கூர் காட்டு இலக்காக் காரர்கள் மூலியமாய் நாம் அறிகிறோம். இப்போது காட்டிலாக்காவிற்கு கன்சர்வேட்டராயிருப்பவர் மிஸ்டர் M. ராமராவ் இவரே ஆதிமுதல் இதுவிஷயமாக தீர்காலோசனை செய்து மரங்களைச் சோதனை செய்யும்படி செய்து சாலை அமைக்க திட்டம் முதலியவைகள் போட்டு யந்திரங்களையும் பொருக்கி எடுத்து கம்பெனியும் உற்பத்தி செய்திருக்கிறபடியாலும் இந்த ஆபிசரும் சமஸ்தானத்திற் குள்ளவே யிருப்பதாலும் சாலை ஒழுங்காய் நடைபெற்று பங்குதாரிகள் லாபம் அடைவார்கள் என்று நம்புகின்றோம். இந்தச் சாலையில் நெருப்புப் பெட்டி, நெருப்புக்குச்சி, குச்சியை அடுக்கி பெட்டிக்குள் வைக்கவும், குச்சியின் உச்சியில் மருந்துவைக்கவும்—ஆகிய இவ்வொவ்வொரு வேலைக்கும் வேண்டியயந்திர தளவாடங்கள் அமைக்கப்படும். இந்தயந்திர தளவாடங்கள் ஹாம் பர்க்கிலிருந்து சென்னைக்குவர ரூ. 68,642-8-0. அடக்கம். ஸ்டீமர் செலவையும் பாக்கிங் சார்ஜ்ஜும் அதில் சேர்ந்திருக்கிறது. ஒரு நெருப்புப் பெட்டி சாலை ஏற்படுத்த திட்டக் கணக்கும் அடியில் எடுத்துக் கூறியிருக்கிறோம். பிரஸ்தாப சாலையில் (Safety Match Boxes) சேப்டிமாட்ச் பெட்டிகள்தான் தயார் செய்யப்படும். சாதாரணமாக இப்போது பஜாரில் கால் அணுவுக்கு இரண்டு பெட்டிவீதம் விற்பனையாகிவரும் கெந்தகநெருப்புப்பெட்டி இனிவிற்பனை செய்யப்படக்கூடாதென்று கவர்ன்மெண்டு சட்டத்தால் தடுக்கப்பட்டிருக்கிறபடியால் சேப்டி தீக்குச்சிகளுக்கு விசேஷ கிராக்கி ஏற்படும்.

---

## Japanese Silk in India.

## இந்தியவில் ஜபான் பட்டு.

:(o):

ஜபானிலிருக்கும் யோக்கஹாமா சோஷல் கிளப்பில் (Yokahama Social Club) நடத்தப்பட்ட ஜபான் பட்டுவர்த்தக சங்கத்தாருடைய மீட்டிங்கில் விவசாய வர்த்தக இலாக் காவிலிருக்கும் நிபுணராகிய மிஸ்டர் நோமா இந்தியாவில் ஜபான் பட்டுவியாபாரத்தைப் பற்றிப் பேசினார். இந்தியாவில் முக்கியமாய் பர்மா, பம்பாய் கல்கத்தாவில் ஆகிய இந்தவிடங்களில் சுய பட்டும், பட்டும் பருத்தியும் கலந்தப் பட்டும், பட்டும் சணலும் சேர்ந்த பட்டும் தயார் செய்யப்படுகின்றன. ஆனால் 5 பெரியசாலைகளைத் தவிர இத்தொழில் மிகவும் சொற்பமாக கைத்தரிகளுடன் நடத்தப்பட்டு வருகின்றன. ; தயார் செய்யப்பட்ட சரக்கு மிகவும் பளபளப்பாயிருக்கிறது. ஆனால் ஜப்பான் சரக்கு வந்துவிழுவதால் வியாபாரம் மந்தமாயிருக்கிறது. உள்ளாட்டுத் தொழில் மும்மரமாய் நடத்தப்படுவதற்கு மூன்று இடஞ்சல்களிருக்கின்றன' இந்தியாவின் பட்டு ஜப்பான் சரக்கின் விலையுடன் போட்டி போட, முடியவில்லை. (2) எந்தப் பச்சை சரக்குகளால் (Raw material) பட்டு தயார் செய்யப்படுகின்றதோ அவைகள் விசேஷமாக இந்தியாவில் உற்பத்தி செய்யப் படுகிறதில்லை. (3) பெரும்பாலும் பட்டுக்கிழிச்சல் அல்லது துக்கடாக்கள் போல் பார்வைக்குக் காணப்படும் பருத்தி நூல்கள் (Fibres) இங்கிலாண்டு தேசத்திலிருந்து இறக்குமதி செய்யப் படுகின்றன.

இந்தியாவில் வருடம் ஒன்றுக்கு இறக்குமதி செய்யப்படும் அன்னிய தேசப்பட்டின் மொத்த மதிப்பு என்ன வென்றால் 13,000, 000, என் (Yen) இதில் 8,000, 000, என் பெருமானமுள்ள சரக்கு ஜப்பானைச் சேர்ந்தது. 2, 100, 000, என் பெருமான முள்ள சரக்கு சீனாவைச் சேர்ந்தது. பாக்கி ஐரோப்பாவின் மற்ற தேசங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தியாவின் இறக்குமதிகளில் மூன்றில் ஒரு பாகம் ஜபான் சரக்குகளாயிருக்கின்றன. ஜப்பான் சரக்குகளின் மூன்றில் ஒரு பாகம் பட்டுச்சரக்கு.

எல்லாவகுப்பு இந்தியர்களும் ஜப்பான் பட்டுத்துணிகளை விரும்புகிறார்கள் என்பதில் சந்தேக மில்லையாயினும் அவர்கள் ஏழையா யிருப்பதால் ஜபான் பட்டிற்கு மிகவும் அதிகமான கிராக்கி ஏற்படுகிறதில்லை. எந்தமாதிரியான ரகத்தை ஜபான் இந்தியாவிற்கு அனுப்பினால் ஜனங்கள் அபேக்ஷிபட்டுவாங்குவார்கள் என்று அறிந்து கொண்டு ஜபான் அதற்குத்தகுந்தபடி சரக்கு தயார் செய்து இந்தியாவிற்கு அனுப்பினால், ஜப்பானின் பட்டு ஏற்றுமதி மிகவும் விசேஷப்படு மென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாய் விளங்குகின்றது.

---

* ஜப்பான் நாணயம்.

தாழ்ந்த விலையுள்ள பட்டுக்களை ஜப்பானியார் தயார்செய்ய வேண்டு மானால் பாமிட்டோ வையும் (Pamito) பட்டு சல்லாவையும், சுயப்பட்டல்லாத மட்டப் பட்டையும், தயார் செய்வதில் பிரயோகப் படுத்திவரவேண்டும். அல்லது கலக்க வேண்டும். ஏனென்றால் அப்போது சரக்கு நேர்த்தியானதாகவும் கெட்டியாகவு மிருப்பது போல் பார்வைக்குத் தோன்றும். அப்படிச் செய்யாவிடில் சீனு பட்டு சாட்டீனுலும் மற்றப் பட்டுத்துணிகளாலும் தோற்கடிக்கப் பட்டுப் போம். ஜப்பான் பட்டு வர்த்தகர்களுக்குள் மிதமிஞ்சின போட்டி உண்டாயிருப்பதால் இந்தியா வியாபாரிகள் அவர்களுடன் வியாபாரம் செய்வதில் நஷ்ட முண்டாய் விடுமோ என்று அஞ்சுகிறார்கள் ஆகையால் வியாபாரம் செய்யும் விதத்தையும் ஜப்பான் வியாபாரிகள் விருத்தி செய்து கொள்ள வேண்டு மென்று மிஸ்டர் நோமா எடுத்துப் பேசினார்.

## International Cotton Congress.
## இன்டர் நேஷனல் பஞ்சுக் காங்கிரஸ்.

இங்கிலாண்டு ஐரோப்பா அமெரிக்கா முதலிய தேசத்தார்கள் ஒன்றுகூடி வருஷா வருஷம் பஞ்சு வியாபாரத்தைக் குறித்து ஒரு கூட்டம் கூடிவருகிறார்கள். இவ்வருஷம் அக் கூட்டம் ஹாலண்டு தேசத்தில் கூடினது. உலகத்தின் பல பாகங்களிலிருந்து அநேக பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். யுனைட்டெட் ஸ்டேஸ்களிலிருந்துகூட 25-பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். இங்கிலாண்டிலிருந்து வந்திருந்த மிஸ்டர் J. B. டாட்டர்சங் என்பவர் சபா நாயகரா யிருந்தனர்.

பஞ்சு வியாபாரத்திலிருந் துண்டாகும் சூதாட்டத்தை விலக்குவதற்குள்ள ஒரே உபாயம் என்னவென்றால் எந்தெந்த தேசத்தில் பூசாரம் பொருத்தமா யிருக்கிறதோ அந்தந்த தேசத்தில் பருத்திப் பயிர் சாகுபடியை விஸ்தீரணம் படுத்துவதுதான் என்று சொன்னார்.

இந்தக் கூட்டத்தில் ஒரு முக்கியமான தீர்மானம் ஒன்று செய்யப்பட்டது. அது என்னவெனில் இந்தியாவைத் தவிர மற்ற எந்த தேசத்திலும் பருத்திப்பயிர் உடனேயும் விசேஷமாகவும் பயிர் செய்ய முடியாம லிருப்பதால் இந்தியாவில் அப்பயிர் சாகுபடியை விசேஷமாகச் செய்துவரும்படியாக இந்தியா கவர்ன்மெண்டார் வருஷவாரி விசேஷமான திரவியம் கொடுத்துவர வேண்டுமென்று இந்த காங்கிரஸ் கேட்டுக்கொள்ளுகிற தென்று ஒரு தீர்மானம் பாஸ் செய்யப்பட்டது.

பஞ்சை சோதனை செய்வதற்காக பிரஞ்சு தேச நெசவுக்காரர்கள் ஒரு உபாயம் கண்டு பிடித் திருப்பதற்காக அவர்களுக்கு வந்தனம் அளிக்கவேண்டு மென்றும் அம்மாதிரியான பரிசோதனை செய்யும் அவுஸ்கள் பஞ்சு இறக்குமதி செய்யப்படும் துறைமுகங்களில் கட்டப்பட வேண்டுமென்று இந்த காங்கிரஸ் சிபார்சு செய்கிறது என்று மற்றொரு தீர்மானமும் செய்யப்பட்டது.

இங்கிலாண்டிலிருந்து வந்திருந்த பிரதிநிதியாகிய சர்சார்லஸ் மாக்காரா என்பவர் இங்கிலாண்டிற்குத் திரும்பிப் போனவுடன் இந்த காங்கிரசில் நடந்தேறின முக்கிய விஷயங்களைக் குறித்துப் பேசினார். அமேரிக்கர்கள் பஞ்சு மூட்டைகளை (Bales) "பாக்" செய்யும் அற்புதத்தைப் பற்றிப்பேசினார். மாதிரிக்காக அமெரிக்காப்பிரதிநிதிகள் நூதனமாக பாக்செய்யப்பட்ட சிலமூட்டைகளை காங்கிரசிற்கு கொண்டுவந்து காண்பித்தார்கள் என்றும் புதிய பேல்கள் முந்திய பேல்களைப் போல அதே அளவு பஞ்சை உடைத்தாயிருந்த போதிலும் அதன் பெருமன் குறைந்து போயிருக்கிற தென்றும் இதற்குமுன் 100மூட்டைகளைஏற்றிக்கொண்டு போன அமேரிக்காதேச வாக்கின் அவ்வளவு பஞ்சுகளையும் 25 மூட்டைகளில் ஏற்றிக்கொண்டுபோய் விடுமென்றும் அவ்வளவு நெருக்கி

பேல்கள் பாக் செய்யப்பட்டிருக்கின்றனவென்றும் சொன்னார்.

இப்படி பேல்களை நெருக்கி பாக் செய்வதால் ஈரம் உள்ளே புகுவதற்கிடமிருக்க மாட்டாது. நெருப்பினால் உண்டாகும் அபாயம் குறைந்து போகும்; ரயில் சார்ஜ் ஸ்டீமர் சார்ஜும் குறைந்து போகும். இப்படி பாக் செய்யும் விதம் பலப்பட்டால் வருஷத்தில் 10-லக்ஷம் சவரன் கணக்காக செலவு மீதப்பட்டுப் போகும்; வாங்குகிறவர்களுக்கும் விற்கிறவர்களுக்கும் நன்மையைக் கொடுக்குமென்று சொன்னார். இந்தியாவின் பருத்திப் பயிரைப் பற்றி பேசி இந்த வருஷ மாசூலைக்கொண்டு 60-லக்ஷம் பேல் தேறுமென்று எதிர்பார்க்கப் படுகிற தென்றும் இது பெரும்பாலும் மட்டச் சரக்கா யிருந்தபோதிலும் ஐரோப்பாவிலுள்ள தேசத்தாரால் மிகவும் விரும்பப் படுகிறதென்றும் இந்தியா எவ்வளவிற்கு எவ்வளவு தாராளமாய் சப்ளை செய்கிறதோ அவ்வளவிற்கு அவ்வளவு ஐரோப்பா தேசத்தார்கள் அமெரிக்கா பஞ்சு வரவழைப்பதை விட்டுவிடுவார்கள் என்றும் எவ்வளவிற்கு எவ்வளவு பஞ்சு இந்தியாவில் அதிகமாக உற்பத்தியாகிறதோ அவ்வளவிற் கவ்வளவு இங்கிலாண்டிற்கு நன்மை என்றும் இந்த உலகத்தில் 15000-லக்ஷம் ஜனங்களிருந்தும் அத் தொகையில் மூன்றில் ஒரு பாகம் தான் செவ்வையாக ஆடை உடுத்தக் கூடியவர்கள் என்றும் நாகரீகம் பரவப் பரவ நாகரீகமற்றவர்களும் மாறி ஆடைகளை விரும்புவார்கள் என்றும் ஆகையால் தேவைக்கு மிஞ்சின பருத்தி பயிராய்விடப் போகிறதோ என்கிற அச்சம் தமக்கு கிடையவே கிடையாதென்றும் சொன்னார்.

(:o:)

# India and Lancashire.
## இந்தியாவும் லங்காஷையரும் தொழிலில் போட்டி.

:(o):

"லண்டன் மகாஜயின்" (London Magazine) என்று சொல்லும்படியான பத்திரிகையில் சேயின்ட் நிகால்சில் என்பவர் அடியிற் கண்டபடி எழுதியிருக்கின்றனர்.

* * *

இந்தியாவிலிருக்கும் பஞ்சு ஆலைகளின் புகைக்கூண்டுகளினின்று வருஷத்திற்கு வருஷம் எதேஷ்டமாக கிளம்பிவரும் புகைச்சலை ஒருவன் கவனித்துப் பார்த்தால் லங்காஷயரின் நிகரற்ற பலமான தொழிலுக்கு அந்தியகாலம் சீக்கிரம் வந்து கொண்டிருக்கிற தென்று எண்ணுவான்! அடியில் எடுத்துக் காண்பிக்கப்பட்டிருக்கும் கணக்கால் இந்தியா பஞ்சு ஆலைகள் எவ்வளவு துரிதத்தில் விருத்திஅடைந்து வந்திருக்கின்றன வென்று நன்கு விளங்கும். 1880-81 ல் 55 பஞ்சு ஆலைகள் தானிருந்தன; அவைகளில் 1,434,364, கதிர் களும் 12,739 தரிகளுமிருந்தன. 46530 மனிதர்கள் அவைகளில்வேலையில் அமர்ந்திருந்தார்கள். இருபது வருஷம் கடந்து கணக்கு எடுத்ததில் கதிர்களும் தரிகளும் மும்மடங்கு அதிகரித்திருந்தன. அதற்கு அடுத்த 10 வருஷத்தின் கணக்கை கவனிக்கின் இன்னும் மிக துரிதமான விருத்தியை அடைந்து வந்தன வென்று விளங்குகின்றது. 1910-11 ல் 5,773,824 கதிர்களுடனும் 74,585 தரிகளுடனும் 215,419 மனிதர்களுக்கு வேலை கொடுத்துக் கொண்டு 216 ஆலைகளிருந்தன. இவைகளில் 593,206,855 ராத்தல் நிறையுள்ள நூலும் 215,360,904 ராத்தல் நிறையுள்ள துணியும் தயார் செய்யப்பட்டன. 1911-12, இந்தியாவில் தயார் செய்யப்பட்ட 140 லக்ஷம் அந்தர் பஞ்சில் 60 லக்ஷம் அந்தர் இந்தியா ஆலைகளே பிரயோகப் படுத்திக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு அதிசயமான விருத்தியால் என்ன நன்மை இந்தியா விற்கு உண்டாயிருக்கிற தென்று சிலர் கேட்கக்கூடும். அதற்கு ஜவாப்பு என்ன வென்றால் இந்திய ஆலைகள், இந்திய மார்கட்டுகளில் எங்குபார்த்தாலும் பலமாய் வியாபித்துக் கொண்டு வந்த லங்காஷயரை அடியோடு துறத்திவிட இயலாமற்போனபோதிலும் ஒரு எல்லையிலிருந்து அடியோடு துறத்தி விட்டன. ஏனேனில் இப்போது மான்ச் சஸ்டர், இந்தியாவில் சுதேசிகள் வருஷா வருஷம் 10 லக்ஷ கணக்காய் வாங்கிவந்த மட்ட காடா ஜவுளிச்சரக்கை இந்தியாவிறகு ஏற்றுமதி செய்கிறதில்லை. இந்தியா ஆலைகளும் உள்நாட்டுக் கைத்தறிகளுமே இந்தத்தேவையை நிறப்புவது மன்றி சுமார் 55 லக்ஷம் மனிதர்களுக்கும் பிழைப்பு கொடுத்து வருகின்றன.

ஊன்றியோசிக்கின், மட்ட சீமை ஜவுளி சம்பந்தப்பட்ட வரையில் இந்தியாவிற்கும் லங்காஷயருக்கும் இருந்தசம்பந்தம் அடியோடு விட்டுப்போய் விட்டது. லங்கஷயர் இந்தியா விற்கு மட்ட சரக்குகள் ஏற்றுமதி செய்ததுபோக, இந்தியா பலதேசங்களுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது; அவ்வேற்று மதியும் வருஷா வருஷம் அதிகரித்துக் கொண்டே போகின்றது. இந்தச் சரக்குகள் பெரும்பாலும் பிரக்கியாதி பெற்ற மெசர்ஸ் டாட்டா கம்பெனியார் மூலியமாக பம்பாயிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்திய ஆலைத் தொழில் மகா சிறந்துவிளங்கி பிரகாசித்து காலஞ் சென்ற ஜேம்ஸ்ட்ஜி நாசர்வான்ஜி டாட்டாவின் புத்திர ராகிய சர் டோராப் டாட்டா என்பவர் ஷை கம்பெனிக்குத்ததலைவர். இவர் வியாபார ஞானம் அமையப் பெற்ற பார்சி வர்த்தகர். லங்காஷயரின் ஆலைத் தொழில் சாமானியமானதல்ல; அது ஒரு பிரமாண்டமான ஆலமரம். இந்திய ஆலைகள் இது வரையில் செய்திருப்ப தெல்லாம் கூடி அதனுடைய ஒரு அற்பமானகிளையை மட்டிலும் முறித்திருக்கின்றன. ஆயினும் அதைச் சிறிதும் சட்டை செய்யாமல் பலமாகாவும் கம்பீரமாகவு மிருக்கிறது. இந்தியன் ஆலைகள் எவ்வளவு அதிகப்படியான வேலைகள் செய்த போதிலும் இந்தியாவிலுள்ள முப்பத்திரண்டு கோடியே பத்து லக்ஷம் சுதேசிகளில் கேவலம் ஒரு அற்ப பாகத்தாருக்குக் கூட ஜவுளி சப்ளை செய்ய இயல்பற்றனவா யிருக்கின்றன. 1911-12 ல் 23,040,000, பவுன் விலை மதிப்புள்ள பருத்தித்துணி இறக்குமதி செய்ய இந்தியா கட்டாயப்படுத்தப்பட்டது. இதில் 10 ல் 9 பாகம் பெருமானமுள்ளதுணி லங்காஷயரிலிருந்து இறககுமதி செய்யப்பட்டிருக்கிறது. இன்னொரு ஆச்சரியம் என்ன வென்றால், லங்காஷயர் இந்தியா வுடன் வியாபாரம் செய்து வந்த இவ்வளவு வருடகாலங்களுக்குள் சென்ற வருடம்தான் மகா அதிகமான லாபத்தை அடைந்திருக்கிறது.

இந்திய மில்கள் என்ன பாடுபட்டு வந்தபோதிலும் லங்காஷயரை இந்தியன் மார்க்கட்டை விட்டு விரட்ட அனேக வருஷ காலங்கள் பிடிக்கும். இப்போதிருக்கும் இந்திய ஆலைகள் மட்டச்சரக்கை தயார் செய்யமுடியுமே யொழிய நாஜூக்கான துணிகளை தயார் செய்ய முடியாது. ஏனென்றால் அவைகளுக்கு இரண்டு இடஞ்சல்க ளிருக்கின்றன. ஒன்று என்ன வென்றால் இந்தியாவின் பஞ்சைக் கொண்டு, அமெரிக்கா பஞ்சு, ஈஜிப்ட் பஞ்சு போலல்லாமல், மிஷின் மூலியமாக நாஜூக்கான துணி நெய்யமுடிய வில்லை. இரண்டாவது, மெஷின் மூலியமாக நாஜூக்கான துணி நெய்யவும் அவைகளில் வேலைப்பாடு அமைந்திருக்கும்படி செய்யவும் இந்திய வேலைக்காரர்களுக்கு திறமை கிடையாது. ஆகையால் உயர்ந்த ரகங்கள் எல்லாமே நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டியதா பிருங்கின்றன.

ஆயினும் லங்காஷயர் இந்த உன்னத நிலையில் எப்போதும் சாஸ்வதமாயிருக்குமென்று நினைப்பதற்கும் பெரும்பாலும் இடமில்லை. ஏனெனில் இந்தியா அதனுடைய பஞ்சு உயர்ந்ததினுசாக்க பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டு வருகின்றது!

லங்காஷயர் இவ்வளவு உன்னதமான நிலைமையிலிருந்தும் இந்தியாவிடம் அச்சமில்லாமலில்லை. அதனுடைய ஆலைகள் தலை எடுக்காவண்ணம் தன்னால் இயன்ற இடைஞ்சல்களைச் செய்து வருகின்றது. 1894 ம் வருடத்தில் துணிகள் பேரில் "Countervailing Duties " என்று சொல்லும்படியான எதிர்த்தீர்வை போட்டுவரும்படியாகத் தூண்டினது. இதற்கு என்ன சமாதானம் லங்கஷயர் சொன்னதென்றால், லங்காஷயர் சரக்கு இறக்குமதியின் பேரில் இந்தியா தீர்வை போட்டுவருகிறபடியால், அதனுடைய சொந்த ஆலைச் சரக்கின் பேரிலும் தீர்வை செலுத்த வேண்டுமென்பதே.

***

இந்த எதிர் வரியின் மூலமாக மட்டிலும் 1909-10ல் இந்தியா ஆலை சுவான்தார்கள் 267,000 பவுன் கவர்ன்மெண்டிற்குச் செலுத்தியிருக்கிறார்கள். ஆதலால் இந்திய ஆலைக்காரர்கள் 100-க்கு 3½ வீதம் லாபத்தில் இழக்கவேண்டியதா யிருக்கிறது.

***

இந்த எதிர் தீர்வையால் இந்தியா லங்காஷயருடன் போட்டிபோட இயலாமலிருப்பது மன்றி ஜப்பானும் இந்திய மார்க்கட்டிற்குள் நுழையும்படியாக அத்தீர்வை செய்திருக்கிறது.

***

இந்த எதிர்வரி போடப்படுவதற்கு லங்காஷயர் காரண கர்த்தாவாக விருந்ததுமன்றி இந்தியாவிலிருந்து வரும் இந்தியமாணவர்கள் தங்களுடைய ஆலைகளில் தொழில் கற்றுக்கொள்ளக் கூடிய அனுமதி கொடுக்கவும் மறுத்து விட்டது.

———:++:———

## State Technical Scholarships.

## கைத்தொழில் மாணுக்கர்களுக்கு சர்க்கார் உபகாரப் பணம்.

———(:*:)———

இங்கிலாண்டிற்குச் சென்று கைத்தொழில் படிப்பு படிப்பதற்காக இந்தியா கவர்ன்மெண்டார் 1909-ம் வருடம் முதல் மாணுக்கர்களுக்கு உபகாரப் பணம் (Scholarship) கொடுத்து வருகிறார்கள். இந்த உபகாரப் பணத்தை பெற்றுக்கொண்டு இங்கிலாண்டிற்கு அது விஷயமாக வருகிறவர்களுக்கு என்ன என்ன வசதிகள் அவ்விடத்திலிருக்கின்றன என்று விசாரணை செய்து ரிப்போர்ட் செய்யும்படியாக இந்தியா மந்திரியார் ஒரு கமிட்டி ஏற்படுத்தினார். இந்தக் கமிட்டிக்கு சர் தியாடர் மாரிசன் பிரசிடெண்டாகவும், சர். கிஷென்குப்தா முதலியானோர் மெம்பர்களாக யிருந்தார்கள். இவர்கள் அனுப்பியிருக்கும் ரிப்போர்ட் பகிரங்கப்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் கண்ட முக்கிய அம்சங்களை மட்டிலும் இவ்விடத்தில் எடுத்தெழுது கின்றோம். இந்தியா கவர்ன்மெண்டார் உபகாரப்பணம் கொடுத்து வருவதின் நோக்கம்என்னவென்றால் மாணுக்கர்கள் இங்கிலாண்டிற்குப்போய் படித்து திரும்பிவந்தவுடன் சுதேசத்திலிருக்கும் ஏற்கனவேயுள்ள கைத்தொழில்களை விருத்தி செய்யவேண்டும், நூதன கைத்தொழிற்களையும் விருத்திசெய்ய வேண்டுமென்பதே.

1912-மார்ச்சுமீ 31உ யுடன் முடிவாகும் வருடங்களுக்குள் நெசவு தொழிலுக்கு 24, சுரங்க வேலைக்கு—19, எலக்ட்டிரிக்கல் இன்ஜினீரிங் 7, தோல் 5, உலோகவேலை 3 பேர்கள் ஆக 66 பேர்களுக்கு உபகாரப்பணம் கொடுத்திருக்கிறார்கள்.

இந்திய மாணுக்கர்கள் சர்வ கலாசாலைகளில் பயின்றாலும் சரி, கைத்தொழிற்பள்ளிக்கூடங்களில் பயின்றாலும்சரி அவர்கள் அவர்களுடையவகுப்பார்களைப் போல சராசரி சாமர்த்தியமுடையவர்களாக யிருக்கிறார்கள். ஆனால், இந்தியாவிலிருந்து புறப்படுவதற்கு முந்தி போதுமான அஸ்திவாரப்படிப்பு அடைந்திருக்கவேண்டும். அதாவது பி. எஸ்ஸி பரிக்ஷையிலாவது அல்லது சாஸ்திரப்படிபுடன் பி.எ. பரிக்ஷையிலாவது தேறி யிருக்கவேண்டும் அல்லது அதற்குச் சமமான படிப்பை அடைந்து சர்ட்டிபிகேட் பெற்

திருக்க வேண்டும். இங்கிலாண்டில் கைத்தொழிற் படிப்பு படிப்பதுடன் சொற்ப காலம் வரையில் சம்பந்தப்பட்ட ஆவுசில் அல்லது கம்பெனியில் சேர்ந்து அனுபோக மடையும்படி செய்யவேண்டும்; கவர்ன்மெண்டார் உபகாரம் கொடுக்கும்போது அனுபோகம் அடைவதற்காக ஏற்பட்ட காலத்தையும் சேர்த்துகொண்டு உபகாரம் கொடுத்து வரவேண்டுமென்று ஷை கமிட்டியார் சிபார்ச்சு செய்திருக்கிறார்கள்.

:++:

# Co-operation and Agriculture.

## ஐக்கிய முயற்சியும் விவசாயமும்.

## The Fifth Chingleput District Co-operators' Conference.

## செங்கற்பட்டு ஜில்லா ஐக்கிய சங்கங்களின் 5-வது வருடத்திய கான்பரன்ஸ்.

செங்கற்பட்டு ஜில்லா ஐக்கிய சங்கங்களின் 5-வது வருடத்திய கான்பரன்ஸ் சென்ற மேம்ீ 31வ உத்தரமேரூரில், ஷை சங்கத்தாரால் இதற் கென்று புதிதாய்க் கட்டப்பட்ட கட்டடத்தில் நடத்தப்பட்டது. இதற்கு முந்தி ஐக்கிய நாணயசங்கங்களுக்கு ரிஜிஸ்டிராராகவிருந்து இப்போது திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு திவானாகவிருக்கும் திவான்பகதூர் P. ராஜகோபாலாச்சாரியார் ஷை புதிய கட்டடத்தைத் திறந்ததுமன்றி கான்பரன்சிற்கும் பிரசிடெண்டாக விருந்தனர். இக்கான்பரன்சிற்கு கலெக்ட்டர் மிஸ்டர் R. A. கிரேகாம் ஐ. சி. எஸ், மிஸ்டிரஸ் கிரேசாம் திவான் பகதூர் M. ஆதிநாராயணய்யா, ராவ்சாகேப் விஜயராகவாச்சாரியார், ஐக்கிய சங்கங்களுக்கு அசிஸ்டன்ட் ரிஜிஸ்டிராராகவிருக்கும் மிஸ்டர் H. வேதாசலமய்யர் உள்பட அனேக கனதனவான்களும் ரயத்துகளும் விஜயஞ் செய்திருந்தார்கள்.

நல்வரவு கூறினது.

யுத்தரமேரூர் ஐக்கிய நாணய சங்கத்திற்கு பிரிசிடெண்டாக விருக்கும் மிஸ்டர் A. வெங்கட கிருஷ்ணய்யர் பிரதிநிதிகளுக்கு நல்வரவு கூறி இப்போது திறக்கப்பட்ட புதிய கட்டடம் ஐக்கியநாணய சங்கத்தாரால் கட்டப்பட்டிருப்பதால் ஐக்கிய முயற்சி இந்த ஜில்லாவில் ஜனங்களுடைய மனதை அவ்வளவு தூரம்பற்றியிருக்கிற தென்று தானே விளக்கக் கூடியதாயிருக்கிற தென்றும் ஆதலால்தாம் எடுத்துச் சொல்ல வேண்டியதனவசியம் என்றும் கிராமசுகாதாரம் கிராமப் போக்குவரத்துகள், படிப்பு, நீர்ப்பாய்ச்சல், கிராமப் பஞ்சாயத்து, கிராமசம்பந்தமான அனேகவிஷயங்களும் கூட்டு ஐக்கிய முயற்சி மூலியமாக விருத்தி செய்யப்படவேண்டும் என்று சொன்னார்.

இதன் பிறகு சபாநாயகர் பிரசங்கஞ் செய்ய ஆரம்பித்து அடியிற்கண்டபடி பொருள்படும் படியாகப் பேசினார்:—

கனவான்களே! இந்த கான்பரன்சிற்கு நான் பிரசிடெண்டாக விருப்பது எனக்கு சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. ஏன் எனில் ஆதியில் இந்த ஜில்லாவில் இந்த ஐக்கியசங்கங்களை நான் ஸ்தாபிக்கும் போது என்னுடனிருந்து பாடுபட்ட அனேக கனதனவான்களுடைய முகங்களை இக்கூட்டத்தில் நான் பார்க்கிறேன். சென்னை ராஜதானியில் செங்கற்பட்டு ஜில்லாதான் ஐக்கிய நாணயசங்கங்களுக்கு ஜனனஸ்தலம் என்று சொல்லவேண்டும். பயனைக் கொடுக்கக் கூடிய (Productive) முதல் சங்கம் இந்த ஜில்லாவைச் சேர்ந்தது; இந்த ராஜதானியில் ஒழுங்காகநடத்தப்பட்டு வெற்றி பெற்றிருக்கும் அனேகசங்கங்கள் இந்த ஜில்லாவைச் சேர்ந்தன. இப்போது இம்மாகாணத்தில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் ஆயிரம் சங்கங்களுக்குள் சுமார் 200 சங்கங்கள் இந்த ஜில்லாவைச் சேர்ந்தன. சங்கங்களின் எண்ணிக்கையில் இந்த ஜில்லா சிறந்து விளங்குவதுடன் நல்ல சங்கங்களும் இந்த ஜில்லாவில் தானிருக்கின்றன. இந்த ஜில்லாவில்தான் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அல்லாத அனேகர்கள் இச்சங்கங்களை ஏற்படுத்துவதிலும் நடத்துவதிலும் கலந்து உழைக்கின்றார்கள். முதலில் ஆரம்பிக்கப்பட்ட மூன்று கூட்டு முயற்சி யூனியன்களும் இந்த ஜில்லாவிற்குச் சொந்தமானவை. முதல் ரிஜிஸ்டிராராகவிருந்தவர் தாம் வேலை செய்த ஸ்தலத்தைதிரும்பிபார்க்க வரும் போது தாம் முதலில் இச்சங்களை ஏற்படுத்தினதில் சிறந்து விளங்கிய ஜில்லாவைப் பார்ப்பது தகுதியுடைய காரியம் என்று நான் எண்ணுகிறேன்.

2. இந்த சங்கங்கள் ஏற்படுத்தி 9 வருஷங்களாகின்றன. இந்தக் காலத்தில் அவைகள் எவ்வளவு விருத்தி அடைந் திருக்கின்றன என்று நான் எடுத்துச் சொல்லவேண்டியதனவசியம். நீங்களே அறிந்து கொண்

டிருக்கிறீர்கள். நானும் எனக்குப்பின்பு ரிஜிஸ்டிராராக விருந்தவர்களும் அனுப்பியிருக்கும் பரிபாலன ரிபோர்ட்டுகளில் அவ்விருத்தியாம்சம் தாக்கலாயிருக்றது. கனவான்களே! இந்த சமயத்தில், நான் என்ன சொல்ல விரும்புவது என்ன வென்றால் இப்போது செய்யப் பட்டுவரும் ஐக்கியமுயற்சியால் காணப்படும் சில குறைகளையும் அவைகளுக்கு இனிமேல்வரக்கூடிய அபாயங்களையும் கஷ்டங்களையும் எடுத்துச்சொல்லி உங்களுடைய கவனத்தை இழுப்பது அனுகூலமாயிருக்கும்.

## முயற்சியின் ஆதிவிருத்தாந்தம்.

இப்போது அதிர்ஷ்டவசமாய் இன்னும் நம்முடனிருக்கும் சர்பிரடரிக் நிக்கல் சனின் ஆச்சரியமானவும் உறுதியானவுமான முயற்சியால் இச்சங்கள் ஸ்தாபிக்கப் பட்டன வென்பது உங்களுக்கே தெரிந்த விஷயமானபடியால் நான் எடுத்துச் சொல்ல வேண்டியதனுவசியம். இம்மாகாண முழுதிலுமுள்ள உபாய ஜீவனியுள்ள ரயித்துக்களுடையவும் தொழிலாளிகளுடைய பொருளாதார நிலைமையை நன்றாய் ஆராய்ந்து பார்த்து இட்டாலி ஜர்மனிமுதலிய மேல் நாட்டுகளிலிருக்கும்படியான பாங்கிகள் போல் இவ்விடமும் ஸ்தாபித்தால் அனுகூலமாயிருக்கு மென்று முடிவு செய்தனர். இதைப்பற்றி நீண்ட காலம் ரிப்போர்ட் தயார் செய்வது 1895ல் ரெவினியூ போர்டாருக்கு அனுப்பினார். அப்போதிருந்த போர்டார் அவருடைய பிரரேபனையை ஆதரிக்காமல் கடினமாக கண்டனம் செய்தார்கள். சென்னை ராஜதானியின் நிலைமையை உத்தேதித்துப் பார்க்குமளவில் அப்பேர்ப்பட்ட பாங்கிகள் ஸ்தாபிப்பது சாத்தியமான காரியமல்ல வென்றும், அப்படி ஒருக்கால் சாத்தியப் பட்டாலும் அவைகள் ரயித்துகளுடைய கஷ்டங்களை நிவர்த்தி செய்யக்கூடியவைகளல்ல வென்றும் அபிப்பிராயம் கொண்டார்கள்.

அப்போது போர்டார் பேதப்பட்ட அபிப்பிராய முடையவர்களாக விருந்தார்கள். ஆயினும் கவர்ன்மெண்டார் இதுவிஷயமாக யாதொரு முடிவான தீர்மானம் செய்யாமல் மிஸ்டர் நிக்கல்சனிடம் ரூபாய் இரண்டாயிரம் கொடுத்து பரிக்ஷார்த்தமாக சில சங்கங்கள் ஏற்படுத்தும்படியாகச் செய்தார்கள்.

இதன்பிறகு இது சமபந்தமான எல்லா விஷயங்க இந்தியா கவர்ன் மெண்டின் ஆலோசனைக்கும் பைசலுக்கும் வந்து விட்டன. அப்போதிருந்த வைசிராகிய லார்ட் கர்ஜன் இந்த சங்கங்களின் பிரஸ்னையை தாமே நேராய் ஆராய்ந்து ஆலோஜனை செய்து ஒரு கமிட்டி ஏறப்படுத்தி அதில் மிஸ்டர் நிக்கல்சனும் மெம்பராயிருக்கும்படி செய்து ஆலோசனை செய்யும்படியாகச் செய்தனர். இதன்பயனாக 1904-ம் வருஷத்திய 10-வது ஆக்ட் பாஸ் செய்யப்பட்டது. ஜில்லாகலெக்டர் அந்தஸ்தையுடைய ஒரு ஆபீஸர் ஒவ்வொரு மாகாணத்திற்கும் ரிஜிஸ்டிராராக நியமிக்கப்படும் படியும் சாங்கிஷன் செய்யப்பட்டது. ஆகையால் நான் இம்மாகாணத்திற்கு முதல் ரிஜிஸ்டராக நியமிக்கப்பட்டு, சங்கங்களை ஆதியில் ஸ்தாபிக்கும் படியான கடமை எனக்கு விழுந்தது.

கிராமங்களைப் பொருக்கி எடுத்து சங்கங்களை ஸ்தாபிப்பது சாமானிய காரியமாயில்லை; கிராமங்களை தெரிந்தெடுத்த பின்பு, சங்கங்களை ஸ்தாபிக்க ஜனங்களை தூண்டவேண்டியதாயிருந்தது.! கூட்டுமுயற்சி சங்கத்தின் கொள்கை ஒவ்வொன்றையும் விட்டுக் கொடுக்க வேண்டியதா யிருந்தது. வரை அறுக்கப்படாத பொருப்பு அமைந்த சங்கங்கள் ஏற்படுத்துவது கேவலமாய் மதிக்கப்பட்டது. வரை அறுக்கப்பட்ட பொறுப்பும் பொருத்தமாயில்லை பணக்காரர்கள் ஏழைகளுடன் சேருவதில் தங்களுக்குப் பலனில்லை என்று எண்ணினார்கள். ஏழைகள் பணக்காரர்கள் பேரில் நம்பிக்கை வைக்க சுணங்கினார்கள். நான் சர்க்கார் அதிகாரத்தைப் பிரயோகப்படுத்தி யிருந்தால் ஜனங்களை கட்டாயப்படுத்தி சிலமாதிரி சங்கங்கள் என்இஷ்டப்படி ஆதியிலேயே ஸ்தாபித்திருப்பேன். அப்படி செய்வது பிசகு என்று உணர்ந்து ஜனங்களுக்குச் சங்கங்களின் நன்மையை எடுத்து வற்புறுத்திச் சொல்ல பிரயாசைப் பட்டேன். இச் சங்கங்கள் மிஸ்டர் நிக்கல்சனால் உற்பத்தி செய்யப்பட்டன என்றால் இவைகள் நாளதுவரையில் அடைந்திருக்கும் விர்த்தியாம்சத்தின் கீர்த்தி அப்போது ரெவினியூ மெம்பராயிருந்த மிஸ்டர் காபிரியல் ஸ்டோக்சைச் சேர்ந்தது. இவர் கூட்டு முயர்ச்சி கொள்கைகளைப் பற்றி கவனிக்கவேண்டிய தில்லை என்றும் எப்படியிருந்தாலும் சங்கங்களை ஸ்தாபித்து விட்டால் அனுபோகத்தின் பேரில் ஒழுங்கு படுத்திக்கொள்ளலா மென்று எனக்கு யோஜனை சொன்னார். அதன்பேரில் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன,

மிஸ்டர் ஸ்டோக்ஸ் பிரதமத்திலேயே ஒரு முக்கியயோஜனை சொன்னார். அதாவது ஒரு சங்கம் புதிதாய் ஏற்படுத்தினவுடன் அது வெளியிலிருந்து பணம் சேகரிக்க முடியாமல் போய்விட்டால் இறந்துபோகுமென்றும் ஆதலால் பணம் சப்ளை செய்யும்படியான ஆதரவு ஒன்றிருப்பது அவசியம் என்று சொன்னார். அதன்பேரில் "மதிராஸ் சென்டிரல் அர்பன் பாங்" என்கிற பாங்கி ஸ்தாபிக்கப்பட்டது. இதன் நோக்கம் என்னவென்றால் லாபகரமான வட்டியை விரும்பும் சென்னைவாசிகள் இந்த பாங்கில் வட்டிக்குப் போடவேண்டு- மென்பதும் அந்த பணத்தைக் கொண்டு கிராம ஐக்கிய நாணய சங்கங்களுக்கு கடன் கொடுத்து வாங்கலாம் என்பதே. மதிராஸ் சென்டிரல் அர்பன்பாங் அதன் வேலையைச்செய்து முடித்து மற்ற சங்கங்களுக்கு மிகுந்த பிரயோஜனமாயிருந்து வருகிற தென்பதற்கு நான்வேறே திருஷ்டாந்தம் எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. இதைப் போலவேயும் இதன் நோக்கத்தையும் உடைத்தாய் அனேக ஜில்லா பாங்கிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதே போதுமான அத்தாட்சியாயிருக்கின்றது. பணசப்ளை சம்பந்தப்பட்ட வரையில் இந்த ராஜதானியில் யாதொரு தொந்திரவும் உண்டானதில்லை. இது சென்டிரல் அர்பன்பாங் செய்து வந்திருக்கும் நன்மை சென்டிரல்; அர்பன் பாங்கி $2\frac{1}{2}$ வட்டி முதல் 6 வட்டி விகிதம் பணம் கடன் வாங்கக் கூடியதாயிருந்தும் 7 முதல் $7\frac{1}{2}$ வட்டி விகிதம் கடன் கொடுக்கிறதே என்றும் ஷை பாங்கி பங்குதாரிகள் வருஷவாரி 10 முதல் 12 வரையில் லாபம் சம்பாதிக்கிறார்கள் என்று அதன் பேரில் ஒரு புகார்உண்டானது. இவைகளில் எல்லாம் அக்ஷேபிக்கக்கூடிய யாதொரு செய்கையையும் காணோம். சென்டிரல் அர்பன் பாங்க் அதன் கடமைகளை மிகவும் ஒழுங்காய் நடத்தி வெற்றி பெற்று விளக்குகின்றன.

## கவர்ன்மெண்டு உதவி.

ஐக்கிய முயற்சி ஏற்பாடு இவ்வளவு சீக்கிரத்திலும் இவ்வளவு மும்மரமாயும் விருத்தியடைந்து வந்திருப்பதற்குப் பிரதமகாரணம் என்னவென்றால் ஆரம்பமுதல் இம்முயற்சி கவர்ன்மெண்டு இலாக்காக்காரர்களால் நடத்தப்பட்டு வருகிறது. கவர்ன்மெண்டார் நடத்திவருகிறபடியால் ஜனங்களுக்கு அவைகளின் பேரில் நம்பிக்கை விழுந்திருக்கிறது. சென்ற வருஷ கோவாபரேடிவ் கான்பரன்சில் ஆனரபில் அட்கின்சன் ஐக்கிய நாணய சங்கங்கள் விருத்தியாகி வரவே ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் பலகீனப்பட்டுக்கொண்டு வருகின்றன என்று சொன்னார். இதற்கு காரணம் விசாரிக்க வெகுதூரம் போகவேண்டியதில்லை. நானே அதற்குக் காரணம் சொல்லுகிறேன். இந்த ஜில்லாவில் நான் சங்கங்கள் ஸ்தாபிக்கஆரம்பித்த போது இந்தியன் கம்பெனிச் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்ட அனேக பிராவிடென்டு நிதி சங்கங்கள் உடைந்துபோன. அதனால் ஜனங்கள் பணத்தை இழந்து ஐக்கிய நாணய சங்கங்களின்பேரில் நம்பிக்கைவைக்க பயந்தார்கள்.

பிராவிடெண்டு பண்டுகள் உடைந்துபோன காரணத்தை நான் எடுத்துக்காட்டியே ஐக்கிய நாணய சங்கங்களின் பேரில் நம்பிக்கைவைக்கும்படி தூண்டினேன். 1909-ம் வூ த்திய சட்டப்படி இச்சங்கங்களை சோதிக்கவும் பரிசிலனை செய்யவும் சர்க்கார் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் ஆதலால் அவைகளில் யாதொருபயமுமில்லை என்றும் எடுத்துச்சொனேன். கவர்ன்மெண்டாரிட மிருந்து யாதொரு பணம் வேண்டியதில்லை என்றும் நீங்களே சொன்னீர்கள். கடனை வசூல்செய்ய சீக்கிரமான மார்க்கம் வேண்டுமென்று நீங்கள் கேட்கவில்லை. ஆனால் நீங்கள் அப்போது என்னைக் கேட்டதெல்லாம் கூடி என்னவென்றால் கவர்ன்மெண்டார் மேற்பார்வையும் கணக்கும் பரிசோதனையுமே! இவைகள் எல்லாம் உங்களுக்கு கொடுப்பட்டுப்போய் விட்டன. பணம் சப்ளை செய்யவேண்டிய பொறுப்பு சென்டிரல் பாங்கியைச் சேர்ந்ததாகப் போய்விட்டது. ஒரு கிராமத்தில் சங்கம் ஏற்படுத்தப்பட்ட பின்பு ரயத்து தேவையுள்ள பணத்தை மிக சொற்ப வட்டிக்கு பெற்றுக் கொள்ளுகிறான். இப்பேர்ப்பட்ட வசதிகள் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருப்பதால் இம்முயர்ச்சி இவ்வளவு தீவிரத்தில் மும்மரமாய் பரவியிருக்கிறது. ஆகையால் அர்பன்பாங் தாராளமாய் பணம் சப்ளை செய்ததை முன்னிட்டும் கவர்ன் மெண்டாரே கணக்குகளை பரிசோதனை செய்வதாலும் இச் சங்கங்கள் இவ்வளவு விருத்தியாம் சத்தைத் அடைந்திருக்கின்றன. என்று நான் மறுபடியும் சொல்லுகின்றேன்.

## ஒரு நேரிடை.

ஐக்கிய சங்கங்களை இம்மாகாணத்தில் கவர்ன்மெண்டாரே ஸ்தாபித்து நடத்தி வரும்போது இட்டாலி ஜெர்மனி முதலிய தேசங்களில இச்சங்கங்களின் உற்பத்தி நேர் விரோதமாக விருக்கின்றது அத்தேசங்களில் ஆரம்பத்தில் ஒரு மனிதன் அல்லது சிலர்கூடி ஆரம்பிததிருக்கிறார்கள். பிரதமத்தில் கவர்ன்மெண்டாரே கலக்கவில்லை; சங்கங்கள் விருத்தியாயி தேசத்தின் பொருளாதார நிலைமையையும்வியாபாரத்தையும் பலப்படுத்த ஆரம்பித்தபின் கவர்ன்மெண்டார் அதைக்கண்ணுற்று அதற்கு வேண்டிய சட்டதிட்டங்களைச் செய்தார்கள். யுனைட்டெட் ஸ்டேட்ஸ் இங்கிலாண்டு-ஆகிய இத்தேசங்களில் கூட இச்சங்கங்களின் ஆரம்பத்தில் கவர்ன்மெண்டார் தலையிட்டதேயில்லை. சிலமனிதர்கள் கூடிதான் ஸ்தாபித்தார்கள். ஒருவருஷம் இரண்டுவருஷத்தில் அவைகள் விருத்திக்கிவந்துவிடவில்லை. 100 க் கணக்கான வருஷங்கள் ஆயிரக்கணக்கான வருஷங்கள் உழைத்த பிறகு பிரசித்தி பெற்றன. ஆனால் நம்தேச ஐக்கிய சங்கங்களின் க்ஷேமம் கவர்ன்மெண்டின் மேற்பார்வையைப்பொருத்தது. இப்போது இவ்வளவு தீவரத்தில் பரவி வந்திருச்கும் சங்கங்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் ஜர்மனி, இட்டாலி ஜனங்களைவிடநம் தேச ஜனங்களுக்கு ஐக்கிய உணர்ச்சி அதிகமாயிருக்கிறதென்று எண்ணக்கூடியதா யிருக்கிற தென்று நாம் மயங்கக் கூடாது ! ஐக்கிய நாணய சங்கங்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி நம்மவர்களுக்குள் ஐக்கிய உணர்ச்சியும் விருத்தியாயிருக்கிறதா என்பதை கவனித்து ஆராயவேணும் ! ஆகையால் சங்கங்களின் எண்ணிக்கையைப் பார்த்துநாம்மகிழ்ந்து போகக்கூடாது ! கவர்ன்மெண்டார் சங்கங்களை மேற்பார்வைபார்த்து வரும் கடமையை நிறுத்திப் போட்டதாக விளம்பரித்தால் அந்த நிமிஷத்திலேயே அநேக சங்கங்கள் நீர் குமிழிபோல் மறைந்துபோகும். இப்படி நான் செல்லுவதால் கவர்ன் மெண்டார் தங்களுடைய கடமைகளை நிறுத்திவிடவாவது அல்லது சுறுக்கிப்போடவாவது தீர்மானித் திருக்கிறார்கள் என்று நீங்கள் எண்ணக்கூடாது. நம்மவர்களுக்குள் ஐக்கியபான்மை இன்னும் வேரூன்றவில்லை என்பதை எடுத்துக் காண்பிப்பதற்காக அப்படி நான் சொன்னேன்.

## அதிகப்படியான அங்கத்தினர்.

கிராமாந்திரங்களில் இன்னும் எதேஷ்டமான சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டிய தவசிய மாயிருப்பதால் அவைகளை ஸ்தாபிக்கவும் தீவிரமாய் வளர்க்கவும் தகுந்த ஏற்பாடுகள் கவர்ன்மெண்டார் செய்ய வேண்டுமென்று வேண்டி ஒரு தீர்மானம் சென்ற கான்பரன்சில் பாஸ் செய்யப்பட்டது. இந்த புதிய சங்கங்களை ஸ்தாபிக்க நீங்கள் என் கவர்ன் மெண்டாரைக் கேட்டுக் கொள்ள வேணும்.! இம்முயற்சி ஆரம்பித்து 9 வருஷ மாகின்றது. ஆயிரம் சங்கங்கள் வரையில் உற்பத்தியாகி நடை பெற்று வருகின்றன. இவைகளால் அடைந்திருக்கும் அனுபோகத்தைக் கொண்டு இனி புதிய சங்கங்களை நாமே ஏற்படுத்திக்கொள்ள முடியாதோ? பரிக்ஷார்த்தமாக சில சங்கங்களை ஏற்படுத்தி வைக்கவேணு மென்கிற கருத்துடன் கவர்ன் மெண்டாரே முன்னுக்கு வந்து ஏற்படுத்திக் கொடுத்தார்கள். போதுமான அளவு சங்கங்கள் உற்பத்தியாய் விட்டன. கவர்ன் மெண்டார் இனி சங்கங்கள் உற்பத்தி செய்வதும் சிப்பந்திகளை அதிகரித்துக் கொண்டு போவதும் விரும்பத்தகுந்த காரியங்களல்ல ஆகையர்ல் கனவான்களே ! இனி புதிய சங்கங்களை ஸ்தாபிக்கும் பொறுப்பை நீங்களே வகித்துக் கொள்ளவேண்டும். எப்படி யிருந்தாலும் ரிஜிஸ்டர் செய்யும் கடமையும் மேல் பார்வைபார்க்கும் கடமையும் கவர்ன் மெண்டாரிடமே யிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

## சில ஊனங்கள்.

ஐக்கிய முயற்சி இப்போதிருக்கும் நிலைமையில்ஒரு கெடுதிகாணப்படுகின்றது. அதுயாதெனில் ஐக்கி முயற்சி பாவியிருக்கும் மற்ற தேசங்களில் ஜனங்கள் அவைகளின் காரணமாக அடைந்திருக்கும் சிக்கனம், முன் யோஜனை, தன் முயற்சி, தன்னடக்கம் ஆகிய இந்த குணதிசயங்கள் நம் ஜனங்களிடம் காணப்படவில்லை, பணம் தேவையுள்ள போது சொற்ப வட்டிக்கு கடன் வாங்குவதற்காக ஐக்கிய நாணய சங்கங்கள் ஏற்பட்டிருப்பதாக நினைக்கக் கூடாது!

சொற்ப வட்டிக்கித் தான் பணம் அகப்படுகின்றதே என்று அதிகப்படியான கடனும் வாங்கக்கூடாது. அப்பபடி வாங்கினால் மறுபடியும் கடன் சுமந்து போகும். ஆதியில் என்ன நோக்கத்துடன் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டனவோ அந்த நோக்கம் பலிதப்படாமற் போய்

விடும். ஒவ்வொரு கிராமத்திலிருக்கும் பிரேமுகர்கள் சொற்ப வட்டிக்குபணம் அகப்படும் பாக்கியத்தை கெடுத்துப் போடாமலிருக்கும்படி மற்றவர்களுக்கும் போதிக்கும்படி நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

### ஐக்கிய முயற்சி மூலியமாக செய்யப்பட வேண்டிய மற்றவைகள்.

ஐக்கிய முயற்சி இப்போதிருக்கும் நிலைமையில் காணப்படும் இன்னொரு ஊனம் என்னவென்றால் அதன்மூலியமாக இன்னும் செய்யப்பட வேண்டிய அனேக முயற்சிகள் செய்யப்படாமலிருக்கின்றன; இப்போது செய்யப் பட்டுவரும் முயற்சி நாணயசம்பந்தமான முயற்சி நாணய சம்பந்தமான முயற்சியைத் தவிர மற்ற முயற்சிகள் எல்லாம் ஏற்பாடு செய்வது கஷ்டமாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் கஷ்டமாயிருக்கிற் தென்று அவைகளை புறக்கணிக்கக் கூடாது. கடன் கொடுக்க மனிதர்கள் தயாராயிருக்கும் போது கடன் வாங்கிக் கொள்வது கஷ்டமல்ல ; ஆகையால் கனவான்களே ! ஐக்கியபான்மை மூலியமாகச் செய்யப்பட வேண்டிய மற்ற முயற்சிகளிலும் உங்களுடைய கவனத்தைத் செலுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது.

### யூனியன்கள்.

இந்த மாகாணத்திற் குள்ளிருக்கும் யூனியன் களுக்குள் மூன்று யூனியன் உங்களுடைய ஜில்லாவைச் சேர்ந்தன. அவைகள் ஒழுங்காய் நடைபெற்று வருகின்றன என்பதைக் கேள்விப்பட்டு சந்தோஷம் அடைகின்றேன். ஆயினும் சங்கங்களை மேல்பார்வை பார்க்க வட்டம் வட்டமாக சில சங்கங்களுக்கு ஒரு யூனியனிருக்கும்படியாக இன்னும் அனேக யூனியன்கள் ஏற்படவேண்டும். அவைகளுக்கு சர்வ அதிகாரமும் கொடுக்கப் படவேண்டும். அவைகள் மேற்பார்வை பார்ப்பதுடன் சங்களுக்குப் பணம் சப்ளை செய்யும் கடைமையும் அவைகளுடையனவாயிருக்க வேண்டும்.

### விரும்பப்படக் கூடிய விருத்தியாம்சம்.

இப்போதிருக்கும் நிலைமையில் மேலும் மேலும் சங்கங்களை ஸ்தாபித்துக் கொண்டு போவதில் பிரயோஜனமில்லை. ஒரு எல்லையில் யூனியன் ஏற்படுவதற்கு இரண்டொரு சங்கங்கள் குறைவாயிருக்கின்றனவென்று தோன்றினால் அந்த விடங்களில் மட்டிலும் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டும். மற்றபடி இப்போதிருக்கும் 200 சங்கங்களே போதுமானவை. உங்களுடைய ரிஜிஸ்டிரார் ஆனரபில் மிஸ்டர் சாமிக்கண்ணுப் பிள்ளை சில துர்பழக்கங்கள் சில சங்கங்களில் காணத்தலைப் பட்டிருக்கின்றன என்று சென்ற பரிபாலன ரிப்போர்ட்டில் ரிபோர்ட் செய்திருக்கிறார். ஆகையால் இப்போது நீங்கள் செய்யவேண்டிய காரியம் என்னவென்றால் இப்போதிருக்கும் சங்கங்களில் காணப்படும் துர்வழக்கத்தை பரிகரித்து இவைகள் ஒழுங்காக நடை பெறுகின்றனவா என்று பரிசிலனை செய்யவேண்டும்.

### பரிசீலனை.

ஐக்கிய முயற்சி ஏற்பாட்டிலிருந்து கவர்ன்மெண்டாரை வரவர விலக்கிவிட வேண்டியது உத்தமமான காரியம். யூனியன்கள் உற்பத்தியாகி பலப்பட்டு அவைகளே மேல்விசாரணையும் பரிசோதனையும் செய்ய பக்குவமடையும் பரியந்தம் கவர்ன்மெண்டார் எப்போதும் போல மேல்விசாரணையும் பரிசிலனையும் வைத்துக் கொண்டிருப்பார்கள் என்று சென்ற கான்பரன்சில் மேன்மைதங்கிய கவர்னர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.

கனவான்களே! இந்த நீண்ட பிரசங்கத்தைப் பொருமையுடன் கேட்டுக் கொண்டிருந்ததற்காக நான் வந்தன மளிக்கிறேன். இந்த ஜில்லாவில் நீங்கள் அடைந்திருக்கும் வெற்றி சிலாகிக்கக்கூடியது தான், ஆயினும் இந்த வெற்றி நீங்கள் இனிமேல் அடையப் போகிற வெற்றிக்கு வாசற்படிதான் என்று உறுதியாய் நம்புகின்றேன்.

இதன் பிறகு கும்பகோண மிருந்து வந்திருந்த மிஸ்டர் T. S. சுப்பிரமணிய அய்யர் ஐக்கிய முயற்சியின் நோக்கங்களைப் பற்றி பேசினார்.

சில தீர்மானங்கள் செய்யப்பட்ட பின்பு சபா நாயகருக்கு வந்தனம் அளிக்கப்பட்டு கான்பரன்ஸ் கலைந்தது.

---

## The Coimbatore District Agricultural Conference.

## கோயமுத்தூர் ஜில்லா விவசாயக் கூட்டம்.

---

கோயமுத்தூர் ஜில்லாவின் மூன்றாவது வருடத்திய விவசாய கான்பரன்சும் கோயமுத்தூர் விவசாய கலாசாலையின் மூன்றாவது வருஷ பூர்த்திக் கொண்டாட்டமும் கோயமுத்தூர் விவசாய கலாசாலையில் சென்ற ஜூலை மீ 13உ மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சென்னை கவர்ன்மெண்டு நிர்வாக சபையின் முதல் மெம்பராயிருக்கும் ஆனரபில் ஸர் ஹாரல்டு ஸ்டேர்ட் கான்பரன்சிற்குச் சபா நாயகராயிருந்து அடியிற் கண்டபடி பேசினார். விவசாயத்தைப் பற்றி பேசிவரும்போது பாலியர்கள் ஜீவனத்திற்காக இவ்வுலகத்தில் எவ்வளவோ தொழிற்கள் ஏற்பட்டிருக்கின்றன; அந்தஸத்தையும் நிச்சயமான வருமானத்தையும் கொடுக்கக் கூடிய கவர்ன்மெண்டு உத்தியோகங்க ளிருக்கின்றன! ஏராளமான வருமானத்தைக் கொடுக்கக் கூடிய லாயர் தொழிலிருக்கிறது; ஜனங்களுக்கு காருண்யத்துடன் நன்மையைச் செய்யும்படியான வசதியையும் சாவகாசத்தையும் கொடுக்கும்படியான வைத்தியத் தொழிலுமிருக்கிறது. இவ்வளவு தொழில்களுக்குள் விவசாயத்தைப் போல ஜனங்களுக்கு கனத்த நன்மையைச் செய்யக் கூடிய தொழில் எதுவுமில்லை; எவன் ஒருவன் ஒரு நெல் கதிர் அல்லது ஒரு புல் விளைந்து கொண்டு வந்த நிலத்தில் இரண்டு கதிர் விளையும்படியாகச் செய்கின்றானோ அவனே ஜனோபகாரமான காரியத்தைச்செய்தவனாக எண்ணப்படுவான். அவனேதேசத்தின் நன்மைக்காகவும் மானிடர் நன்மைக்காகவும் உழைத்தவனாகின்றான்; ஆகையால் விவசாயத் தொழிலைப்போல முக்கியமானதொழில் எதுவுமில்லை என்று சொன்னார். விவசாய கலாசாலையைப் பற்றி பேசி சாஸ்திர ஆராய்ச்சிக்கு வேண்டிய எல்லா ஆயுதங்களும் இதில் அமைக்கப்பட்டிருக்கின்றனவென்றும் கலாசாலையில் பயில யாதொரு கட்டணமும் கேட்கப்படுகிறதில்லை என்றும், செலவெல்லாம் கூடி புஸ்தகங்கள் வாங்கவேண்டிய ஒரு செலவைத் தவிற வேரே செலவு இவ்விடம் வந்து வாசிப்பதற்கு கிடையாதென்றும் சொன்னார். சாப்பாடுச் செலவு எங்கிருந்தாலும் மாணவர்கள் செய்யக் கடமைப் பட்டிருக்கும் செலவாயிருப்பதால் அதை தாம் ஒரு செலவாக கணக்கு செய்யவில்லை. ஆகவே மாணவர்கள் இவ்விடம் வந்து வாசிக்கவேண்டிய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்.

விவசாயம் இத்தேசத்திற்குப் புராதீனமான தொழிலாயிருப்பதுடன்கூட மிக முக்கியமான தொழிலாயுமிருக்கின்றது. இம்மாகாண ஜனத்தொகையில் 100-க்கு 68 பேர்கள் விவசாயத்தையே ஜீவன ஆதாரமாகக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஜனங்களின் மூலியமாய் அத்தொழிலை ஜீவன ஆதாரமாக எண்ணிக்கொண்டிருக்கும் ஜனங்களையும் சேர்த்து கணக்கு செய்தால் இம்மாகாண ஜனத்தொகையில் 100-க்கு 90 பேர்கள் விவசாயத்தை ஜீவன ஆதாரமாக நம்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் விவசாயம் முக்கியமான தொழில் என்றும் நாம் அதை மிகவும் கவனிக்க வேண்டிய தவசிய மென்றும் சொன்னார். விவசாய

த்தை எவ்வளவு தூரம் விருத்தி செய்து கொண்டு போனுலும் அவ்வளவிற்கு அவ்வளவு இடம் கொடுக்கும். விருத்திக்கு ஒரு எல்லை கிடையாது. ஒற்றை அலகு சாகுபடியை கண்டுபிடித்து கிருஷிகள் அனுஷ்டிக்கும்படி செய்திருப்பதால் அவர்களுக்கு இம்மாகாணத்தில் ஒரு கோடி ரூபாய் ஆதாயப்படுகிறது. இது மட்டிலுமா எறு, விதை முதலிய விஷயங்களில் இன்னும் எவ்வளவோ விருத்தி செய்யப்படலாம். ஆகவே விவசாயத்தில் ஏற ஏற சிகரத்தைக் காணப்போகிறதில்லை என்றனர். ரயத்துகள் சீர்திருத்தத்திற்கு எளிதில் உட்படமாட்டார்கள் என்கிற புகாரை கண்டனம் செய்து பேசி ரயத்துகள் ஒரு நூதன ஏற்பாட்டால் தங்களுக்கு லாபம் உண்டாகிறதென்று அறிந்துகொண்டால் அந்த ஏற்பாட்டை அனுஷ்டிக்க இணங்காமலிருக்கமாட்டார்கள். ஆகையால் லாபம் கிடைக்கும் விதத்தை பிரத்தியக்ஷமாகக் காண்பிக்கவேண்டும். தாமே ஒரு சமயம் ஒரு இருப்பு கரும்பாலையுடன் பிரயாணம்செய்து ஏற்கனவே பிரயோகப் படுத்தப்பட்டு வந்த மரஆலையுடன் பக்கத்தில் வைத்து இரண்டு ஆலைகளையும் வேலை செய்யும்படி செய்தேன். இருப்பு ஆலை அதிகப்படியான வேலை செய்தது. ஆகவே கிருஷிகள் சந்தோஷப்பட்டு அந்த இருப்பு கரும்பாலையை வாங்கத்தலைப்பட்டார்கள். எத்தேசத்திலும் ரயத்துகள் நூதன விதங்களை உடனே அனுஷ்டிக்கிறதில்லை. இங்கிலாண்டில் பண்டைய காலத்தில் ஒரு கலப்பைக்கு 6 குதிரைகள் பூணைத்து அதில் ஒரு வாலிபனும் ஒரு மனிதனும் அமர்ந்து உழுகிற வழக்கமாயிருந்தது. இப்படியிருந்து வரும்போது சில காலத்திற்கு முந்தி ஒரு குடியானவன் ஒரு கலப்பைக்கு இரண்டு குதிரைகளைப் பூணைத்து ஒரு மனிதனுடன் உழும்படி செய்தான். இப்படிச் செய்ததால் 120 பவுன் மீதப்பட்டது. பக்கத்து நிலக்காரனும் மற்றவர்களும் இதேமாதிரி செய்து லாபத்தை அடைய 20 வருஷம் சென்றதென்றல் ரயத்துகள் எத்தேசத்திலும் நூதன ஏற்பாடுகளுக்கு எளிதில் உட்படமாட்டார்கள் என்று எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ என்றனர். ஆகையால் அந்த புகார் சொல்லுகிறவர்களுக்குத் தாம் சொல்லுவது என்னவென்றல் ரயத்துகளுக்கு லாபகரமான விதத்தைப் பிரத்தியக்ஷத்தில் செய்து காண்பிக்க வேண்டுமென்றும் அப்படிச் செய்தால் அவர்களுடைய அறியாமை அவர்களை விட்டு விலகும் என்றும் சொன்னார். விவசாய விலாக்காவின் வேலைகள் மிகவும் விருத்திசெய்யப் படவேண்டுமென்று மேன்மை தாங்கிய கவர்னர் அவர்கள் விரும்பியிருப்பதாக இவ்விடமிருக்கும் எலோருக்கும் அறிவிக்கும்படி தம்மிடம் சொல்லியிருப்பதாகவும், தகுந்த காரணங்களிருக்கும் விஷயத்தில் வேண்டுமான அளவு கவர்ன்மெண்டார் பணம் கொடுக்கத் தயாராயிருக்கிறர்கள் என்றும் சொன்னர்.

விவசாயத்தை விருத்தி செய்ய கவர்ன்மெண்டார் மட்டிலும் உழைத்தால் போதுமானதல்ல ஜனங்களும் அதுவிஷயத்தில் பாடுபட வேண்டும். அதிர்ஷ்டவசமாக இந்த ராஜதானியில் இது விஷயத்தில் கவர்ன்மெண்டாருடன் கூட விருந்து உழைக்கக் கூடிய ஒரு வகுப்பார்களிருக்கிறர்கள். அவர்கள் ஜமீன்தார்கள். ஜமீன்தார்களுக்கு சாஸ்வத தீர்வை கொடுபட்டிருப்பது பல முறை ஆக்ஷேபிக்கப்பட்டிருக்கின்றது. அந்தத் தீர்வையை சர்க்கார் அடையும்படி செய்திருந்தால், தேச நன்மைக்கான அநேக காரியங்களில் செலவு செய்யும்படி கவர்ன்மெண்டாரைத் தூண்டலாம் என்றும் ஜமீன்தார்களை அப்படித் தூண்ட முடியவில்லை என்கிற காரணத்தை முன்னிட்டு சாஸ்வத தீர்வை அவர்களுக்கு கொடுபட்டிருப்பது ஆக்ஷேபிக்கப்பட்டது. அதற்கு தம்முடைய ஜவாப்பு என்னவென்றல் ஜமீன்தார்களுக்கு அனேக சுதந்தரங்களும் கொடுக்கப்பட்

டிருக்கின்றன. அனேக உத்தரவாதங்களையும் உடைத்தா யிருக்கிறார்கள். இவைகளை அவர்கள் உணர்ந்து பல விதங்களில் நடந்துகொண்டிருக்கிறார்கள். என்பதில் சந்தேகமில்லை. ஆனால் விவசாயத்தைப் புறக்கணித்து விட்டார்கள். ஆயினும் விவசாயத்திற்காக பித்தாபுரம் ராஜாவும் சிவகிரி ஜமீன்தாரும் பாடுபட்டு வருகிறார்கள். மற்ற ஜமீன்தார்களும் விவசாயத்தை விருத்தி செய்யும் விஷயத்தில் கவர்ன்மெண்டாருடன் கலந்து உழைப்பார்கள் என்று தாம் நம்புவதாய்ச் சொன்னார். அதிகமாக கலந்து உழைக்காமற் போனபோதிலும் நூதனமாக கண்டுபிடிக்கப் பட்ட மாதிரியாக சாகுபடி செய்து காண்பிப்பார்கள் என்று தாம் நம்புவதாய்ச் சொன்னார்.

"இங்கிலாண்டி லிருக்கும் அனேக பெரிய தனக்காரர்களை நாம் உதாரணமாக வைத்துக் கொண்டு பின்பற்றி நடக்கலாம். பெரிய மந்திரியாகிய வால்போல்" முதலில் தம்முடைய பண்ணை சம்பந்த மாகவரும் கடிதங்களை வாசித்து விட்டுத்தான் பிறகு மற்றகடிதங்களை வாசிப்பார். ராஜ்ஜிய விஷயங்களைக் காட்டிலும் தம்முடைய பண்ணை விவசாய விஷயங்களில் மிக பற்றுடையவராக விருந்தனர். பாலிங் புரோகிற்கு எதேஷ்டமான நிலமிருந்தது. அவரும் விவசாயத்தில் மிகவும் பற்றுடைய வரக விருந்தனர்; மூன்றாவது ஜியார்ஜ் அரசர் கிருஷி அரசர் என்றே வழங்கி வந்தனர். அவர் ஏற்படுத்தின மாதிரிப் பண்ணைகள் பின்பு வந்த அரசர்களால் விருத்திசெய்யப்பட்டு நாளது வரையிலிருந்துவருகின்றன. ஏர்ல் ஆப் லீச்சஸ்டர் பெட்போர்ட் கோமகன்கள், லார்ட் ராக்கிங் ஹாம் லார்ட் வுட்ராப் முதலிய பெரும்பண்ணைச் சொந்தக் காரர்கள் விவசாயத்தில் ஆழ்ந்த பற்றுடைய வர்களாக விருந்தார்கள்! இந்த ராஜதானியிலுள்ள நிலசுவான்தார்களும் அவர்களைப்பின்பற்றி நடப்பார்கள் என்று தாம் நம்புவதாய்ச் சொன்னார். இரண்டாம்நாள் கூடின கூட்டத்தில் திவான்பகதூர் L. D. சாமிக்கண்ணுப்பிள்ளை நிலசுவான் தாருக்கும் குடிகளுக்குமுள்ள சம்பந்தத்தை எப்படி விருத்தி செய்யலாம் என்னு விஷயத்தைக் குறித்துப் பேசினார். ஐக்கியமுயற்சி மூலியமாக இருதரத்தாரும் பரஸ்பர நன்மையையும் உபகாரத்தையும் அடையலாம். ஐக்கிய முயற்சி என்றால் ஒருவருடன் ஒருவர் அனுதாபம் காட்டி பழகுதல் என்று சாதாரணமாய் எண்ணப் படுகிறது. ஐக்கியநாணய சங்கமுயற்சியின் ஜெயம் அல்லது தோல்வி அதன் பயனைக் கொண்டு நிர்ணயிக்கப் படுகிறதே யொழிய ஒருவருக்கொருவர் அனுதாபம் காட்டுவதல்ல; ஐக்கிய முயற்சியில் ஒரு நிலசுவான் தாரருக்கும் குடிகளுக்கும் நன்மை பரஸ்பரம் உண்டாயிருக்க வேண்டும். நிலசுவான் தார்களும் குடிகளும் ஐக்கிய முயற்சி மூலியமாக பரஸ்பரநன்மை அடைவதற்கு இரண்டு உபாயங்கள் இருக்கின்றன. ஒன்று என்னவென்றால் நிலம் உள்ள கிராமத்திலேயே வசிக்கும் நிலசுவான்தார் தம்முடைய குடிகளுடன் சேர்ந்து ஐக்கிய முயற்சி சங்கம் ஏற்படுத்தி இருதரத்தாரும் அதில் அங்கத்தின ராயிருந்து பரஸ்பர நன்மையை அடையலாம். இந்தக் காரியத்திற்கு நிலசுவான்தார் நிலமுள்ள கிராமத்திலேயே யிருக்கவேண்டியது மிகவும் அவசியம். கிராமத்திலேயே வாசமாயிருக்காத நிலசுவான்தார் ஐக்கிய சங்கத்தில் மெம்பராயிருப்பதில் பிரயோஜனமில்லை. அவர் யாதொரு நன்மையையும் குடிகளுக்குச் செய்ய முடியாது. ஜாயின்ட்ஸ்டாக் கம்பேனியைச் சேர்ந்த மெம்பர்கள் இவ்வுலகத்தில் எந்த விடத்திலிருந்தாலும் பாதகமில்லை. ஆனால் ஐக்கிய சங்கத்தின் மெம்பர்கள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளிருந்தே தீரவேண்டும். நிலமிருக்கும் கிராமங்களில் வசிக்காத நிலசுவான்தார்களும் குடிகளுக்கு உதவி செய்யக் கூடும். எப்படி என்றால் குடிகளால் உற்பத்தி

செய்யப்பட்ட ஐக்கிய சங்கங்களில் பணம் வட்டிக்குப் போடலாம். அதற்கு நிலசுவான்தார் மெம்பராயிருக்க வேண்டுமென்ப தவசியமல்ல; ஒரு சங்க மிருக்குமிடத்திற்கு அப்பாலிருப்பவர்களும் சமீபத்திலுள்ளவர்களும் அதில் பணம்போட சட்டமிடம் கொடுக்கிறது. ஒரு சங்கம் ஆரம்பத்திலிருக்கும்போது அதில் நம்பிக்கை வைத்து பணம் போட ஜனங்கள் இணங்கமாட்டார்கள். பங்குகளின் பணம் எவ்வளவு சேர்ந்ததோ அதையே மூலதனமாக வைத்துக்கொண்டு நடத்தப்பட்டுவரும் சங்கங்களு முண்டு. இவ்வகைச் சங்கங்களுக்கு டிபாசிட்டுகள் மூலியமாக பணம் அகப்படும். சொற்ப மூலதனம் அல்லது மூலதனம் இல்லாமலே ஆரம்பிக்கப்படும் நம் ராஜதானியிலிருக்கும் ஐக்கியநாணய சங்கஙகளைப்போலொத்த சங்கங்கள் வேலைசெய்ய வேண்டியதற்கு, வேண்டிய பணம், அடைவதற்கு சட்டம் அல்லது அவைகளின் சினேகிதர்களால் உதவி செய்யப்பட வேண்டும். சட்டம் தன்னுடைய கடமையைச் செய்து விட்டது. பொறுப்பு வரையறுக்கப்படாத சங்கங்கள் உற்பத்தி செய்து எல்லோரும் சேர்ந்து கடன் வங்கலாம் என்றும் சட்டம் ஆக்கியாபிக்கின்றது. பொறுப்பு வரையறுக்கப்படாத ஐக்கிய சங்கங்கள் இப்போது சென்டிரல் பாங்கியிலிருந்தாவது அல்லது ஜில்லா பாங்கிகளிலிருந்தாவது தற்காலம்கடன் வாங்கிக் கொள்ளுகின்றன. இவைகள் இந்த சங்கங்களுக்கு கடன் கொடுத்து உதவி வருகின்றபடியால் அவைகளின் சோதனைக்கும் மேல் விசாரணைக்கும் உட்பட்டிருக்கின்றன. இச்சங்கங்கள் நஷ்டம் வரக்கூடிய தொழிற்களைச் செய்யக்கூடாது என்றும் கவனித்து கண்டிக்கின்றன. மெம்பர்களுக்கு கடன் கொடுக்கிறதும் கடன் கொடுப்பதற்காக கடன் வாங்கும் ஒரு ஐக்கிய சங்கத்தில் பெரும்பாலும் நஷ்டம் ஏற்பட மாட்டாது. நஷ்டம் ஏற்பட்டாலும் கடன் கொடுத்தவர்களுக்கு பாதகம் உண்டாக மாட்டாது. ஏனெனில் ஒவ்வொருசங்கத்திலும் ரிசர்வ் (Reserve Fund) நிதி என்று சொல்லும்படியான பிரத்தியேக நிதி வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் வரையறுக்கப்படாத பொறுப்புடன் எல்லா மெம்பர்களும் சேர்ந்து கடன் வாங்குகிறார்கள். ஐக்கிய சங்கம் மெம்பர்கள் விவசாயிகளாக விருக்கும் போது கடன்வாங்குவதும் கொடுப்பதும் மட்டிலும் செய்தால் போதுமான தல்ல; ஒவ்வொருவனும் தனித்தனியே விவசாயத்திற்காக வாங்கும் சாமான் ஆயுதங்களை எல்லோரும் சேர்ந்துவாங்கி நூதனமுறையாக விவசாயம் செய்யவேண்டிய எல்லாக் கருவிகளும் ஒவ்வொரு மெம்பரிடமு மிருக்கும்படியாகச் செய்யவேண்டும். அப்பேர்ப்பட்ட சங்கங்களுக்கு Distributive (விபாகிக்கும்) அல்லது (Productive) பயனைக் கொடுக்கக் கூடிய சங்கங்கள் என்று பெயர். இந்த சங்கங்கள் வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிபந்தனையுடன் ஸ்தாபிக்கப்பட்டு நடத்தப்பட வேண்டும். ஏனெனில் மிகுந்த ஜாக்கிறதையுடன் இந்த சங்கங்கள் நடத்தப்பட்டபோதிலும் நஷ்டம் வரக்கூடும். அதே காரணத்திற்காக சங்கத்தில் வெகு தூரத்தில் இருப்பவர்கள் பணம் போடமாட்டார்கள். இப்பேர்ப்பட்ட சந்தர்ப்ப முடைய சங்கத்திற்கு கிராமத்தில் வசிக்காத நிலசுவான்தார்கள் பணம் கொடுத்து உதவலாம். மெம்பர்களாயிருக்கும் குடிகளுடைய யோக்கியதைஅந்தஸ்துகள் எல்லாம் நில சுவான்தாருக்கு நன்றாய்த் தெரியும். அப்படிச் செய்வதால் நில சுவான்தாருக்கு வட்டி லாபம் கிடைப்பது மன்றி குடிகள் பணத்தை கடன் வாங்கி விருத்தி செய்வதால் உண்டான பலனையும் அடைவார்கள். நில சுவான்தார்கள் அதிகமாய் பணத்தை செலவு செய்து நிலத்தை விருத்திசெய்ய சம்மதிக்கமாட்டார்கள். ஆதலால் ஐக்கிய சங்கங்கள் மூலியமாக குடிகளுக்குப்பணம் கடன் கொடுத்து விருத்தி செய்யும்படி செய்வது நலம்.

ஆனால் நிலசுவான்தார்கள் வருஷவாரி நிலத்திலிருந்து வரும் லாபத்தின் ஒரு பாகத்தை குடிகளுக்கு கொடுத்து ஆதரிப்பது கிரமமாகும். நிலத்தை விருத்தி செய்யக் கூடிய புத்தி கூர்மை யுடைய குடிகளுக்கு நிலசுவான்தார்களுக்கு சாஸ்வத குத்தகையாவது அல்லது நீண்ட காலகுத்தகையாவது விடவேண்டும். நிலத்தை விருத்திசெய்ய விருப்பமுடைய குடிகளுக்கு சொற்ப காலத்திற்கு அல்லது வருஷவாரி புதிப்பிக்கப் படும்படியான குத்தகை விடுவது இருதரப்பாருக்கும் நன்மையைக் கொடுக்கமாட்டா தென்று சொல்லி முடித்தனர்.

மதுரையிலிருந்து வந்திருந்த மிஸ்டர் K. இராமசாமி அய்யர் "விவசாயத்தில் கூட்டு முயற்சி" என்கிற விஷயத்தைக் குறித்து ஒரு வியாசம் வாசித்தனர். அதில் விவசாய இலாக்காவும் கூட்டுமுயற்சி இலாக்காவும் கவர்ன்மெண்டாரால் ஒரே சமயத்தில் உற்பத்தி செய்ப்பட்டன என்றும் இரண்டு இலாக்காவும் தனி தனியே இதுவரையில் வேலை செய்துகொண்டு வந்த அனுபோகத்தை கவனிக்கின், இரண்டும் ஒன்றுய்ச் சேர்ந்து வேலை பார்த்தாலொழிய யாதொரு நன்மையும் உண்டாக மாட்டா தென்று ஜனங்கள் உணரும்படியான காலம் வந்துவிட்டதென்று சொன்னார். விவசாய இலாக்காகாரர்கள் விவசாயம் செய்ய நூதனமானவும் லாபகரமானவுமான வழிகளைக் கண்டு பிடித்துக் காண்பிக்கிறார்கள், விருத்தி செய்யப்பட்ட ஆயுதங்களையும் காண்பிக்கிறார்கள்; பயிரை அழிக்கும் பூச்சிகளை நாசம் செய்ய உபாயங்களையும் எடுத்து போதிக்கிறார்கள், இவைகள் விஷயமாக கனத்த செலவு செய்து துண்டு பத்திரிகைகள் அச்சடித்துப் பயிரங்கப் படுத்துகிறார்கள். ஆனால் இவைகள் எல்லாம் ரயித்து சம்பந்தப்பட்ட வரையில் செவிடன் காதில் சங்கு ஊதினதுபோ லிருக்கின்றன. இந்த ஹிதோப தேசங்களும் பிரயத்தனங்களும் ஐக்கிய முயற்சி சங்கங்கள் மூலியமாய் செய்யப் பட்டால் நன்மையைப் பயக்கும் என்றும், ஆகையால் மேலே சொல்லப்பட்ட இரண்டு இலாக்காக்களும் சேர்ந்து உழைத்து பொது ஜனங்களும் அதிலும் படிப்படைந்தவர்களும் அவைகளில் கலந்து உடந்தையகாவிருந்து உழைத்தால் விவசாயிகளின் அடுத்த 50 வருஷ சரித்திரம் மிகவும் சந்தோஷப் படும்படியான விருத்தியாம்சத்தை நிச்சயமாய் அடக்கிக் கொண்டிருப்பதில் சந்தேகமிருக்க மாட்டாதென்று சொன்னார்.

விவசாயத்தில் பிரயோகிக்கப்படும் எரு, விரை, யந்திரங்கள், முதலிய பொருள்களையும் சேர்ந்து வாங்கினால் அவைகளை நயமான விலைகளுக்கு வாங்கலாம் இரண்டொரு சங்கங்கள் தற்காலம் விரைகளைவாங்கி வருகின்றன. லாபகரமாயிருக்கிற தென்றே அவைகள் தெறிந்து கொண்டிருகின்றன. மாசூல்களைகிரையம் செய்வதும் ஐக்கிய சங்கங்கள் மூலியமாகச் செய்யலாம். சாமானிய கிருஷிகளின் மாசூல் தகுந்தவிலைக்கு விற்கப்படுகிறதில்லை. இவர்கள் ஐக்கிய நாணயசங்கத்தில் மாசூலை அடமானம் வைத்து முடையை அடக்கிக்கொண்ட பிறகு கிரையம் செய்தால் நல்ல விலைக்கு விற்பனை செய்யக்கூடும். நெல் விளையும்படியான ஸ்தலத்தில் இப்போது ஒழுங்காய் நடைபெற்று வரும் இரண்டு சங்கங்க ளிருக்கின்றன. இவைகள் மதுரை ஜில்லாவிலிருக்கும் ஒரு பெரிய ஆலைச் சொந்தக்காரருடைய கவனத்தைப்பற்றி யிருக்கின்றன. அந்த ஸ்தலத்தில் விளையும் நெல்லை அடியோடு வாங்குவதற்கு இருதரப்பாருக்கும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன என்று சொன்னார். விளைபொருள்களை ஜனங்கள் சாப்பிடக்கூடிய சாமான்களாய் மாற்றிவிற்பதிலும் நன்மையிருக்கின்றன. அதாவது கரும்பைக் கொண்டு சர்க்கரை அல்லது பனவெல்லம், செய்யலாம், நெல்லை அரிசியாக்கலாம்; அரிசியை மாவாகச்

செய்யலாம்; பாலை வெண்ணெயாகவும் நெய்யாகவும் மாற்றலாம்; இவைகளை எல்லாம் ஐக்கிய சங்கங்கள் மூலியமாகச் செய்து லாபத்தை அடையலாம். ஆனால் நம் ஜில்லாக்களில் கூட்டுமுயற்சி ஏற்பாடு இப்போதிருக்கும் நிலைமையில், நாம் இந்த முயற்சிகளில் எல்லாம் ... இறங்கக் கூடாதென்றும் சொன்னார். இப்பேற்பட்ட காரியங்களை ஜனங்கள் இஷ்டப்பட்டு செய்ய முதலில் எண்ணமுண்டாகவேணும். பிறகுதான் அவ்வகைப் பிரயத்தனங்களைச் செய்யவேண்டும் என்றார்.

அனேக கிராமங்களில் கைவேலையைச் சுருக்கும்படியான யந்திரங்களை சிலர் கொள்ளலாம் (Betel vines) வெற்றிலை விசேஷமாக பயிராகும் விடங்களில் எண்ணை இன்ஜின்கள் மூலியமாக ஜலம் இறைத்தால் செலவு கம்மியாய்ப் போய்விடுகிறதென்றும் தமக்கும் தெரியுமென்றும் மாவரைக்கும் ஆலைகள், எண்ணை ஆலை, உமி எடுக்கும் யந்திரம் கரும்பாலை—இவைகள் பொதுவாக வைத்துக்கொள்ளப்படலாம் என்று இவைகளும் ஐக்கிய நாணய சங்கங்கள் மூலியமாகச் செய்யப்படலாம் என்றும் சொன்னார். “விவசாய இன்சூரன்ஸ்” செய்வது இங்கிலாண்டு முதலிய மேல்நாடுகளில் லாபகரமாயிருக்கிறதென்று கேள்விப்பட்டபோதிலும் அது விஷயமாய் இவ்விடத்தில் யாதொன்றும் தெரியவில்லை என்றும் அதேமாதிரி ஏற்பாடு இவ்விடத்தில் செய்ய வெகு நாட்கள் செல்லும் என்றும் கால்நடை 'இன்சூரன்ஸ் சங்கங்கள் மட்டிலும் பரிக்ஷார்த்தமாக பர்மாவில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன வென்றும் உயர்ந்த மாதிரியான மாடுகளை சிலர் சேர்ந்து வாங்கி பொதுவாய் வைத்துக்கொள்வது அவசியமாக விருப்பதால் ஐக்கிய சங்கம் மூலியமாகச் செய்யலாம் என்றும் சொன்னார். ஆனால் இப்பேர்ப்பட்ட முயற்சிகளில் நம் ஜனங்கள் இறங்குவதற்கு முந்தி அவர்கள் தொழில் நடத்த பரிபக்குவமுடையவர்களாக வேண்டுமென்று சொல்லி முடித்தார்.

## Co-operative Dairy Society.

### வெண்ணெய்ப்பண்ணை ஐக்கிய சங்கங்கள்.

பட்டண வாசங்களிலும் வெளியூர்களிலும் பால், வெண்ணெய், நெய் முதலிய வஸ்துக்கள் மிக கிராக்கியாய் விற்கின்றன வென்றும் அப்படி கிராக்கியான விலை கொடுத்து வாங்கின போதிலும் கலப்படமாயிருக்கின்றன வென்றும் ஆகையால் ஐக்கிய முயற்சி மூலியமாக வெண்ணெய் வியாபாரம் நடத்தலாம் என்று திருவண்ணாமலை ஐக்கிய முயற்சி சங்கத்தைச் சேர்ந்த மிஸ்டர் எஸ். சேஷாசலய்யர் இங்கரி விருக்கும் ஒரு பத்திரிகையில் பிரரேபணை செய்து அடியிற்கண்டபடி 10 எருமைகள் 10 பசுக்கள் அடங்கிய ஒரு வெண்ணெய்ப் பண்ணைக்கு வரவு செலவு திட்டம் போட்டு பயிரங்கப் படுத்தி யிருக்கின்றனர்:—

மூலதனம்.

| | | | |
|---|---|---|---|
| ரூ. 60 பொருமான முள்ள 10 எருமை மாடுகளின் கிரயம் | ரூ. 600 | 0 | 0 |
| ரூ. 100 10 பசுமாடுகள் | ரூ. 1000 | 0 | 0 |
| வேலை செய்ய முதல் | ரூ. 400 | 0 | 0 |
| மொத்தம். | 2000 | 0 | 0 |

மாதவருமானம்:—

மாதமொன்றுக்கு 4 படி வீதம் 40 படி பால் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 4 அணு வீதம் தினம் 20 படி விற்பனைக்கு கூடுதல் ரூ. | 5 | 0 | 0 |
| 60 படி பால் $4\frac{1}{2}$ வீசை நெய்யும், 60 படிதயிரும் கிடைக்கும். | | | |
| வீசை ஒன்றுக்கு ரூ. 1-8-0 வீதம் $4\frac{1}{2}$ வீசைக்கு | 6 | 12 | 0 |
| 60-படி தயிர் | 10 | 0 | 0 |
| தினப்படி கிடைக்கக் கூடியது | 21 | 12 | 0 |
| மாதம் ஒன்றுக்கு வருமானம் ரூ. | 622 | 8 | 0 |
| 20-மாடுகளுக்கு, எரு வண்டி 1-க்கு $7\frac{1}{2}$-வண்டிகளுக்கு | 7 | 8 | 0 |
| மொத்த வருமானம் | 630 | 0 | 0 |

சிலவு.

| | | | |
|---|---|---|---|
| மாடு ஒன்றுக்கு 8-அணு வீதம் 20-மாடுகளுக்கு தீனி | 300 | 0 | 0 |
| சம்பளம் ரூ. 12-ல் ஒரு பால்கறக்கிறவன் ரூ. 8-சம்பளத்தில் மாடு மேய்க்கிறவன், ரூ. 12-ல் ஒரு கிளார்க், தலைக்கு ரூ. 4 சம்பளத்தில் 2-பியூன்கள் | 40 | 0 | 0 |
| வாடகை | 20 | 0 | 0 |
| வட்டி | 20 | 0 | 0 |
| இன்சூரன்ஸ் சார்ஜ்கள் | 16 | 0 | 0 |
| விளக்கு முதலிய சில்லரைச் செலவுகள் | 10 | 0 | 0 |
| கால்நடை வைத்தியச் செலவு | 20 | 0 | 0 |
| | 426 | 0 | 0 |
| மாதத்தில் அசல் லாபம் ரூ. | 204 | 0 | 0 |

அதாவது 100-க்கு 20-லாபம் தேறுகிறது.

கற்பமா யிருக்கு மாதங்களில் நேரிடக் கூடிய நஷ்டம் பலமான ஆகாரம் கொடுப்பதால் ஈடுபடுத்தப் படக்கூடும்.

170 பக்கம்

# இனம் புத்தகம்.

நல்ல ஆரோக்கியமும் நீடித்த சுக வாழ்வும் இயற்கையுள்ள சில விதிகளை அனுசரிப்பதைப் பொறுத்துமிருக்கிறது. இச்சிறந்த புத்தகம் சுகவழியைக் காட்டி நல்ல ஆரோக்கியத்துடனும் எப்பொழுதும் திடகாத்திரமாயும் நீண்ட ஆயுளோடு யிருக்கும்படியும் செய்து நல்ல அதிர்ஷ்டத்தைக் காட்டும்.

இப்புத்தகம் இனமாகவும் தபாற் செலவில் லாமலும் அனுப்பப்படும்.

இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி

**மணிசங்கர் கோவிந்தஜி,**

ஆதங்க நிக்ரஹ ஒளஷதாலயம்,

22, பிராட்வே மதராஸ்.

ஏஜெண்டு.

M. A. செல்லையப்ப முதலியார்,

38, சின்னகடைத் தெருவு

திருச்சினப்பள்ளி.

ஸ்ரீ :

இப்பரதகண்டத்தில் கல்கத்தா, பம்பாய், காசி முதலிய நகரங்களில் நடந்த வெகு சிறந்த பொருட்காட்சி சாலைகளில் தங்க மெடல்களையும், முதல்தரமான யோக்யதாபத்திரங்களையும், ஸ்ரீஸ்ரீஸ்ரீ கத்தவால் மஹாராணியிட மிருந்து மஹாமாரிநிவாரக ஔஷதங்களுக்காக தங்க மெடலையும் பெற்ற

ஆயுர்வேத மார்த்தாண்ட, பிஷங்மணி,

**பண்டித டி. கோபாலாசாரியர். எ. வி. எஸ்.,**

அவர்களால் சாஸ்திரோக்தமாய் தயார் செய்யப்பட்ட

# ஆயுர்வேத ஔஷதங்கள்.

"**அமிருதாமலக தைலம்**".—தோலுக்கும் மூளைக்கும் நல்ல வலுவையும், கண்களுக்குக் குளிர்ச்சியையும், மயிர்களுக்கு செழிப்பையும், மிருதுத்தன்மையையும் காந்தியையும் உண்டுபண்ணுவதான அப்யஞ்ஜனதைலம். இது தலைவலி, எரிச்சல், ஒற்றைத்தலைவலி முதலியவற்றையும், கண்களில் நீர் பெருகுவதையும், பிளிச்சைச் சார்வதையும்; சரீரதாபம் முதலிய துர்க்குணங்கள் அனைத்தையும் போக்கும். மாணாக்கருக்கும், புத்தியை அதிகம் உபயோகித்து வேலைசெய்யும் ஒவ்வொருவருக்கும் இது எப்பொழுதும் கையில் இருக்கத்தக்கது. வீஸா 1-க்கு விலை அணா 12.

"**ஜீவாமிருதம்**".—பலயீனத்தைப் போக்கி, வியாதிகளை வரவொட்டாமற் செய்வதற்கு வெகு பெயர்போன மருந்து. இதில் இலேசாய் அயம் சேர்ந்திருப்பதுபற்றி இரத்தவிருத்திசெய்து பலத்தையுண்டாக்கி சோர்வைப்போக்கி, சரீரஸௌக்கியத்தை யதா ஸ்திதிக்குக் கொண்டுவருவதில் நிகரில்லாதது.

விலை வீஸா ஒன்றுக்கு ரூ. 3.

"**ஜம்பீரரஸாயனம்**".—பித்தத்தைப்போக்க சிறந்தது. வாயில் நீர் அதிகம் சுரப்பது, மார்வலி, மார் எரிச்சல், வயிற்றுவேதனை வாந்தி முதலிய பித்தவிகாரங்களுக்கு மிகவும் உயர்ந்த மருந்து. பித்தத்தினலுண்டாகும் அஜீர்ணம், கர்ப்பிணிகளுக்கு நேரிடும் பித்தவிகாரம் இவைகளுக்கு மிகவும் குணம் செய்யும்

புட்டி 1-க்கு விலை அணா 8.

"**அசோகவடி**".—ஸ்த்ரீகளுக்கு நேரிடும் பலவித துரவஸ்த்தைகளைத் துலைப்பதற்கு இது வெகு சிறந்த மருந்து. ருதுஸம்பந்தமான வலிகளையும், மற்றும் பெண்களின் பிணிகளையும், இரஜஸ் (தீட்டு), கர்ப்பாசயம் இவை பலவகையான காரணங்களால் கெட்டுப்போவதால் ஏற்படும் எல்லாவியாதிகளையும் அடியோடு அகற்றும். வியாதி நிவாரணமான பின்பு கர்ப்போத்பத்தியும், ஸுகபிரஸவமும் இவ்வௌஷதத்தை உபயோகிப்பதால் நேரிடும். வீஸா 1-க்கு விலை அணா 12.

எமது காலரா ஔஷதங்கள் அனேக முனிசிபல் உத்யோகஸ்தர்களால் புகழப்பட்டிருக்கிறது.

அனேக இராஜதானிகளில் காலராவுக்காக உபயோகப்படுத்தி வரும் ஔஷதங்களில் மிக சிறந்ததாக சொல்லப்படுகிறது எங்கள் மருந்துகளே! எங்கள் மருந்துகளை உபயோகிக்கும் இடங்களில் இந்த காலராவின் பயமே இராது என்று நாங்கள் உறுதியாக சொல்லக்கூடும். அனேகர் இம்மருந்துகளை உபயோகப்படுத்தி அவைகளினுடைய உயர்ந்த அனுகூல குணங்களை அறிந்திருக்கிறார்கள். இம்மருந்துகளை, சிறு குழந்தைகள், பெரியோர்கள், கர்ப்பிணிகள் முதலியவர்கள் சாப்பிடலாம்.

இதர காலரா மருந்துகளைப்போல் மூத்திரத்தைக் கட்டும் கெட்டகுணங்கள் இவைகளுக்கு இல்லை.

| | | |
|---|---|---|
| கற்பூராத்யரிஷ்டம் | 0—8—0 | 0—12—0 |
| விஷ-முசிசஞ்சீவனி 12 மாத்திரைள் அடங்கிய புட்டி | 0—4—0 | |

மேல் விலாசம் :—

ஆயுர்வேதமார்த்தாண்ட, பிஷங்மணி,

**பண்டித டி. கோபாலாசாரியர், எ. வி. எஸ்.,**

ஆயுர்வேதாச்ரமம்,

55, ஆசாரப்பன் தெருவு, ஜார்ஜ்டவுன், சென்னை.

டெலிகிராப் அட்ரஸ் "பண்டிட்" மதராஸ்.

# பட்டு பீதாம்பர கம்பெனி காசி.

## திருப்தி யில்லாதவைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

பட்டு பீதாம்பர காட்லாக்கு இனமாக அனுப்பப்படும்.

### உருத்திராக்ஷங்கள்! ஜபமாலைகள்!!

பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6 அணு முதல் ரூ. 12 வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6 முகக் கண்டிகள் 33 உள்ளது கண்டி 1-க்கு ரூ. 1 முதல் 10 வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது கண்டி 1-க்கு அணு 10 முதல் ரூபா 10 வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் பெரிதாக இருக்கும்.

### பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்த உறுதியும், நைசும், நேர்த்தியான கம்பளிப் போர்வைகள், 6 முழம் நீளம் 3 முழம் அகலம் சொப்பு முதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூபா 5 மேற்படி சிறிசு 1-க்கு 4-8-0 மேகவர்ண போர்வை 1-க்கு 6-8 தபால் செலவு பிரத்தியேகம்.

### காசி வயிரவர் கயிறு.

| | | |
|---|---|---|
| முதல் நெம்பர் 100-க்கு | ... | 3—0—0 |
| 2-வது நெம்பர் 100-க்கு | ... | 2—8—0 |
| 3-வது ,, 100-க்கு | ... | 2—0—0 |
| 4-வது நெம்பர் 100-க்கு | ... | 0—6—0 |

### வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள், கோயமுத்தூர் வேஷ்டிகள் மாதிரி சன்னகம்பி, ருத்திராக்ஷ கம்பி, ஜரிகை கம்பி, போட்டவை.

| முழம் | அகலம் | ரூ. | முதல் | ரூ. |
|---|---|---|---|---|
| 4 | 2 | 4½ | ,, | 7 |
| 6 | 2½ | 7 | ,, | 9 |
| 6 | 3 | 10 | ,, | 12 |
| 7 | 2½ | 8 | ,, | 12 |
| 7 | 3 | 10 | ,, | 14 |
| 8 | 3 | 12 | ,, | 18 |
| 9 | 3 | 14 | ,, | 20 |
| 10 | 3 | 15 | ,, | 22 |

### குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக் கூடிய பித்தளை வெங்கலத்தால் செய்த செம்பு, குடம், கரண்டி முதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறு செட்டு 1-க்கு ரூபா 2.

பெரிய செட்டு 1-க்கு ரூபா 4.

நல்ல பெருங்காயம் தோலா 10-க்கு ரூ. 1-0-0 உடனே எழுதுங்கள்.

விலாசம்:—மானேஜர்

## பட்டு பீதாம்பர கம்பெனி.

தாராநகர் தெரு, காசி

**Silk Pitamber Co., Benares City.**

# துண்டுக்குச்சரியான காலத்தைக் காட்டக்கூடிய

## பேர்போன செண்ட்தாமஸ் கிளாக் (மிக உறுதியுள்ளது.)



ஆபீஸ் கிளாக் எட்டு நாளைக்கு ஒருதடவை சாவி கொடுக்கக்கூடியதும் சரியான காலத்தை காட்டக் கூடிய 12 டயல் கெடிகாரம் விலை ரூ. 16-0-0.

பட்டன், அலாரம், அல்லது தேதிகாட்டக்கூடிய தாயிருந்தால் ஒரு ரூபாய் அதிகம். 10" டயல் கெடி காரம் விலை ரூ. 15-8-0

## நேர்த்தியான சர்க்யூட்கட்டில் "யாங்க்கி."

உங்களுக்கு அவசிய மாக வேண்டுவது இதுதான்.



அஸ்மானகிரியல்லாதது. 6 அடி-6 அங்குலம் நீளம்; 2 அடி-4 அங்குல அகலம் தரை மட்டம் 6 அடி 6 அங்குலம் மடித்தால்; 35 அங்குல நீளம் 7 அங்குலம் அகலம் 5 அங்குல கனமாயிருக்கும், 1000 ராத்தல் பாரத்தை தாங்கும். 15 ராத்தல்தான் இடையுள்ளது. அமெரிக்கா தேசத்தில் பொறுக்கி எடுக்கப்பட்ட கெட்டிமரத்தால் செய்யப்பட்டது. இருப்பு பாகங்கள் முழுதிலும் ஜப்பான் செய்யப்பட்டிருக்கின்றன. மாம்பழ வர்ணமுடைய தொய்வு கொடுக்காத கான்வாஸ் துணிபோடப்பட்டிருக்கிறது; நீங்கள் விட்டு பிரியக்கூடாத சிநேகிதன்; விலை கட்டில் மாத்திரம் ரூ. 11-4-0 கொசுவலையுடன் ரூ 13-8-0. ராப்த்தாவுடன் கூடியது ரூ. 20. சர்க்கியூட்சாமான் ஜாப்பிதாவுக்கு எழுதுங்கள். இனமாய் அனுப்பப்படும்.



கைக்கெடியாரங்களில் இது ஒரு புதிய தினுசு. அலைச்சல் திரிச்சலால் கெட்டுபோகக்கூடாத கெட்டி லிவர்வாட்ச் மேல்மூடி போடப்படாதது; சாவியில்லை நிக்கலால் செய்யப்பட்ட மூடி உடையது; தூசி உட்செல்லாமல தடுக்கக்கூடிய மூடி உடையது; ஒரு வருஷ காரன்டி.

விலை தபால் சார்ஜ்உள்பட ரூ. 10.

## காதர் அண்டு யூஸப் பிரதர்ஸ்,

கடியார வர்த்தகர்கள், கவர்மெண்டு ஸப்ளையர்கள்,

## பி. எல். சென்னை, E. C.